உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வேதாந்தசித்தாந்தப் பிரசாரணர் ஆகிய

துறைமங்கலம்,

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

பிரபுலிங்கலீலை.

இது

ஆரணிநகர சமஸ்தான வித்துவானும்
அத்துவிதசித்தாந்தமதோத்தாரணரும்
மதுரை நான்காஞ்சங்கப்புலவரும் ஆகிய

யாழ்ப்பாணம்,

நா-கதிரைவேற்பிள்ளையவர்கள்

எழுதிய

குறிப்புரையுடன்,

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1929.

ரிஜிஸ்டர்காபிரைட்.]

[இதன் விலை ரூ—1.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கதியினட்டவணை.

பக்கம்.	ஆவது.	கதியின்பெயர்.	பாட்டுத் தொகை
3		கணபதிகாப்பு	1
3	1	துதிகதி	21
8	2	கைலாசகதி	61
18	3	மாயையினுற்பத்திகதி	74
30	4	மாயையூசைகதி	59
38	5	பிரபுதேவர்வந்தகதி	91
51	6	விமலகதி	50
58	7	மாயைகோல்காலகதி	80
69	8	வசவண்ணர்வந்தகதி	45
75	9	அக்கமாதேவியுற்பத்திகதி	51
83	10	அக்கமாதேவிதுறவுகதி	58
91	11	கொக்கிதேவர்கதி	30
96	12	முத்தாயியம்மைகதி	27
100	13	சித்தராமையர்கதி	76
110	14	வசவண்ணர்கதி	48
117	15	மருளசங்கரதேவர்கதி	24
121	16	இட்டலிங்ககதி	43
127	17	கதலிவனகதி	20
130	18	சாதகாங்ககதி	25
134	19	கோரக்கர்கதி	63
143	20	முனிவரர்கதி	23
147	21	சூனியசிங்காதனகதி	15
150	22	சூனியசிங்காதனத்திலிருந்தகதி	62
159	23	ஆரோகணகதி	64
168	24	மலைலயகதி	21
171	25	மாண்மியகதி	27

ஆக உரு - கதிக்கு திருவிருத்தங்கள் - ககடுக.

P. 38

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

* பிரபுலிங்கலீலை.

கணபதி காப்பு.

சுரகு லாதிபன் றாய்மலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளுந் தலைக்கணி யாக்குவாம். 1

முதலாவது

து தி க தி.

சிவபெருமான்.

பூவாய்நெடுங்கோட்டுறுபசுந்தேன் கைகான்முடங்குபொறியிலித
னுவாயொழுகிற்றெனவுலக மளந்தமாலுநான்முகனுங்
காவாயெனநின்றேத்தெடுப்பத † தானேயுவந்தெங்கரதலத்தின்
மேவாவமர்ந்தமாமணியைத் தொழுதுவினைக்குவிடைகொடுப்பாம்.

---

* பிரபு:—எல்லாமாய் அல்லவுமாய் இருக்குந்தன்மை.
லிங்கம்:—ஆன்மா. லீலை:—திருவிளையாடல்.
† தானேவந்தெங்கரதலத்தில் எனவும் பாடம்.

உமாதேவியார்.

ஆதிபகவன்றனதூட றணிப்பான்பணியவவ்விறைவன்
பாதமிறைஞ்சுமதற்குநெற்றிப் பகையுமல்குற்பகையுமாஞ்
சீதமதியுமரவம்விழுஞ் செயற்குமுவகைசெயாமலலே
மாதுபணியுமதற்குமன மகிழுமுமையையணங்குவாம். 2

விநாயகர்.

* மாரனெடுத்தவலேக்குமொரு கரும்பையொடித்தமலர்சிதறி
நாரியடித்தவளிமாலே குலையத்தரந்தநயந்தோடி
வீரமனத்தவினேப்பாகர் குறிப்பிலெழுகிவிளையாடு
மீரமதிச்செஞ்சடைக்களிநல் யானையிணைத்தாளேத்துவாம். 3

சுப்பிரமணியர்.

பாகமொருபெண்குடியிருக்கும் பரமனணியிற்பரித்தமணி
நாகநுழைவுற்றுடல்சுருண்டு கிடந்தநகுவெண்டலைப்புழையிற்
போகமெல்லத்தலைநீட்டிப் பார்த்துவாங்கப்போகுமொரு
தோகைமயில்வாகனப்பெருமா டுணைத்தாட்கமலந்தொழுதிடுவாம். 4

அல்லமாப்பிரபுதேவர்.

† கலையைமதிக்கும்புலவர்தமைச் ‡ சித்தர்குழாத்தைக்கடவுளரை
நிலையைமதிக்கு $ முனிவரைத் திசைமாமுகனைநிரைவளையாச்
சிலையைமிதிக்குமெடியோனை விழுங்கியுமிழாத்திறன்மாயை
தலையைமிதிக்குமல்லமென்சங் கமலமலர்த்தாடலைக்கணிவாம். 5

வசவேசர்.

வெள்ளவேணிப்பெருந்தகைக்கி யாஞ்செய்யடிமைமெய்யாகக்
கள்ளவேடம்பூனேந்திருந்த கள்வரெல்லாங்களங்கமறு

---

* உருவிலியை மாரனெனவும், கரும்பை வில்லெனவும், அளி மாலேயை நாரியெனவும், மலரை அம்பெனவும் கற்பித்துக் கூறுதலால் கணேசருக்கும், மன்மதனுக்கும் சிலேடையாகக்கொள்ளலாம்.

† கலையை - அறுபத்துநாலு கலைகளையும்:—அதாவது வேதமுதலியன.

‡ சித்தர் குழாமென்றது - காயசித்திபெற்ற சத்தியநாதர் முதலோரையும், இவரை இறையவராகக்கொண்ட நவகோடி சித்தரையும்.

$ முனிவர்:—வசிட்டர் முதலினோர்.

மூள்ளமோடுமெய்யடியா ராகவுள்ளத்துள்ளுமருள்
வள்ளலாகும்வசவேசன் மலர்த்தாடலையால்வணங்குவாம். 6

சென்னவசவேசர்.

பங்கவளற்றவழிமாற்றி யொருநல்வழியைப்பகர்வார்போற்
றங்கண்மதியிற்பலபிதற்றுஞ் சமயருரைகடமைநீக்கி
யங்கநிலையிற்றிலிங்கநிலை யிற்றென்றருளும்வீரசைவ
சிங்கநிலத்தவருட்சென்ன வசவன்றிருத்தாள்சிரத்தணிவாம். 7

மடிவாலமாச்சையர்.

வார்க்குங்குமமென்மூலைபாக னடியா * ரறுவைமாசடித்துத்
தீர்க்குஞ்செயல்போல்விச்சலமன் னவன்றன்சேனைசெய்பிழையை
தாக்குங்கரவாள்கொடுசின்ன பின்னமாகத்தடிந்திட்டுப் [த்
போக்குங்கருணைமடிவால மாச்சன்பொன்னங்கழல்போற்றி. 8

சைவசமயாச்சாரியர்.

பெண்ணிற்கரசுதானுக வென்புபெருநீற்றறைபிரச
வண்ணக்கமலமலர்ப்பொய்கை யாகச்செங்கன்மாழையாய்
நண்ணிச்சிறியநரிகண்ணமுடங் குளையப்பரியாய்நகர்புகுதப்
பண்ணற்குரியவமுதறழ்முத் தமிழ்நால்வரையும்பணிகுவாம். 9

சிவனடியார்.

பரவைகேள்வன்றிருத்தொண்டத்தொகையு † ளடியார்பத்தியெலா
முருவமாகுநஞ்சோம நாதன்றுதியுளுறு ‡ சரண
ராரவணியானடியார்கண் மற்றையவர்களினவருந்தாம்
வீரவிநாளுமிருப்பவிடங் கொடுக்குமுள்ளம்விரிந்தன்றே. 10

சிறப்புப்பாயிரம்.

வேறு.

தண்ணிலவுபுனைசடிலத் திறைபுகழல்லமதேவன் சரிதத்தீம்
பாற், புண்ணியரஞ்செவிவாயிற் றமிழ்ச்சங்கத் தான்முகந்து புகட்
டிஞானு, லெண்ணரியபுகழ்மலயத் திருந்தவனேர்வடிவெடுத்தானென்
றுகூறப், பண்ணியமுத் தமிழ்க்கவிதைச் சிவப்பிரகாசப் பெரும்
பேர்படைத்துளானே. 11

---

* அறுவை-ஆடை. † அடியார்-சைவசமயத்திலொழுகுபவர்.
‡ சரணர் - வீரசைவர்சமயத்திலொழுகுபவர்.

அவையடக்கம்

வேறு.

அடலுறுமல்லம னரியசீரொடு
படதலினயந்து பார்ராட்டும்பன்முறை
மடனிகுமுலகமென் மொழியைவந்துவர்க்
கடலிலுமூழ்குவர் காலமொன்றினே. 12

படலத்தோகை.

* நாற்கதித்ருமிடர் கடந்துநச்சுநர்
பார்க்கதிமுதலிரு பத்தைந்தாங்கதி
மேற்கதிபெறவருள் விளங்குமல்லமன்
சீர்க்கதியிருபதோ டைந்துஞ்செப்புவாம். 13

சம்பந்தம்.

கன்றியவைரிகள் காதுங்காதையும்
வன்றுயர்மதனநோய் வளர்க்குமாற்றமும்
புன்றொழிலினர்வதம் பொழுதுபோக்கலு
மன்றருளல்லம னமலலீலையே. 14

அதிகாரிகள்.

புறங்கறையொழுகுசெம் புண்ணிலீயென
வறுங்கதைபுல்லியர் கொள்வர் † மாமல
ருறுங்களிவண்டினல் லமனுண்காதையைப்
பிறந்துளபயன்பெறு பெரியர்கொள்வரே. 15

பிரயோசனம்.

மயலளற்றூன்றுகோன் மல்குமன்பெனு
மியலெழுத்தெழுதுகோ லங்கலிங்கமாம்
வியனிலத்தளவுகோன் மதிவிளக்கினை
யயர்வறத்தூண்டுகோ லமலலீலையே. 16

விடயம்.

கன்றிகொளடிகணன் குறைந்துபோ
யென்றனிநாவினின் றெழுமிச்செய்யுளான்

---

* நாற்கதியாவன:—தேவகதி, மனிதகதி, விலங்குகதி, நரககதி.
† மா - திரு.

வென்றிகொளல்லமன் சீர்த்திமென்பயன்
கன்றலிலன்பராங் கன்றையூட்டுமால். 17

உற்பத்தி.

வேறு.

பரசிவம்பிரமமென்னப் பட்டொருதிரிவுமின்றி
யுரைமனமிறந்துநின்ற வொருசிவலிங்கந்தன்னின்
வருமுயர்சதாசிவன்முன் மற்றவன்றனைப்பொருந்து
மருமைகொண்ஞானசத்தி யவர்களாற் * சிவனுதிப்பன். 18

சாற்றுமச்சிவனுக்கிச்சா சத்தியவ்விருவரானுந்
தோற்றுவனுருத்திரன்முன் சொல்லியவிவற்குச்சத்தி
மாற்றருங்கிரியையென்பர் மற்றிவரிருவர்பாலும்
போற்றுறுமரியுதிப்பன் ‡ பொறியவன்சத்தியாமால். 19

அத்திருமாலுமாவு மளிப்பவந்துதிப்பன்வண்டு
மொய்த்திசைமுரலுஞ்செங்கேழ் முளரிவானவனவற்குச்
சத்திவெண்கமலையன்னேர் தாவருமுலகத்தோற்ற
நித்தனங்குருகுகேச னினைவுமாத்திரையினுமால். 20

அல்லமதேவன்சிறப்பு.

ஆக்குறுஞ்செயலதொன்றே யயன்றனக்காக்கிலாடு
காக்குறுஞ்செயலிரண்டுங் கண்ணனுக்காக்கல்காத்தல்
போக்குதலென்றிம்மூன்றும் புராந்தகற்களித்தவர்க்கு
நீக்கருமிறைமைநல்கி நிறுவினன்குருகுகேசன். 21

முதலாவது,

துதிகதி

முற்றிற்று.

கதி-க-க்கு திருவிருத்தம் - உஉ.

---

* சிவன் - மகேசுரன். ‡ பொறி - இலக்குமி.

சிவமயம்.

இரண்டாவது,

கைலாசகதி.

வெள்ளிமால்வரையினுச்சி வீற்றிருந்தருளுமுக்கண்
வள்ளலாரொடுசூளுற்று மதாரிநெடுங்கட்செவ்வாய்ப்
பிள்ளைவாண்மதிநுதற்றம் பிராட்டியல்லமனைக்காண்பான்
கள்ளமாயையைஞாலத்து விடுத்தவக்கதியுரைப்பாம். 1

கைலைச் சிறப்பு.

இயங்குவநிற்பவான யாவையுங்கலைமாதோடு
முயங்குபுமுன்னமீன்ற முளரிவானவன்வகுத்து
வியன்புவியண்டந்தன்னுள் விதித்தனன்றகுமிடங்கள்
வயங்கெழுமசுரர்நாகர் வானவர்முதலியோர்க்கும். 2

நான்முகவண்டந்தன்னு ணனிசிறந்தொப்பிகந்த
தான்முகவிழிகளாற்கண் டும்பர்களுவகைபூப்பத்
தான்மிகுமருளான்மேனி சாற்றியபேரானந்தக்
கூன்முகமதியணிந்த கொற்றவன்கைலைக்குன்றம். 3

கொள்ளைவண்டிழிந்துதாது குடைந்துமூக்குழுவுடைந்து
கள்ளழிந்தொழுகுசெம்பொற் கடுக்கைவேய்ந்திலகுவேணி
வள்ளல்வண்புகழ்திரண்ட வளங்கெழுகைலைக்குன்றில்
வெள்ளிவங் * தத்தியாச மாகவேவிளைந்ததம்மா. 4

கண்பிசைந்தொருசேயின்னுங் கலுழினுந்தனைக்கொடுப்பன்
மண்பிசைந்துண்டமாயன் மறுத்திடவலியனல்ல
ணண்பிசைந்திறைவனுக்கே நாமிடலுவமென்று
பண்பிசைந் $ தலைதிரண்ட பரிசினின்றிடுமக்குன்றம். 5

ஒழுகுறுமருவியீட்ட மொலியினுனகுவெண்டிங்கள்
பழகுறுமுடற்களங்காற் பாகசாதனன்கூர்ங்கோட்டு
மழகளிறுமிழ்மதத்தான் மலர்மிசைக்கடவுளூர்தி
யழகுறுநடையாலன்றி யறிதரப்படாவக்குன்றில். 6

---

* அத்தியாசம் - இப்பியை வெள்ளியென வறிதல்போல் ஒன்றை மற்றொன்றுக வறிவது. $ அலை - பாற்கடல்.

விளங்கொளிதுளும்புமந்த வெள்ளியங்கிரியினுச்சி
துளங்கொளிவிரிக்குஞ்செம்பொற் சுடர்மணிச் * செய்குன்றொன்று
களங்கறுபராரைத்துய்ய கருப்புரக்குவாலின்மீது
வளங்கெழுசுடரொன்றுற்று வயங்குதல்போலுமன்றே. 7

அரசாட்சி மண்டபச்சிறப்பு.

இனையதிக்கைலவெற்பி லிறையரசிருக்கையொன்றுண்
டனையதையணியமாட்டா தப்புறம்போயினனென்
றெனையிகழ்பவர்களில்லே யிலங்குமம்மண்டபத்தின்
றனிவளமனந்தனலுஞ் சாற்றிடற்கரிதுமாதோ. 8

ஆதனத்திருத்தற்சிறப்பு.

வேறு.

அன்னமண்டபத் † தங்கணனேர்பகன்
மின்னுசெம்மணி வேதிகையொன்றன்மேன்
மன்னுசெங்கதிர் மண்டலத்துற்றன
னென்னவந்தங் கிருந்தனனென்பவே. 9

கடவுட்சிறப்பு.

‡ குழலியாயுடற் கூனிநரைத்ததோர்
விழவுவாண்மதி வேணியின்மேவுறக்
கிழவியாகிக் $ கிரிக்கோன்மகப்பெறு
மழகுநீர்மக ளாயிடைவாழ்வுற. 10

அங்கியென்னற் கடிப்பமேனெக்கிய
செங்கணென்று திருநுதல்சேர்தரத்

---

* செய்குன்று - கிரீடாசைலம்.

† அங்கணன் - அழகியகண்ணன். கண்ணிற்கு அழகு-அருள்.

‡ இதுமுதல் ஆறுபாட்டுகளும் குளகம். "குளகம் பலபாட்
டொருவினை கொள்ளும்" என்றாராகலின்.

$ மலையரசனுக்குக் கங்கையும் பார்வதியும் புதல்விகளென்பது
சில புராணங்களிலிருத்தலின், கிரிக்கோன் மகப்பெறுமென்றதற்கு
இங்ஙனம் பொருள் கூறப்பட்டது. அன்றி பார்வதி காரணத்திற் பிறந்
தமை பற்றிச் சொல்லப்பட்ட தெனின், கிரிக்கோனது மகவாகிய
உமை பெற்றவென்றும் பொருளமையும்.

திங்களென் றுந் தினகரனென் றும்வா
ழுங்கண்மல்கு மருண்மடைபோன் றுற. 11

எண்ணுமன்ப ரிதயமென்புட்படு
* கண்ணிபோன் றுவார் காதிடைத்தோடுற
நண்ணுமா துமை நன்னுதற்பொட்டென
வண்ணநீல மணிமிடற்றொன் றுற. 12

† நகந்தருங்கொடி கண்களாணியே
மூகந்திரும்பு முறையிற்றிரும்புமான்
மகிழ்ந்திடங்கதிர் வீரமழுவலந்
தகுந்தகுந்தகு மென்றுதயங்குற. 13

சொற்றெரிந்த சுடர்மணிகங்கண
முற்றிலங்க ‡ வொருகருங்கேழலின்
பற்றிருந்த மதாணியிற்பட்டெனப்
புற்றருங்கலை யுற்றரைபொற்புற. 14

புரத்தைவென்ற நகைக்குமென்போதிலேன்
சிரத்தைவென்றசெங் கைக்குஞ்சிலைமத
னேரித்தகண்ணிற்கு மின்றெனக்கூற்றவூத்
தரித்தவீரக் கழலொடுதாளுற. 15

கடவுளிடத்து உமையிருந்தமை.

இருந்தவாதி யிடத்திலிருந்தனள்
பரந்தவானும் படியுமுயிர்களு
மொருங்குதோன்ற வுதவிக்கருவுறீஇ
வருந்திலாத மணிவயிற்றன்னையே. 16

உமாதேவி சிறப்பு.

இறைவனங்க ணெனு $ முச்சுடர்களு
முறவுகொண்ட விருளெனுமோதிமே
லறவனென்றவவ் வண்ணல்புனைந்தரு
ணறவுமிழ்ந்த நறுமலர்தாழ்ந்திட. 17

---

* கண்ணி - பறவைகளைப் பிடித்தற்கு வைக்கப்பட்டதோர் கயிற்றுமுடி. † நகம் - மலை.

‡ ஒரு கருங்கேழல் - இரணியாக்ஷனைக் கொன்ற வராகம்.

$ முச்சுடர் - சோமசூரியாக்கினி.

ஏற்றுவார்கொடி யெந்தைசடைப்பிறை
யாற்றுள்வீழ்வுற் றிறப்பதற்கெண்ணுறத்
தோற்றமேவு சுடர்த்திருநெற்றியின்
ஞாற்றுமோர்மணிச் சுட்டிநலந்தர. 18

ஈசனூர்முக மென்னுமுளரியி
லாசைகூரு மளிவிழிக்காருள்
வாசமாமலர் வாக்கிளவெண்ணகை
தேசுலாமணி யாகச்சிறந்துற. 19

மாணப்பூண்புனை மற்றையுறுப்பெனப்
பூணுட்பட்டிடா தோலையின்பூணென
யானர்ச்செம்பொ னிலங்கொளியோலைமேற்
காணக்காதெனும் வள்ளகவின்செய. 20

ஓங்குவாவுடை யும்பனயனரி
தாங்குமாவி தணந்தொழிகாளினும்
வாங்குரவெழின் மங்கலநாணெளி
தேங்குபூணர சென்னச்சிறந்திட. 21

அரவுலாஞ்சடை யண்ணலைப் * பிள்ளைதான்
பருவமூன்றினிற் பாடலின்பாறரும்
பொருவில்கொங்கைப் புகழெனப்பொங்கொளி
மருவுமார மணிவடந்தாழ்ந்துற. 22

பறந்திடாமணி வண்டுபடு ‡ மலர்
சிறந்தநீல மலரொடுசீர்பெற
மறந்திடாது மறைமுடியின்பொரு
ளறைந்துபைங்கிளி மூன்கையமர்ந்திட. 23

தோலுடைப்பரன் ரென்மனையாட்டிதன்
பாலடித்ததெவ் வாறெனும்பட்டரை
மேலடித்து விளங்கவொண்மேகலை
நூலிடைக்குறு நோய்புரியாதுற. 24

---

* பிள்ளை என்றது - திருஞானசம்பந்தமூர்த்திகளை.

‡ மலர் - தலைமைப்பற்றித் தாமரை மலருக்கு ஆக்கப்பட்டது.

புத்தனிச்சம் படினும்பொருமையை
யெய்த்தமற்றை யிருமணத்தம்மியி
லத்தன்வைத்த வடிக்கமலங்களின்
முத்தரிச்செஞ் சிலம்புமுழங்குற. 25

மகாசபை கூடுதற்சிறப்பு.

இருந்தவாரு ளெம்பெருமாட்டிபாற்
குரும்பைநாணுமென் கொங்கைப்பொறையினுல்
வருந்துநூற்பக வன்னமருங்குலா
ரரம்பைமாத ரளப்பிலரெய்தினர். 26

வேறு.

முல்லையந்தாடை யருந்ததிமுதலெழுமுனிவ
ரில்லறம்புரி தூணெவியராமெழுவரும்போய்
வல்லரும்பெனக் குவிமுலைப்பனிமலைமகளைச்
சொல்லருந்துதிசெய்து வாழ்த்தெடுத்தனர்தொழுது. 27

அன்னமொன்றறி யாமுடிக்கங்கையையறிந்து
துன்னவந்தலமருமெகி னங்களின்ரெருகுதி
யென்னவம்புயத் தொருசதகோடியிந்திரைகண்
முன்னடைந்துவெண் கவரிகளிரட்டினர்முறையால். 28

அரவுகளவிய கதிரெனப்பட்டசாந்தாற்றி
பரவையல்குல்வெண் முத்தவாணகைக்கொலபயில்விற்
புருவமென்மலர்க் குழற் * சசிகோடிகள்புகன்று
மருவியம்பிகை மருங்குநின்றசைத்தனர்மன்னோ. 29

எடுத்துவீணைக ளுளர்ந்ரம்பிதமிடறிதுவெண்
றடுத்தகேள்வராம் பிரமருமறிவரிதாகப்
படத்தபாம்பணி பரன்புடைமாதுசீர்பாட்டிற்
ரொடுத்துவாலிய கலைமடந்தையர்பலர்துதித்தார். 30

செப்பமைந்ததண் ணுமையிசைதாளமென்சிறுதாட்
டெப்பமைந்த ‡ வொண் சதிதழீஇச்சுவையபல்காய
முப்பமைந்தவின் கறியெனநடித்தனருழையோ
டொப்பமைந்தகண் ணுருத்திரகணிகையருவந்து. 31

---

* சசி - இந்திராணி. ‡ ஒண் சதி - அழகிய மிதிப்பு.

எந்தைபாலுமை * முக்குணங்களுமுருவெடுத்து
வந்தமாதர்க ளருகுநின்றனர்பணிமகிழுஉ
வந்தமாதருட் டமோகுணமாதுமையருளாற்
சந்தமாயையென் பெயர்கொடதருக்கினின்றனளே. 32

தெள்ளுவார்திரைக் கங்கையுங்கங்கையுஞ்சிறிய
பிள்ளையாகிய மதியமும்மதியமும்பெரிது
துள்ளுமோரிள நவ்வியுநவ்வியுந்தொடர்பு
கொள்ளுமாறவ ணெருங்கினவுருத்திரகுழாங்கள். 33

சங்கமொன்றுட னெஞ்றுதாக்குறவொளிதழைக்குந்
துங்கநேமியு மன்னவாயுறவலசுருட்டும்
பொங்குவேலவந் தெனவரிக்கணங்களற்புதத்த
வெங்கணபகன் போவையிடத்துவந்திறுத்த. 34

முகங்களுன்கிலு நான்மறைவிதிமுறைமுழங்க
வுகந்துகையிருநான்குநான்குச்சியிற்குவியச்
சகந்தருஞ்செயற் பிரமர்களளப்பிலர்தையல்
பகுந்தமேனிய னவையிடைப்புகுந்தனர்பரவி. 35

அயனுமாயனு மெனினுயர்ந்தவரென்பதன்றிக்
கயிலைநாயக னமர்திருவோலக்கங்காண்பா
னயனமாயிர மிலாமையினதிகர்நாமென்று
வயிரவான்படை யிந்திரரெண்ணிலர்வந்தார். 36

பிரகர்சித்தர்கள் வித்தியாதரர்சுரருயர்கிம்
புருடர்மெய்க்கதிர் முதலியகோடிசைபுரப்போர்
நிருதர்மற்றுளார் விழிபிதுங்கிடவுடனெருங்க
வரதனத்திரு வோலக்கங்காணிபவந்தார். 37

அழிவுமாக்கமு முறையினுற்செயும்வலியடைந்தார்
மொழியும்யாக்கையு மனமுநல்லறங்களின்முயன்று
கழியுமாறுமுக் காலமுமுளர்தலைகழன்றூர்
பழியிலாவதிட் டாதிமாமுனிவரர்பரந்தார். 38

குழவிபால்குடிப் பதுகடல்குடிப்பதுகுழவி
பழகுமாறுணன் மண்ணெடுத்துண்பதுபடைப்பு

---

* முக்குணம் - சாத்துவிதம், இராசதம், தாமதம்.

முழுதுமோர்தளர் நடைமகச்செயலெனுமுரண்கொள்
வழுவிலாவருட் கணங்களெண்ணிகந்தனவந்த. 39

செருக்கொடுஞ்சிவ நிந்தைசெய்வாய்க்கிலைதீர்வு
விரிக்கினென்றுமுன் சிறுவிதிதலையறவெட்டி
யெரிக்குநல்கிகிங் தனைசெயாமறிமுகமியைத்துத்
தருக்கினின்றவவ் வீரன்வந்தொருபுடைசார்ந்தான். 40

காதியாயிர மால்களைப்பிழிந்துமாங்கனிபோற்
கோதுவீசினுங் கடல்கவிழ்த்தனையசெங்குருதி
பாதியாயினு நிரம்புறுக்கபாலபாணியனுய்
மாதுபாதிய னவையிடைப்புகுந்தனன்வடகென். 41

வீரமாதருக் கில்லையென்றுரைப்பதென்விளங்க
வீரமாதென வறிகிலிரோவெனவிளம்பி
வீரயோகினி வெள்ளமோடமர்பொரவிரும்பும்
வீரகாளியும் புகுந்தனளவையிடைவிரைந்து. 42

ஊன்றுஞானமோ யெர்வயிராகநல்லொழுக்க
மூன்றுகாலெனக் கொண்டான்முகத்திளமுறுவ
ரேறன்றுமாறுகின் ருடினன்சுடரவனிருளைப்
போன்றுமாயையைத் தொலைத்திடபிருங்கியென்புனிதன். 43

படிகொண்மாமுடிக் கங்கணத்திறைபதம்படுமொண்
மூடிகள்யாவையும் படுகழனந்தியெம்முதல்வ
னடிகளேந்துகை யுறவடித்தொதுக்கியவ்வவையைக்
கடிகொண்மாலயம் பிரம்பொடுதிரிந்தனன்களித்து. 44

பெய்யுமாமழை முகிலெனப்பெரியவாய்முழவந்
துய்யமாமதி யனையவெண்சரிமுகசங்க
மைய * வாணனும் † பானுகம்பப்பெயரவனுங்
கையுவாயுமொத் ததிர்த்தனர்செவிகரங்கவிழ்ப்ப. 45

ஆதிப்பரோர்சிலர் பாடுவரோர்சிலர்துள்ளிக்
குதிப்பரோர்சிலர் கைகளாற்ரூளிணைகொட்டி

---

* வாணுசுரனுக்கு ஆயிரங்கைகள். இவன் கைலாயத்தில் முழவ வாத்தியஞ் செய்பவன்.

† பானுகம்பனுக்கு ஆயிரம் வாய்கள். இவன் கைலாயத்தில் சங்கவாத்தியஞ் செய்பவன்.

யதிர்ப்பரோர்சிலர் நெக்குநெக்குருகிநெஞ்சகமெய்
விதிர்ப்பரோர்சில ராயினரவையிடைமிடைந்தோர். 46

படைக்கலங்களினெளி யிமையவரொளிபரித்த
தொடைக்கலங்களி னெளியரம்பையர்பணைத்தோளி
னிடைக்கலங்களி னெளியெலாமிருளிறைமிடற்றி
னடைக்கலம்புக நிறைந்தனபரந்தபேரவையில். 47

கடவுளுக்குந் தேவிக்குஞ் சம்வாதம்.

வேறு.

இன்னணமவையிடை யிருந்தவெம்பிரான்
றன்னெடுவினவுமோர் தகைமையுன்னுபு
கன்னலுமமுதமுங் கைப்பவெம்முடை
யன்னதன்வாய்திறந் தறைதன்மேயினாள். 48

தலைவநின்னவையிடைச் சார்ந்தவிப்பெரு
நலனுடையவரெலா நணுகிவெம்பவத்
தலைகிலராகியின் படைவரோவலா
னிலையிலரோவிது நிகழ்த்துவாயென்றாள். 49

விளங்கிழைநன்றுநின் வினவென்றெந்தைமண்
ணளந்தவனயன்முத லாயினேருமின்
புளங்கொளுநாமரூ பத்தொடொன்றுறத்
தளந்துளகிரியையாற் சார்கிலரென்றான். 50

வேறு.

அனையதேனுமரூபக் கிரியைகளனைத்தும்வெல்ல
நினைவுறுசூழ்ச்சியொன்று நீயெனக்குரைத்தியென்னப்
பனிமலைதவஞ்செய்தீன்ற பவளவாய்மடந்தைகூற
னனையவிழ்கொன்றைவேணி * நம்பன்மற்றினனச்சொல்வான். 51

† போகபூமியினுற்போக தனுவினுற்பொருந்தலாகா
தேகமாமின்பசித்தி யியம்புறிற்கருமபூமி
யாகமானதுகொண்டன்றி யாதலான்ஞாலத்தெய்தி
யேகுகெறியினின்றே ருண்மைசாதித்துக்கொள்வர். 52

* நம்பன்-சிவபெருமான். † போகபூமி-ஏமவஞ்சமுதலாயின.

என்றிதுகொழுநன்சூற விளங்கொடியனையதாயி
னென்றெருமக்கண்ஞாலத் தவமையின்ஞானசித்தி
நன்றுறவுணர்த்தவல்ல குரவன்யார்நவிறியென்னக்
குன்றணிமதியமொப்பக் குனித்தவன்கூறலுற்றான். 53

தொல்லையிலுயர் * சுஞ்ஞானி தூய் † நிராங்காரனின்போ
ரெல்லையிறவங்கள்செய்ய வெமதுமெய் ‡ வடிவத்தானே
யல்லமகாமமைந்த ஞயினமனையான்றன்னே
வில்லுறழ்நுதலாய்காண்டன் மிகவுனக்கரியதென்றான். 54

என்றலுமிமயவல்லி யெனக்கரிதென்பதென்கொ
லுன்றனியல்லமன்ற னுண்மையையறியவேண்டி
னின்றவர்தமக்கெலாமு மெளிதெனுநெகிழ்ந்தரைப்ப
வன்றினர்புரமெரித்த வணிநகையாளன்சொல்வான். 55

மூனிவுறேல்வறியவுன்றன் மொழியளவல்லன்மாதே
வினேதபமன்பரன்பால் வேண்டியவடிவனுகி
யினையவர்விழியிற்றோன்றி யருளுவனலமதேவன்
றனதியல்பியாவரானுஞ் சாற்றிடற்கரியதென்றான். 56

மெய்ம்மையிம்மாற்றமாகும் வேறுளார்க்கியான்செய்மாயை
பொய்ம்மலிசெயலிற்றப்பிப் போமெனிற்காண்பலென்னு
வம்மலைமகடருக்கி யறைதலுநின்றனுற்றன்
மைம்மலிகுழலாய்காண்கு மென்றிதுவள்ளல்கூறும். 57

இன்னணஞ்சூளியம்பி யினிவறிதிருத்தியாயிற்
பொன்னவிர்சுணங்குபூத்த புணர்முலைமடவாய்தோல்வி
நின்னிடைவருமென்றண்ண னிகழ்த்தலுமிமயவல்லி
யென்னுரைதவறுதென்னு நெடுமொழியிசைத்துப்பின்னர். 58

மாயையைப் பூமிமேல் விடுதல்.

ஆயிடையருகுநின்ற தமோகுணவடிவமாகு
மாயையைவிளித்துநீபோய் மண்ணிடையல்லமப்பேர்

---

* சுஞ்ஞானி - பொருளைப் பொருளாகக் கொள்ளும் ஞானமுடையவன் எனவே சிவஞானமுடையவன்.

† நிராங்காரன் - அல்லதை யானெனக்கோடல் தவிர்வோன்.

‡ வடிவந்தானே என்பதும் பாடம்.

நாயகன்றனையறிந்து நணுகுதியென்றுகூறி
யேயினளவள்வணங்கி யினையதொன்றியம்பலுற்றாள். 59

மாயை சூளுரவு.

அல்லமனியல்பறிந்தங் கணைகுவனமுவுமாயின்
வல்லிதின்வலிந்துபற்றி * மீர்த்திவண்வருவலென்று
சொல்லினளொருசூள்வேலை சவறவுண்டிடுவலென்று
புல்லியவெறும்பொன்றூற்றல் புகல்வதுபோலவன்றே. 60

மாயை பூமியடைவு.

தன்னளவறியாண்மாழ்கித் தண்மதிதவழும்வேணி
முன்னவனவையுணின்று மொழிந்தவச்சூண்முடிப்பான்
‡ பன்னகமுடிபரித்த பார்மிசைச்செலவைநெஞ்சத்
தன்னினளெய்தினுள்வ் வொளி $ யிழைமாயைமாதோ. 61

இரண்டாவது

கைலாசகதி

முற்றிற்று.

கதி-உ-க்கு திருவிருத்தம்-அஉ.

---

* ஈர்த்து=இழுத்து, வருவல் - தன்மையொருமை வினைமுற்று. சூள் - சபதம். வேலை=கடல். ஆற்றல்=வலிமை.

‡ பன்னகம் - பாம்பு; ஆதிசேடன்.

$ இழை=ஆபரணத்தை யுடையவள்.

சிவமயம்.

மூன்றாவது

மாயையினுற்பத்திகதி.

பூதலத்தைப்பொருந்துமாயையென்
றோதலுற்றவொருபிடிநுண்ணிடை
மாதவத்தர்மனங்கள்கலங்குறச்
சாதமுற்றுவளர்ந்தமைசாற்றுவாம். 1

நாட்டுச்சிறப்பு.

களங்கவெண்மதிநெஞ்சங்கவற்றுமோர்
துளங்குசங்குடைத்தோன்றன்மணத்தணி
வளங்கொண்மண்மகண்மார்பின்மதாணிபோல்
விளங்குமென்பவிளவலதேயமே. 2

வாவியாவுமதன்பெருந்தூணிசெய்
யாவுமாரனெடுக்குஞ்சிலேயிடங்
காவெலாமவன்காகளசாலைகள்
பூவைமார்மனைபோர்க்களமென்பவே. 3

பொறைக்கயிற்றிற் புகழையின்சொல்லெனும்
விறற்கயிற்றின் விருந்தைக்குரவர்சொன்
மறைக்கயிற்றின் மனத்தைத்திருவைநல்
லறக்கயிற்றி னசைப்பவரெங்குமே. 4

வறியனுவன் வடதிசைமன்னவ
னறிவிலாள னனந்தனுமாவனோர்
சிறியனுவன் சிலைமதன்பூம்பொழில்
வெறியுலாவும் விளவலத்தெய்தினே. 5

நகரச்சிறப்பு.

இணையிலாதவினையவளம்பல
நணுகிவாழும்விளவலநாட்டிலவ்
வணியினுப்பணமுத்தம்விலையிலா
மணியின்மேவும்வனவகைமாநகர். 6

படிக்குளீரப்பலாப்பழுத்தொண்புலி
வெடித்தவாயினனந்தன்மணிவெயி
லடுத்துவானத் * தவிர்மதியைத்தொடாக்
கடுத்தவேள்குடைக்காம்பெனத்தோன்றுமால். 7

நறவவிழ்ந்தநறுமலர்தோறும்வண்
டுறவருந்தி † யிரலுற்றெடுங்குமா
லறவர்தங்களகந்தொறுமையமுண்
டுறவர்தங்குகையுன்னுதல்போலவே. 8

வாவிச்செங்கமலங்களில்வல்லிருண்
மேவித்துஞ்சிவிடுதருகாலையிற்
காவிற்சென்றுகளிவண்டினங்குயில்
கூவத்தண்மதுக்கொள்ளைகொண்டெண்ணுமால். 9

பெடையொடுற்றுப்பிரிவில்பைங்கிள்ளைகள்
குடியிருக்குங்குளிர்பொழில்வாய்மலர்ப்
பொடியுதிர்க்கிலவேலளிபோய்வயன்
மடையுடைக்குமதுப்பெருவெள்ளமே. 10

‡ சேலுலாவித்திரியுநதிப்புனல்
மாலியானைமறையக்கதிர்த்தலைச்
சாலிநீடித்தழைத்துவிளைவயல்
காலினெடிக்கடிதுவிழுமரோ. 11

வரிக்கயல்செங்கமலம்வரிவளை
யிருக்கையாண்மலரம்பினையேந்தலால்
விரிக்குமஞ்சிறைமென்னடைப்புள்வயல்
செருக்குவின்மதன்செங்கைநிகர்க்குமால். 12

நளிர்கடற்றுயிலுராணன்றன்னுருக்
கொளவளிப்பவர்கையிற்கொடுத்திடும்
வளைபிறக்குமிடமெனவண்புனற்
குளமனைத்துங்குடவோலைமொய்க்குமால். 13

---

* அமர்மதி என்றும் பாடம்.

† இரல் - தேனீக்கூடு.

‡ ஆற்றுக்காற்பாய்ச்சற் றிறப்பு.

வேறு.

தாழ்ந்தோருயர்வரென்றுமிக வுயர்ந்தோர்தாழ்வரென்றுமறஞ்
சூழ்ந்தோருரைக்குமுரைகண்டா மதில்சூழ்கிடந்ததொல்லகழி
தாழ்ந்தோரானந்தன்மணிமுடிமே னின்றன்றுயர்ந்ததடவரையைச்
சூழ்ந்தோர்வரையினுதிப்பவன்றூட் கீழ்நின்றதுபோய்ச்சூழெயிலே.

சொற்போர்புரிவர்நான்மறையா றங்கமுணர்ந்ததொழுகுலத்தோர்
வில்போர்புரிவர்நெடியசிலை யிராமனனையவிறல்வேந்தர்
பொற்போர்புரிவர்பிறர்பொருளுந் தம்போற்பேணிப்புரிவணிகர்
நெற்போர்புரிவரந்நகரில் வேளாண்குலத்துநெறியினரே. 15

உடுப்போர்க்குடுக்குந்துகில்களாலுண்போர்க்குண்ணும்பொருள்களாற், றொடுப்போர்க்கெடுக்குமலர்களா லணிவோர்க்கணியுஞ்சுடரிழையா, லடுப்போர்க்கடுக்குமனைகளாற் குறைபாடடையதன்றதுதான், கொடுப்போர்க்கிரப்பாரில்லாத குறையொன்றுளதுகூறுங்கால்.

ஈசனளித்தவொருகோட்டி யானைக்கியாங்களிணையாயின்
வாசவனைத்தாங்கிரிருகோட் டியானையெம்மைமானுமெனும்
பாசவுரற்கால்யானையொடு பாண்டிலிழுக்கும்பகடியாரிற்;
றேசினிரதப்பரிசிறந்த வெண்ணும்பரிகடெருவகலா. 17

மறையுங்கலைகள்பற்பலவு முழங்குமொலியுமங்கலஞ்செய்
பறையுங்குழலும்யாழுமியம் பொலியுங்கரியும்பரிமாவு
நிறையுந்தெருவிலோடுமணித் தேரினெலியுநிறைகடலி
னறையுந்திரையிற்சென்றுவிசும் பமரர்செவியினடைந்திடுமால். 18

வேயைநகுமென்சுடர்த்தொடியதோண்மா தமையைவிடைகொண்டு
பேசுமகன்றுவாற்கரிய கைலமலையைப்பிரிந்தெய்தித்
தூயமனமுங்கலங்கவருந் தவர்வேள்குவவுத்தோள்வீங்க
மாயைபிறந்தவனவசைமா நகரின்வளத்தையார்சொல்வார். 19

அங்கரரசின் சிறப்பு.

வேறு.

இம்மாநகரிற்கரசாகியிருந்துவாழ்வோ
னம்மால்புணருஞ்செயன்மாதரையாகம்வைத்தல்
சும்மாபுகழன்றெனவிந்தையைத்தோளில்வைத்தோன்
கைம்மாறுவேண்டாமழைபோன்ம்மகாரனென்பான். 20

திரைதானளக்குந்திறல்வேந்தர்க்கரியசீரான்
குறைதானிரக்குமவர்க்கோடிக்குறுகநிற்பா
னிறைதானவெற்புமணிநாகமுநின்றுதாங்கும்
பொறைதானெடுக்குமிகுமாற்றல்பொருந்துதோளான். 21

இரப்பார்வரிஞரடிஞாலமெளியதன்றிக்
கரப்பார்காக்கும்பொருளன்றெனவீகைகற்றே
புரைப்பாருரைக்குமுரையாவும்புகழில்வைத்தோன்
றரைப்பாலுவமையிலையாகத்தருக்கிவாழ்வோன். 22

அவன் மனைவி சிறப்பு.

அன்ஞன்மனைவிவணர்வார்குழலேயவேற்கண்
மின்ஞர்மருங்குறளர்ந்தெல்கிமெலியவிம்மிப்
பொன்ஞர்சுணங்குவிரிபூண்முலைப்பூங்கொப்பன்ஞ
ளின்ஞரமுதமொழிமோகினியென்னும்பேராள். 23

ஒன்ருனம்பன்மருங்காயிழையுய்த்தமாயை
குன்ருதவாற்றன்முனிவோருளங்குன்றுமாறு
பொன்ருதபொற்கிங்கிவள் * பூங்கருப்போந்துபெற்ரு
ளென்ருலிவளுக்கினையாவினியாரைச்சொல்வாம். 24

அவ்விருவரும் மகவுக்காக நோற்றமை.

வேறு.

இம் † மகாரனு ‡ மோகினியென்னு
மம்மலிமென்குழல் வாள்விழிமாது
மம்மகவின்மையி ஞரூரெய்தி
மெய்ம்மலிநோன்பு விளைத்தனரன்றே. 25

மோகினி கருப்பமடைதல்.

முன்னியநோன்புசெய் மோகினிமாதின்
றன்னுதரத்துமை தண்ணருளாலே

---

* பூங்கரும்பொன்ருபெற்ருள் எனப் பிரதிபேதமுமுண்டு.

† மகாரம்-எனதல்லதை எனதாகக் கோடல்.

‡ மோகம்-பிரியமல்லாததைப் பிரியமாகக்கோடல். இவ்விரண்டையும் ஆண் பெண்ணுகக் கற்பித்தது, இதிகாசமாக்கவேண்டி.

மன்னியமாரன் வலப்புயமோட்க்
கன்னிகை * மாயை கருப்பமடைந்தாள். 26

கருப்பகாலக்குறி.

முத்தணிகொங்கை முகங்கள்கறுத்தாண்
மெய்த்திருமேனி வீளர்த்துநரம்பு
பைத்தனமீது பரப்பவிருந்தாள்
பொய்த்துயில்கொண்டு புளிக்குமுவந்தாள். 27

கருவுயிர்த்தமை.

இன்னணமையிரு திங்களிருந்து
பின்னரு † மோகினி பெண்மகவீன்ரு
டன்னிகர்கின்ற ‡ சலஞ்சலமொன்றிங்
கின்னெளிமுத்தினை யீன்றதையொத்தே. 28

பிறந்துழிவிழர் வேடுத்தமை.

சங்கொடுதண்ணுமை சச்சரிதாளம்
வங்கியம்வெந்துடி வார்முரசங்கண்
மங்கலமங்கை மகப்பெறுநாளி
லங்கசன்வெம்மூர சென்னவதிர்ந்த. 29

தூண்டொளிபோன்மக டோன்றவுவப்புற்
ரூண்டகைமன்னவ னந்தணர்கொள்ளப்
பூண்டுகின்மாமணி பொன்னிலமற்றும்
வேண்டினயாவும் வெறுப்பவளித்தான். 30

அப்போது மன்மதன் செயல்.

வேறு.

இங்கொருமாயையென்னு மெழின்மூளதோன்றலோடும்
பொங்குமுமுவகைநெஞ்சம் பொறுக்கலனுகியெய்யும்
வெங்கணைமழையுந்தூவு மென்மலர்மழையுமொன்ரு
வெங்கணுமதனவேணின் றிடையறச்சொரிந்தானம்மா. 31

---

* மாயை-பொருளல்லதை பொருளாகக்கொள்ளும் மயக்கம்.

† இவ்விருவர்பாலு மாயை யுதித்ததெனல் மமகாரமு மோக மும் மேலிட்ட அவதரத்தில் உதிப்பது மாயையெனக் குறிப்பிக்க மோகினி பெண்மக வீன்ரூளென்ரூர்.

‡ சலஞ்சலம்-வலம்புரிச்சங்குகள் ஆயிரத்தாற்சூழப்பட்டசங்கு.

அப்போது தவஞ்செய்வோர்க்கு நேரிட்ட இடையூறு.

கண்ணகனிலத்தகங்கைக் கரையிலுமுழையிடத்தும்
* புண்ணியவனத்தமெய்திப் புற்றுமாய்மரமரும்புற்றுந்
தண்ணியபுனலிற்றீயிற் சார்ந்துமூண்டுயிறுறந்தும்
பண்ணியதவத்தோர்நெஞ்சும் பதைத்தனமயலின்மூழ்கி. 32

அவர் அதற்குக் காரணமாராய்ந்திருந்தமை.

ஐம்பெரும்பூதமெல்லா மடக்கழிந் † தொழியும்போதுங்
கம்பமினமதுநெஞ்சங் கலங்கியதென்னைகொல்லோ
வம்புறு ‡ செயலீதிங்கு வந்தவாறெவ்வாறென்னுஞ்
செம்பொருளுணர்ந்தசீர்சால் செய்தவரிருந்தகாலை. 33

துருவாசர்வருகை.

தளர்ந்துழியுதவுங்கல்வி தானெனத்துருவாசப்பேர்
கொளுந்தனிமுனிவர்கோமான் குறுகலுமுனிவரெல்லா
முளங்கனிவாகின்றேத்தி யுயர்தவிசிடையிருத்தி
வளங்கெழுமலர்கடூவி வந்தனைசெய்துசொல்வார். 34

முனிவர்கள் வினு.

என்றுமெம்முள்ளமெல்லா $ மெழுதியவினக்குப்போல
நின்றிடுமின்றென்கொல்லோ நிலைதடுமாறுகின்ற
தென்றன்முனிருந்தசெய்ய சிறுசுடர்போலவைய
நன்றிதையுணருமாறு நவின்றருள்செய்தியென்றார். 35

துருவாசர் விடை.

சங்கரியொருசூளாற்றன் றமோகுணவடிவமாயை
மங்கையைவிடுப்பவன்னுள் வனவசைநகரிற்பிள்ளைத்
திங்களினுதித்தாளின்று செய்தவக்கிழமைபூண்டி
ருங்கணெஞ்சத்துளாற்ற லுடைந்ததென்றவனுரைத்தான். 36

அதனை அங்கீகரித்தமை.

அருந்தவமுனிநீகூறிற் றுண்மையேயன்றியெங்கள்
பெருந்தவமுயலுநெஞ்சம் பிறழ்ந்தாற்கேதுவில்லை

---

* புண்ணியவனம் - சமிசமுதலியன.
† ஒழியும்போது - பிரளயகாலம்.
‡ செயலீதிங்கு - எனப்பிரதிபேதம்.
$ எழுதியவினக்கு - சித்திரதீபம்.

யிருந்துள்ம்வருந்தியாய்ந்த வெம்மிடையையமெல்லாம்
பரிந்தனவருளானீயெம் பால்வருகையினெனென்று. 37

அதனை விரித்துரை யென்றமை.

முனிவரர்குருவாசப்பேர் முனிவர்கோன்றனைவழுத்திப்
பனிமலைவல்லியேவப் பட்டெழின்மாயையென்னும்,
வனிதையிவ்வுலகில்வந்த வாறுநீவிரித்தியாங்க
ளினிதுணர்வுறுமாறேற்று கென்றலுமவனுரைப்பான். 38

அவ்வாறு விரித்துரைத்தமை.

கயிலையாலக்கத்துற்ற கண்ணுதல்லலமன்ற
னியல்பினையறிதறேற்ரு யென்றுமையுடனுரைப்ப
மயிலியலறிவுலென்று மாயையேவிளக்கைக்காண்பான்
பயிலிருளினைவிடுத்த பரிசனவிடுத்தாளன்றே. 39

அவ்விடையூறு நீக்குமாறு கூறினமை.

காரணமிதுவேயெங்கோன் கையையவிடுத்துமாயை
தாரணிதனில்வரற்கித் தக்கவம்மாயையென்னு
மாரணவிடங்கலந்த மயக்கமல்லமனென்றிட்ட
பேரணிகலுழன்றன்னை நினைந்திடிற்பெயருமன்றே. 40

பிணிதபவேண்டில்வாழ்நாட் பெரிதுறவேண்டிற்செல்வ
மணிதரவேண்டிற்கல்வி யறிதரவேண்டில்வானம்
பணிதரவேண்டின்முத்திப் பயன்பெறவேண்டிலென்று
மிணையறமல்லமப்பே ரெந்தையைநினைப்பரென்று. 41

புகன்றவருளத்திற்றுன்பம் போக்குபுகுருவாசன்ரு
னகன்றதன்னிடத்தடைந்தா னன்றுதொட்டருந்தவத்தோர்
மகிழ்ந்தருளல்லமன்றன் மலரடிமனத்திற்றுங்கி
யுகந்தவன்புகழாய்வந்த வாறெலாமுரைக்கலுற்றார். 42

முனிவர் துன்பம் நீங்கியிருந்தமை.

நெஞ்செனுமகலிலன்பா நெய்நிறைத்துள்ளமென்னும்
பஞ்சுறுதிரியினுச்சி பற்றிடவல்லமப்பே
ரஞ்சுடரிலகவேற்றி யருந்தவர்மாயையென்னுங்
கஞ்சிருளகன்றிருந்தார் தொல்லைமாதவங்கள்செப்பு. 43

மந்தரகிரிப்பேர்பெற்ற மத்தெறிகடல்போலையர்
சிந்தனைகலங்கிமெல்லத் தெளிந்தமைதெரிந்துரைத்தாம்
வந்தமண்பிறந்தவன்றே மாதவர்மனங்கலக்கும்
வெந்திறன்மகாரன்றன் மகடறம்விளம்பலுற்றும். 44

தந்தை நாமகரண முதலிய செய்தமை.

காந்தம்வலியுமிரும்புபோற் கண்கடன்னுறெறப்பிணித்து
நேர்ந்தமனமோரணுவென்ன னியாயமன்றென்றம்மனத்திற்
போந்தவாசைப்பெருங்கடலைப் புகட்டுமகளைக்கண்டுவந்து
வேந்தன்மாயையெனுநாமம் விளம்பிச்சிறப்புப்பலசெய்தான். 45

மோகினி மகளை வளர்த்தமை.

மாயைப்பெயர்கொண்மகளைநறு மஞ்சடிமிர்ந்துகனைக்காலி
னேயக்கிடத்திநீராட்டி யினைக்கணுந்திரூதி
நேயத்துகிலின்மெய்துடைத்து நெகிழ்மென்மூலையோடுறத்தழுவி
வாயிற்றிவலைகொடுதேய்த்து * மண்பொட்டணிந்துநீறிட்டு. 46

கண்ணிற்கமையமையெழுதிக் காற்குச்சதங்கைபொற்றண்டை
நண்ணப்புனைந்துபொன்னரைஞா னடுவிற்பூட்டிப்புலியுகிர்சேர்
வண்ணப்பசும்பொனணிமார்பில் வனைந்துசிறுமென்றொடிசேர்த்திப்
பெண்ணிற்கரசிதிருநுதற்பொற் பிறைமேற்சுட்டியொன்றணிந்து.

போக்கும்பொருளாற் † கண்மிச்சில் போக்கியன்பான்மூலையூட்டித்
தூக்கும்பவளக்காற்பசும்பொற் றொட்டின்மலியக்கிடத்தியே
பார்க்குஞ்சுவைவானமுதமே பார்வேந்தனியேயென்றுயரந்
தீர்க்குங்கரும்பேகண்மணியே திருவேயென்றுசீராட்டி. 48

மிடியனுருசெய்யானளச்செய் வினையக்காக்குஞ்செயல்போலப்
படியில்கல்விவிரும்பினுன் பாடம்போற்றுமதுபோல
வொடிவில்செங்கோன்மனுவேந்த னுலகம்புரக்குமுறைபோலக்
கொடியநோன்புசெய்தீன்ற கொடியையளர்த்தாண்மோகினியே. 49

மாயை வளர்தற்சிறப்பு.

கள்ளமாயைதன்னெழில்போற் கண்டதில்லையென்னுமிக
வுள்ளம்வியந்ததலையசைப்ப தொப்பவசையுஞ்சுடர்பாத்து [து
மெள்ளவிரலொன்றனைச்சுவைத்து ‡விளிர்பூஞ்சதங்கைத்தாளுதைத்
விள்ளுமலர்வாய்குவித்தழுது மீளநகைத்துங்கிடக்குமால். 50

* மண்பொட்டு - சாந்துப்பொட்டு.

† கண்மிச்சில் - கண்திட்டி.

மாயைகவிழுமுகங்கவிழ்ந்த மதனனிருந்தானவளிருப்பப்
போயசிலையொன்றெடுத்தெழுந்தான் பொன்னுலியன் பாவையெழ
மேயவனங்கவேடனந்தான் வேந்தன்பயந்தமகணடப்பத்
தாயதவஞ்செய்தைந்தவித்த தறவினேர்பாலோடினன். 51

குழலும்யாழுமினியவெனக் கூறுவண்ணமென்கனிவாய்
மழலைமொழிந்தமுடற்கின்ப மருவவோடிமேல்விழுந்தம்
விழையுமமிழ்தின்மிகவினிமை விளையநுகருஞ்சுவையடிகில்
செழியசிறுகையாலளந்துஞ் செய்தாண்மோகமீன்றுரை. 52

பரவுபெருஞ்சீரல்லமனைப் பற்றவந்தமதியாற்றன்
னுருவநிழலைப்பற்றினேந் தோடியோடிக்கலுழ்ந்திடுவாள்
பொருவின்மதியமேன்முனிந்து பொங்குமழலைவீசாமன்
மருவியுறவுகொள்வாள்போல் வாவாவென்னவழைத்திடுவாள். 53

மாயை பேதும்பைப்பருவ மடைந்தமை.

மாதிப்பரிசுதந்தைதாய் மகிழவளர்வுற்றரசிருந்த
நீதிக்கிழவளிறப்பவ னெரிசேரிளஞ்சேயவன்றவிசின்
மீதற்றதுபோன்முன்முளைத்த வெண்பல்விழவேறெயிறுதிப்பப்
* பேதைப்பருவங்கடந்துமேற் † பெதும்பைப்பருவநண்ணினுள்.

அப்பருவச்சிறப்பு.

செய்யவல்லகம்மியன்செய் சிங்கஞ்சுமந்தமணியணைமேற்
பையவந்துமணிமௌலிப் பார்வேந்திருக்கும்பரிசுபோல்
வெய்யகுதம்பைவளர்த்தகல விழுநீர்வள்ளைக்காதினிடைத்
தய்யபசும்பொன்மணிகுயின்ற தணைத்தோடமையத்தோன்றினுள்.

பருவத்தின் வளர்ச்சி.

மட்டுக்கணைவேளரணுக வளர்த்தகுழற்காடலர்விரவிக்
கட்டுற்றதுரம்பரன்களத்திற் கடுவும்விழிகள்சிறிதுற்ற
முட்டித்தறவாம்பறவைமயன் முடியிற்படுதன்மெல்லமறைந்
தெட்டிப்பார்ப்பவெனமுகங்கொண் டெழுந்தமார்பினிளமுலைகள்.

அன்னநடையுமன்னமிலா வையர்நடையுந்தளர்வெய்தக்
கன்னிநடக்குநடைகற்றுள் கரும்புகசக்குமொழிபெற்றுண்

* பேதை - ஏழாண்டளவிற்று.
† பெதும்பை - பன்னிரண்டாண்டளவிற்று.

மன்னுமலர்வீழ்சுரும்பனைய மைந்தர்பார்வைக்குறிப்புணர்ந்தா
டன்னையரியலெனவறிந்து தானேமனத்திற்றருக்குற்றான். 57

இந்தக் * கன்னிமதிமுழுநோக் கெய்திச்செவ்வாய்வலியடைந்து
சந்தச்சிங்கந்தனையடுத்த தக்கவரவின்வலிசார்ந்து
முந்தைக்கொடிமீனத்தலைவன் முனிவராகும்பகைவெல்லக்
கந்தப்பகழிபலவேழக் கருப்புச்சிலையிற்றொடுத்தனனால். 58

மங்கைப்பருவ மடைந்தமை.

பாகமாகப்பொங்கியெழும் பதமேபோலப்பொங்குமெழின்
மோகமாயைதன்புருவ முன்னிமுடிவேந்தயனுமா
லாகுமாடமொன்றுபுரிந் ததன்கட்கல்விபற்பலவும்
போகுமாதர்பலர்சூழப் போற்றியிருப்பச்செய்தனனால். 59

அவள்பொழுது போக்குறைத்தமை.

வே று.

வாய்த்தளவம்மணி மாடநண்ணுபு
பாத்தொடைபற்பல பயின்றுந்திரி
நாத்தனியாழைமா ணுக்கனென்றுதான்
பேர்த்துளர்விரல்களாற் பேசுவித்துமே. 60

அங்கொருமடவர லதிர்ப்பத்தண்ணுமை
மங்கையர்சிலரிசை மாபிற்பாடுறக்
கொங்கவிழ்மலாளி குமுறத்தென்றலாற்
பைங்கொடியசைதல்போற் பாடியாடியும். 61

வருமூலியிறைக்கிணை யாகவந்துறக்
கரமெனுமேவலன் புடைக்குங்காட்சிபோல்
விரைமலரோதிமேன் மிஞ்றிரைந்தெழப்
பருமணிகுயின்றமென் பந்தடித்துமே. 62

பூந்தொடைவார்குழல் புனைந்துநல்விரைச்
சாந்தமுநானமுந் தயங்கப்பூசியு

---

* கன்னியிலிருக்கிற சந்திரனது முழுப்பார்வையும், அங்காரகபலமும், சிங்கத்திலேயிருக்கிற இராகுவலியுமாகிய கோசரபலன் பார்த்துப் போர்க்குச்செல்லுகிற அரசரதுசெய்திதோன்ற; மன்மதனும் முனிவராகும் பகைவரை வெல்ல நாட்பார்த்து மலரம்புகளைக் கருப்புச்சிலையில் தொடுத்ததாக உருவகப்படுத்தினர்.

மேற்றிழைபலவுறப் பிசையத்தாங்கியு
மாற்றுசுவைபல வகையமாந்தியும். 63

தீங்கனிபாலொடு செம்பொற் * பஞ்சரந்
தாங்குறுபைங்கிளி யூட்டித்தன்மொழி
யாங்கதுபயில்வுற வளித்துங்கற்பகப்
பூங்கொடியனையவள் பொழுதுபோக்குநாள். 64

மணத்தலைவனைத் தேர்தல்.

தென்னவன்செம்பியன் சேரன்கொங்கண
மன்னவன்மள்ளவன் மகதநாட்டிறை
யென்னுமிங்கிவர்தமு ளியாவர்கண்ணதோ
கன்னிதன்மணவினைக் கடனென்றுன்னியே. 65

ஆய்ந்திருந்தனன்மம காரணமிடைப்
பேர்ந்தனனவன்குரு வாகப்போற்றுறுஞ்
சாந்த † வாங்காரனுந் தருதிப்பேரினென்
வேந்தனுமெதிர்கொளீ இ விதியிற்ருழ்ந்தனன். 66

மன்னவன்வந்தன மரபிற்கொண்டவன்
கன்னிதனைழினலங் காணப்போயினு
னன்னவளெதிர்நடந் தாரியன்றனைச்
சென்னியின்வணங்குபு சிறப்புசெய்தனள். 67

‡ மாந்தளிராலிலை வயங்குகோங்கரும்
பேந்தெழின்மரைமல ரெய்தியற்புதப்
பூந்துணர்வல்லிநேர் பொன்னைக்கண்டவ
னேர்ந்தனன்காரண மாதென்றுன்னியே. 68

மாதருவுறுகுறி மதித்தறிந்தவ
னுதரவொடுமுடி யரசைநோக்கினின்
கோதையையார்கொலோ தோளிற்கொள்பவ
ரோதுகவென்றலு மூரைத்தன்மேயினன். 69

உணர்ந்திலனடியனே னெருநங்கோதைதன்
மணந்தனக்குரியவர் மனிதர்வானவர்
கணங்களுளொருவரைக் கருத்திற்றேர்ந்துநீ
யிணங்குறவெனக்கிவ ணியம்புகென்றனன். 70

---

* பஞ்சரம் - கூடு. † அகங்கார வழித்தாய் மகாரம் நிற்பலின் ஆங்காரனைக் குருவென்றார். மாந்தளிர் முதலியன ஆருபெயராய் மேனிமுதலிய உபமேயப்பொருளைக் குறிக்கவைத்தமையறிக.

* கொங்கவிழ்தொடையினுய் கூன்கொக்கன் றுவான்
கங்கையையடைவது கடவுளன்னமே
மங்கையையணைபவர் மனிதரல்லர்நஞ்
சங்கரனேயிவ டலவனென்றனன். 71

† மாலுநான்முகனுநா டறியவள்ளலிவ்
வேலவார்குழலினுட் கெளியனெனவென
வாலமார்மிடற்றினே னன்பர்வேண்டிய
கோலமாய்நணுகுமீ தண்மைக்கூற்றென்றன். 72

மாயைக்கு உபதேசஞ் செய்தமை.

இன்னணமரசனே டியம்பிமாயையாங்
கன்னியையிளித்தவள் கருத்திணங்குறச்
செங்கிலதனேயுப தேசித்தேகினன்
றன்னிகர்குருபான் றனதிடத்தரோ. 73

குருவருண்மொழிநெறி கொண்டுமாயைதான்
வரவனவசைநகர் மதுகைநாதனைப்
பரவினளருச்சனை பயின்றுபூசனைக்
கருவிகண்முழுவதுங் கடைப்பிடித்தரோ. 74

மூன்றுவது,

மாயையினுற்பத்திகதி

முற்றிற்று.

கதி-ஈ-க்கு திருவிருத்தம் - கடுஎ.

---

* கொங்கு - வாசனை. வான்கங்கை - ஆகாயகங்கை. † மாலும் நான் முகனும் நாடரியதென்றது வராகமும் அன்னமுமாகித் தேடியறியாததனை. அது "விஷ்ணுர்வை வாராகம்" எனவும், "ப்ரஹ்மாவை ஹம்சோபூத்வா" எனவும் வரூஉம் இருக்குவேத வசனங்களானறிக.

சிவமயம்.

நான்காவது,

மாயைபூசைகதி.

பதியைமேவுறுங்காதனெஞ் சகத்தினுட்பதித்து
மதுகைநாதனேவரன்முறை வரிவிழிமாயை
யுதயகாலையிற்பூசைசெய் நாட்களுளொருநாள்
விதிசையோதுவன்குலிமனத் தவர்கொளவிரித்து. 1

சூரியோதய வருணனை.

விதுவைச்சேய்மையிற்கண்டலர் குவளைகண்மெலிய
முதிர்விற்பூணிளமூலையெழின் மாயைதன்முகமா
மதியைச்சேர்தருவரிக்கருங் குவளைகண்மலரக்
குதிரைத்தோவனெழுந்தனன் குணதிசைக்குன்றில். 2

அனையகாலையிலன்னமென்றூவி பெய்யணைமேற்
றனியண்மாமயில்போற்றுயின் றவடியிறணர்ந்து
வினையினுன்மலி யஞ்சனச்சாலையுண்மேவி
யினியவாசநீராடினள் சேடியரேந்த. 3

மாயையின் அலங்காரச் சிறப்பு.

விலவரம்பறியாமணிக் கோவைசூழ்விளிம்பு
கலையணிந்தொருதலை மூலைமேலலங்கரித்தாண்
மூலையொடுங்குகில்கண்ட நாண்முதற்றொடர்ந்தன்றே
விலகுறுங்கலைவல்லவர் கடபடாமென்றல். 4

மணியமைந்தபொற்பாதுகை யொருத்திமுன்வைப்பப்
பிணியவிழ்ந்தசெந்தாமரைப் பதங்கொடுபெயர்ந்தே
யணியணிந்திடுமண்டபத் தணைமிசையயர்ந்தாள்
பணியணிந்திடுமங்கைய ரடைந்தனர்பலரே. 5

மாரவேள்சிலைவளைந்திடப்பூட்டியவண்டு
நாரியோர்தலைநெகிழ்த்துவிட்டெனவொருநாரி
நாராவரமலர்க்குழற்சடைகைபுனைந்தியற்றி
வீரவேனெடுங்கண்ணிதன் முதுகுறவிடுத்தாள். 6

பின்னும்வேணிவார்குழலெனுங்கரியபேரரவ
முன்னமார்தருசுடர்களையுமிழ்ந்திடுமுறைபோற்

கன்னிவாணுதன் மிசைக்கதிர்பிறையொடுகவினப்
பொன்னவாஞ்சுணங்கவிர்மூலையொருத்திகைபுனைந்தாள். 8

* ஓதியாகியவறன் மிசைச்சுவடுறவூர்ந்து
தீதிலாதவொண்சந்தனத்திலகவெண்மதிக்குப்
போதுமோர்சிறுபரம்பெனமயிர்வகிர்ப்பொருந்தச்
சோதிமாபணிச்சுட்டியொன்றுருத்திதூக்கினளால். 8

† வேனலம்பதிகொலைவிடமூட்டியவெவ்வேன்
மானவஞ்சனமெழுதியவிழிபொரவாலாற்
றூனதன்பகைதனைத்துணைகொண்டுறுத்தகைபோற்
பானலஞ்செவிமிசையணிந்தனளொருபாவை. 9

அடுத்தமாதவமழிமினென்றனங்கவேடமக்கு
விடுத்தவோலையைக்கண்கடம்மேற்பழிவிளம்பிற்
கொடுத்தவேண்மிசைநிந்தைகூறுதற்குவைத்திருத்தல்
கடுத்துவாழ்தரவொருத்திபொன்னோலைகாதணிந்தாள். 10

தன்னைநிந்தைசெய்வெண்ணகைமேற்பழிசார
மன்னியங்கதுகிரவாழ்மனைவாய்தன்
முன்னிறந்திடுவேனென ‡ ஞான்றுகொண்முறைமை
யென்னவெண்மணிமூக்கணியொருத்திநின்றிட்டாள். 11

கற்றையங்குழனறுமலர்த்தொடையொடுகமா
யுற்றணங்குமென்றிலகுபூண்பிடித்ததைபொப்ப
விற்றயங்குவாணுதலெழின்மாயைதன்மிடற்றிற்
பொற்றடந்தகட்டணியொருமடவரல்புனைந்தாள். 12

$ கன்னியத்தனம்வந்தினமணிக்கற்கடகத்தின்
மன்னியற்றதற்புதமெனவேபலகாக்க
வின்னுதற்கருங்கண்மடமாதகைவிளங்கப்
பொன்னினற்கடகம்புனைந்தனளொருபூவை. 13

ஆயுமின்சுவைதரச்செலுங்கையுடனேத்து
வாயினெண்கவின்காணியமருவுறுமாபோன்
மாயைதன்கையிற்பொற்கடகத்தின்முன்வனைந்தா
யேசெம்பவளங்களைக்கோத்தொருதேரகை. 14

---

* ஓதி - கூந்தல். அறல் - கருமணல்.
† வேனலம்பதி - மன்மதன்.
‡ ஞான்றுகொள் முறைமை - தாங்குதலைக்கொள்ளுந்தன்மை.
$ கன்னியத்தமென்பது முதல் உற்றது என்பதுவரையில்சிலேடை

மங்கலத்தொழிலாடவர்மனநடக்கிற்காக்
ருங்குமப்பெருஞ்சேற்றினைக்குறித்திடுகற்போன்
மங்கையர்க்கொருதிலகமாகியவெழின்மாயை
கொங்கையிற்புனைந்தனளொருபெண்மணிக்கோவை. 15

பாயும்வெண்டிரைக்கருங்கடனிலச்சுமைப்பாம்பி
னுயிரம்படங்களுந்திறையிட்டனவனைய
மீயிலங்கொளிவிரிமணிமேகலைவேய்ந்தாண்
மாயைமங்கைதனல்குலினுருதிருமடந்தை. 16

கறையடிக்களியானையின்வரவினைக்கண்டு
மறுகினுற்றவரிரிதரமணிமருங்கிடல்போ
லுறுதவத்தினரிந்தனரோடவொண்ணுதற்கு
நறுமலர்ப்பதத்தணிந்தனள்சிலம்பொருநங்கை. 17

கூடைமென்மலர்மணத்தினுலறிந்ததைக்குறுகப்
பாடும்வண்டினஞ்சூழ்தல்போலினஞ்சூர்கண்பரப்பத்
தேடரும்பொருளனையவட்குறுநறுந்தேய்வை
பீடுறுங்குவிமூலைக்கணிந்தனளொருபேதை. 18

நின்றன்விம்பமெனினக்கெதிரன்றிவேறில்லை
யென்றுகண்கொளத்தெளிந்தபோராடியொன்றெடுத்தாள்
குன்றெனுங்குவிமூலையவளெதிர்கொடுங்குழைமேற்
சென்றுசென்றுபாயரிமதர்மழைக்கணேர்தெரிவை. 19

வீரவேல்வலையாதசெங்கரும்பவன்வில்லி
னரிமேலிடாமலர்மறுவிலாநகைமதியங்
காருருதமின்கடற்பிறவாதவின்னமுகம்
வேரிலாதபூங்கொடியெனவிளங்கினண்மாயை. 20

மாதரிவ்வகையணியலுமதுகைநாயகன்றன்
பாததாமரையருச்சனைப்பொருள்கள்பற்பலவு
நீதியாலமைந்தனவினிகரிலெம்பிராட்டிப்
போதுவாயெனவொருமடமாதெதிர்புகன்ருள். 21

மாயை பூசைசெய்வான் போதல்.

மயிலெழுந்தெனவெழுந்தனள்கோமகள்வாழ்த்திக்
குயிலெழுந்தெனவெழுந்தமடந்தையர்குழாங்க
டியிலெழுந்தெனவெழுந்தனதூபுரத்தழனி
வெயிலெழுந்தெனவெழுந்தமணியணிவிளக்கம். 22

பொன்னிலங்கியசிவிகைமுன்கொணர்ந்தனர்பொறுப்போர்
மன்னியங்கதையேறினண்மதர்விழிமாயை
சின்னம்வெண்பணிலம்பணே தண்ணுமைதிமிலை
முன்னிரைந்தனமதியெழக்கடன்முழங்குதல்போல். 23

ஆன்றிரட்டுறுங்கண்ணன்வாய்க்குழலிடீதணிபூண்
மான்றிரட்டுறுமெனக்குழலூதினர்மலர்விற்
கோன்றிரட்டியவமுதனேயாண்முனங்குறுகி
மூன்றிரட்டியமுகமுடைமுருகனுமுருக. 24

வயங்குமாயையங்கரும்பினிற்சூழ்ந்தவர்மாவி
னுயர்ந்தமாதராசூற்றிருந்தொழுகுகண்மலரை
நயந்துசூழ்தருமளியினண்ணினர்பிறர்காலா
லியங்குமாதிருபுடையினுமிடையறவீண்டி. 25

வேளளித்தனன்றன்குடையெனக்குடைவிதிர்க்கும்
வாளெனப்பிறழ்மதர்நெடுங்கண்ணிபான்மருவக்
காளமொத்தகண்மடந்தையர்பலரிளங்கமுகின்
பாளையொத்தவெண்கவரிவீசினரிருபாலும். 26

காமவெந்தழன்மூட்டல்போற்கடிமலர்ச்சிலிறி
தாமசந்தனபொய்க்கணைசொரிந்துயிற்றுக்கைக்
கோமகன்றிருந்திழையுளமறிதல்போற்குறுகிப்
பூமடந்தையவென்றவர்பூமழைபொழிந்தார். 27

பாருவெள்ளிலைசந்தனங்குங்குமம்பளித
மோகைமான்மதம்வண்டிமிர்நறுமலரொலியல்
பேர்கெழும்பணிப்பெட்டிமென்றுகிலுடைப்பேழை
தோகைமார்பலர்மருங்கினிற்சுமந்துபோயினரால். 28

கொங்கையங்குவிமுகிழ்விழிக்கயலிதழ்க்குமுத
மங்கையும்புயமூந்தியஞ்சுழியிவையடித்துப்
பொங்குறுங்கவினீர்பெருகாற்றினைப்புரையு
மங்கலந்திகழ்வுறுமணிமாளிகைமறுகு. 29

திங்கள்வாணுதன்மடந்தையர்செஞ்சிலம்பொலியுஞ்
சங்கினோடணிகலன்களின்சிற்றொலிதாமுங்
கொங்குலாமலர்த்தொடையளியிசைகளுங்குழுமிப்
பொங்குமாழியிற்பரிபுரிபெருகுதல்போன்று. 30

துன்றுபெண்படைசூழ்வரமாயையந்தோகை
வென்றியங்கனன்மழுவிலுன்விழியினல்வேளைக்
கொன்றதென்னெனக்கேட்பமென்றுளவலிகொண்டு
சென்றுறுஞ்செயலென்னவத்தருவிடைச்சென்றுள். 31

மாயையினயவெள்ளத்தைக்கண்டு ஆடவர் மயங்கல்.

வேறு.

அரிமதர்மழைக்கணல் லரிவைதன்புடை
வருமடவரலியர் வனப்புக்காண்டலு
மெரிபுரைவிழியரி யேறுபோல்பவர்
கரிநுகர்வெள்ளிளங் கனியையொத்தனர். 32

இடையொருசற்றுவா னுதல்சற்றேழையர்
படைவிழிசற்றுவாய்ப் பவளஞ்சற்றிணைக்
குடமொருசற்றிவண் கொள்ளைகொள்ளநம்
புடைபெயரறிவெலாம் போயிற்றேனென்பார். 33

இனத்தியல்பாமறி வெண்பதன்மையே
மனத்துயர்செயுமயன் மாற்றுநீறுதா
னனிச்சமெல்லடியினர் நுதலதெத்தலும்
பனித்துடல்வெதும்புமால் படுத்தலானென்பார். 34

தொல்லைநஞ்சடர்துயர் சொல்லக்காத்தவன்
வல்லிபங்குடையருண் மதுகைநாயகன்
செல்லுமங்கையர்விழி நஞ்சுசெய்வதுஞ்
சொல்லுதமவனுடு தொழுதுநாமென்பார். 35

இக்குழுமகளிருள் யார்வனப்பினுன்
மிக்கவளெனத்தமை வினவினுரெதிர்
மூக்கனிகளுட்சுவை முதிர்ச்சிபெற்றுள
தெக்கனியதனீ ரியம்புவீரென்பார்- 36

கரும்பினுமினிய * செங்கயற்கணினங்
குரும்பையும்பயன்படாக் † கோவைதன்னையும்
விரும்பினமுலகர்முன் வீணினெஞ்சகம்
வருந்துதனகைதரு மடவையேயென்பார். 37

விடங்குலாம்தர்விழி விரைத்தண்பூங்குழ
னுடங்குநூலிடைப்பிறை நுதற்பொற்கொம்பனூர்

* சொற்கயற்கணர் எனவும் பாடம். † கொங்கை எனவும்பாடம்.

குடங்கணணுறுமினங் குவவுக்கொங்கையோ
லுடம்பெலாமுடிஞ லுய்யலாமென்பார். 38

இவ்வணங்கருத்தழிந் திளைஞர்மாழ்குறக்
கொவ்வையங்கனியிதழ்க் கோதைமாமொடு
மெளவலங்குழலெழின் மாயையென்பவ
ளவ்வரன்கோயிலி னருகுபோயினள். 39

சிவிகையினிழிந்துதன் சென்னிதாங்கிய
குவிகையினெடுபுகாக் கோபுரத்துள்வெண்
கவிகையனெனுமம காரன்கன்னி * கட்
செவிகையினணிபர னெதிர்சென்றளரோ. 40

மாயைபூசை புரிதல்.

வேண்டியவனேத்தையு மேவன்மெல்லிய
ராண்டருகுறவமைத் தளிப்பமாயைதான்
காண்டகுநுதல்விழிக் கடவுட்கன்புளம்
பூண்டனளருச்சனை புரிதன்மேயினள். 41

ஆதியவரன்முறை செய்தருக்கிய
மாதியகொடுபர னணிந்திருந்தபூ
வாதியகளைந்துமந் திரமறைந்துநம்
மாதியைமஞ்சன மாட்டன்மேயினள். 42

வேறு.

தயிலமுடனுனிடத்தைந்தையமுதநறுநெய்பாறயிர்செழுந்தேன்
வயலினெழுகரும்புடைத்துக்கொள்சாறுபழம்பிழிந்தமதுரச்சாறு
புயலளவுதாழையிளநீர்நறுஞ்சந்தனக்குழம்புபோற்றுலி [ட்டி.
னியலினமைதபனமிவையொன்றன்பி னொன்றுமுறையிறைவற்கா

சங்குலவுமென்கைநெடுஞ்சுடரிலவேல் விழிமாயைசாம்பற்பூ
த்து, மங்கலமாகியமேனி முழுவதுஞ்சந்தனத்திரளைமலியச்சாத்தி
த், திங்களெனுமொருசிறுகூன் முதுகிப்பியீன்றதெனச்சினவெள்
ளேற்றுரன், கங்கைமுடிமீதினில்வெண் ணிலவெறிக்குநித்திலவக்
கதையுமிட்டாள்.

பிறைதவழுநெடுஞ்சடையெம் பெருமானேச்சார்ந்துசர்ப்பப்பி
ராந்திமேவ, ‡ நறைமலர்மென்றொடைமாலை பலவனேந்துகூர்ங்கோ
ட்டுநால்வாய்ச்சீற்றக், கறையடியீருரிசுமந்த திருமேனியழகுறநண்
கலைபுனைந்திட், டிறைவனெனும்பணிநாண வவிர்தணிப்பூண்பற்பல
வுமெடுத்தணிந்தான். 45

* கட்செவி கையின் அணி பரன் என்க. கட்செவி - பாம்பு.

‡ நறுமலர் என பிரதிபேதம்.

நற்றாமங்கமழ்நித்தியகல்லியாணிமணுளற்குஞானஞ்சாத்திப்
பெற்றானங்கடிதலிலாக்கறிமருவுபோனகங்கள்பிச்சையல்லான்
மற்றாரெனன்றில்லாதபெருந்தகைக்குநிவேதித்துவண்டுகிண்டி [ள்.
யுற்றாதுங்கடிமலர்மென்குழன்மடவாள் வெள்ளிலையுமுவந்தளித்தா

நறியபுகைசெழுஞ்சுடர்மென்சிவிறியொடுவெண்கவரிநாடுமோடி,
நெறிமுறையினெடுங்கடல்போ லியமுழங்கநின்றுதவி நிமலன்றன்
னைப், பிறைநுதலிவ்வகைபூசை புரிந்ததுதிபலசெய்து பெருகுமன்
பான், மறைபுகலுமஞ்செழுத்து மறைந்துவலம்வந்துமுனம் வணங்
கிப்பின்னர். 47

அன்பினுளமுருகிவிழிசொரிநீராலெழுதியமையழிந்திருப்பப் [து
பொன்புரையும்வடிவமயிர்பொடிப்பவியர்வாணுதலின்பொட்டழிந்
மின்புரையுநெடுஞ்சடிலப்பொன்மலியினுனந்தவெள்ளமூழ்கி
யின்பினடிப்பவளென்னவந்துநடநவிலரங்கிலெய்தினுளால். 48

அரங்கினிடைநடநவிலுஞ் செயற்கேற்பவுடையணிந்திட்டரும்
பைவென்ற, குரும்பைமுலையினேவம்பு கொண்டணிந்துதவங்களெல்
லாங் கொள்ளைகொள்ளுங், கருந்தடங்கண்மலர்க்கோதை சிற்றடியிற்
கைபுனையக்கற்றமாதர், சுரும்புமுரன்மல்லிகைமென் போதினையசி
றுசதங்கைகளங்கவார்த்தார். 49

மாயைமூலக்கிணையெனவென் முன்றனும்வந்தெனவலக்
கைத்தாளம், போயிடக்கைத்தாளமதைப் பொருமையினுற்றுக்குதல்
போற்புடைத்தொலிப்ப, வாயுரைக்குமொழிபோலத் தண்ணுமைசெ
ங்கைகளால்வார்த்தைசொல்ல, மேயகூலப்பொண்விளர்ப்ப வெழின்
மாதரிசைபாடவீணைகொண்டு. 50

என்னெருகையொடுமற்போர்புரிகவெனநிற்பவள்போலிடையி
னேர்கை, மன்னியுறவைத்தொருகை நீட்டியானெதிர்நின்றுமாயை
வல்லி, கன்னன்மதன்றனேவருகவெனவிளித்தல்போற்றழங்கக்காற்
சதங்கை, பொன்னினியலொருபாவை நடிக்கின்றதென்னகடம்புரி
யலுற்றாள். 51

வேறு.

தண்ணுமைவிளங்கலுறு தாளமிசையெல்லாம்
வண்ணமலர்மெல்லடி வழிச்சதியினிற்பக்
கண்ணினைகொள்பல்வகோல கைவழிநடப்பப்
பெண்ணமுதமன்னவள் பெயர்ந்தனணடித்தாள். 52

வாயுரைசெய்சொற்பொருண் மலர்க்கரமுரைப்ப
மீயுயர்விசும்பினெழு மென்புனலியெல்லாம்

பாயொளியபஞ்சமு பதத்துறமித்துப்
பேயொடுநடித்தவிறை பித்துறநடித்தாள். 53

* அந்தணனிருங்கலை யணங்கினையுமிழ்ந்தான்
சென்திருவைநேமியிறை சீயனெலுத்தா
னிந்திரனருஞ்சசியை யெண்ணிலன்மறந்தான்
பைந்தொடிநடிப்பரர் பட்டதெனுரைப்பாம். 54

பொன்னெயிலிஞ்ஞ்ரிய புழைக்குண்முகம்வைத்துந்
தண்ணிமுனர்நின்றவவர் தோளிணை யிவர்ந்து
மின்னெனநடம்புரியு மெல்லியன்மருங்கு
லென்னும்வெளிகாணிய விடர்ப்படுவர்மைந்தர். 55

பற்றுமனமோடியிரு பார்வையினுமெய்தி
மற்றையபுலன்களே மறந்துநடமாடும்
பொற்றொடியைநண்ணவுயிர் பொன்மதிலுறுப்பி
னுற்ற † பொறிபோலசை வொழிந்திளைஞர்நின்றார். 56

இளங்கொடிமருங்குலவ ளின்னணநடிப்பக்
களங்கனியைவென்றமணி கண்டனையருச்சித்
தளிங்குளிரருந்தவ னுவந்திறையணிந்த
வளங்கெழுமுசந்தமலர் மாலையொடளித்தான். 57

வணங்கிமதுகேசனிரு மாலியமதேற்றங்
கணங்குமடவாருட னரங்கிடையிருந்தா
னுணங்கிழைமருங்குன்மிக நோமெனவிரைந்து
பிணங்குறுசதங்கையழு பிள்ளையினடங்க. 58

மைத்தடநெடுங்கணிள வல்லிநிகர்மாயை
பத்தியொடருச்சனை பயின்றதையறிந்தா
னித்தனுலகெங்கணு நிறைந்தவனருளி
முத்தனருளல்லம முதற்பெயரினானே. 59

நான்காவது,

மாயைபூசைகதி

முற்றிற்று.

கதி-ச-க்கு திருவிருத்தங்கள்-உகக.

---

* அந்தணன்-பிரமன்: † பொறிகளாவன-வாயில், கருவிராகம், கல்லுமிழ்கவன், பரிவுறவெங்நெய், செம்புருக்கு, கல்லிடுகூடை, தாண்டில், காய்பொன்னுலை, தொடக்கு, ஆண்டலையடப்பு, கவை, கழு, புதைபுழை, ஐயவித்துலாம், கைபெயரூசி, சென்றெறிசிரல், பாண், பன்றி, எழுவுஞ்சீப்பு, கணையமரம், சதக்கினி, குடப்பாம்பு, தள்ளி வெட்டிமுதலாயின.

ஐந்தாவது,

பிரபுதேவர்வந்தகதி.

* நிரந்தாமடியார்வேண்டு நினைவெலாநிரப்பாகின்ற
பெருந்தகையல்லமையன் பெயர்ந்தொருமனிதனாகி
வருந்துறுமயன்மனத்தால் வந்தனைபுரிந்தாடன்பாற்
பொருந்துறுபவன்போற்செய்த புணர்ப்பினைப்புகன்றுரைப்பாம்.

தாமுறுநகர்வும்வீடுந் தந்திடவல்லன்றானே
யாமெனவியம்பலாலே யல்லமதேவனுண்மை
நாமமுமறையவேறோர் நாமமுற்றம்மாயைக்குக்
காமியவினைப்பயன்றான் கடைப்பிடித்தருளவெண்ணி. 2

கதந்தருதிருநுதற்றீக் கண்ணினுனீறுபட்ட
மதன்செயல்செய்யவன்னேன் வடிவுதான்கொண்டதென்ன
முதிர்ந்தழலாழுகுமாறு முகங்களுட்சிறந்தவென்றே
டெதிர்ந்தளமுருகனென்ன விளமையோடழகுவாய்ப்ப. 3

அவிர்சடைமுனிவர்மாத ரழுங்குறக்கொண்டகோலங்
கலினுமிவ்வடிவங்கொள்ளக் கற்றுமுன்விட்டதென்னக்
குவிமுலைமகளிராவி கூட்டுணுங்கோலமென்னப்
புவியுறுமிரவியென்னப் பொங்கொளியுருவொன்றுற்றான். 4

விளிம்புறநடுக்களங்கம் வீழ்ந்தசூழ்மதியொன்றுண்டேல்
வளங்கெழுமயிரொழுங்கு வள்ளல்வாண்முகங்கர்க்குந்
தளங்குறுமுந்திமேற்போய் மார்பிடைத்தோன்றுரோம
மிளங்கருநளினமுண்டே லெய்க்குமென்றியப்பகின்றான். 5

† விலவரம்பறியாவாடை விரித்துடுத்தரையிலங்க
மலைவரும்புதியசந்த மான்மதங்காதநாறக்
கலைவரம்பறிந்தோர்தங் கருத்தினுக்கரிதாயென்புன்
றலைவருங்கமலப்பொற்றா டம்பிரான்மலியச்சாத்தி. 6

தளிர்த்ததண்பொழிலிற்றேமாந் தடஞ்சினைக்குயின்முகம்போற்
றுளித்தலைமுகில்கவற்றுஞ் சுரிகுழற்கழியார்த்திட்

---

* நிரந்தரம் - எஞ்ஞான்றும். † இப்பாட்டுமுதல் ஆறுபாட்டு வரைக்கும் ஒரு தொடர்பு.

டளித்தொடர்மாலேவேய்ந்தவ் வலங்கலேனக்குறுவோர்க்கெல்லாம்
வெளிற்றுரைப்பொருள்போற்றேன்ற மென் * றலைச்சாத்தணிந்து.
களத்திடையிருப்பினுண்மை காண்குவரென்னவாலங்
† குளத்திடைவாங்குவைத்த கொள்கைபோற்றிலதந்தீட்டி
யொளித்தனிமதிதன்பாங்க ருரோணியோடொருபெண்கூட்டி
யளித்துறவைத்ததென்ன வணிமணிசெவிக்கணிந்து. 8
வீலையிவ்வெண்டாளக்கோவை வீரசங்கிலிகேயூர
மிலகுசெம்மணிப்பொன்னூழி யிவைமுதலாயவெல்லாக்
கலனுமொண்கவினனுஞ்செங் கனலிற்பெய்நறுநெயென்ன
மலவினங்குருகுகேசன் வயங்குறுப்பெலாமணிந்து. 9
இந்திரதிருவிற்கேற்ற விலக்கணமுழுதும்வாய்த்த
சுந்தரகுமரற்காவா விதனேத்தான்சுமப்பதாக
வந்துளதெதுகொலோவென் றெண்ணிமானுடர்மயங்க
நிந்தையின்முதுகின்பாற்றண் ணுமையொன்றுகழத்தாங்கி. 10

அல்லமதேவர் மத்தளமுழக்கியது.

சென்றருண்மருகைநாதன் றிருமுன்வான்சுடர்வலஞ்சூழ்
குன்றுறழ்கொடிநெடும்பொற் கோபுரத்தெதிர்போய்நின்று
மன்றிடைநவில்கூத்தாடி மத்தளத்தொழில்கைக்கொண்டா
னென்றுளமருளவெங்கோ னெறிந்துதண்ணுமையதிர்த்தான். 11
உரலசைந்திடாதடக்கி யுறியினெய்யெடுத்தயின்றூன்
குரலசைந்தூதுமோர்வேய்ங் குழன்மொழிமாதர்மாழ்கச்
‡ சிரலசைந்தாடாநின்ற சிறகர்போன்மத்தளத்தை
விரலசைந்தறைதலன்றி மெய்யசையாமணின்றூன். 12

மாயை மத்தளவோசைகேட்டு யாரென வினவல்.

சுத்தமெய்ஞ்ஞானநந்த சூரியன்கரத்தாலார்க்கு
மத்தளமுகின்முழக்க நடித்தறுமயில்கேட்டம்மா
வித்தரைமனிதர்கையா லெஞ்செவிப்படாதிருந்த
புத்தொலியிதுவென்றுள்ளம் வியந்திதுகலுமன்றே. 13
மோட்டிளமூலையீரின்ன தண்ணுமைமுழக்கங்காதாற்
கேட்டிலமிவ்வாறுண்டென் றுரைப்பவுங்கேட்டிலேமால்
வேட்டலகானேத்துநின்று வியக்குமிவ்விஞ்சைகற்றுக்
காட்டியவவன்யார்கொல்லோ காண்கவென்றணங்குரைத்தாள். 14

---

* தலைச்சாத்து - தலைப்பாகையெனக் கிராமியமாக வழங்குகின்றது. † குளம் - நெற்றி. உரோகணி என்பது உரோணி என மருவிற்று. ‡ சிரல் - சிச்சிலிப்பறவை.

மாதர்வல்விரைந்துசென்று மத்தன * முழக்காநின்ற
சோதியைவிழியாற்றுஞ்செய் தொல்லைமாதவத்தாற்கண்டு
காதொடுபொருதுமீளுங் கயனெடுங்கருங்கட்செவ்வாய்க்
கோதைதன்மருங்கின்மீண்டு வந்திதுகூறலுற்றார். 15

கற்றதன்விஞ்சைபோலக் கலினுகாங்கண்டதில்லை
விற்றொழிலங்குவேளே மேனிகொண்டடைந்தானென்ன
வுற்றனளொருவனென்ன வொண்டொடிவிளிமினென்றுண்
மற்றவர்விளித்துவந்து மாயைமாதெதிர்விடுத்தார். 16

மாயை அல்லாமற்கண்டு மயங்கல்.

அங்நிலை † யலமலுமத் தண்ணலைக்கண்டபோதே
செங்நிலமுகுநீர்போலச் செல்விமான்மயமேயாகிப்
பொன்னவிரொருபூம்பாவை போன்றசைவறவிருந்தாள்
கன்னல்வின்மதவேளெய்து கையிலோத்தருகுன்றுன். 17

மயக்குமென்பதுபோய்மாயை மயங்குமென்றிடவிருப்ப
வியக்குநின்றேயம்யாது வீரவேளனையாயின்பம்
பயக்குநின்பெயர்யாதெங்குப் பயின்றறைகுவைசொல்லென்னு
நயக்குமென்மொழியார்கேட்ப ஞானவாரிதியுரைக்கும். 18

செல்லுறழ்குழலீர்தேய மோ ‡ பரதேயஞ்சூளால்
வல்லவரென்னவந்தோர் வலிநிலையல்லவென்னு
மல்லமனென்பேரென்று மன்புசெய்பவரிடத்திற்
புல்லுவன்றொடர்பிலாம லென்றனன் $ பொய்ம்மையில்லான். 19

உலகுளவிஞ்சையெல்லா முணர்ந்தவெம்பிராட்டிதன்பான்
மலைவறவிஞ்சைகற்றோர் தம்மொடுமருவியப்பாற்
செலவினையொழிந்திருத்தி செல்வமோடையவென்னு
விலவிதழமுதமன்னரியம்பினரிணங்கும்வண்ணம். 20

தன்கனிவாய்திறந்து சாற்றவேண்டியசொல்லெல்லா
மின்குமுவனையமாதர் விளம்பலுமகிழ்வுற்றீசு
புன்சடைமதுகைநாதன் பூசனைப்பயனென்றெண்ணி
யின்குழன்மொழிமடந்தை யிருந்தனளுரையாடாமல். 21

---

* முழக்கிநின்ற எனவும் ஒக்கும். † அலமன்-அல்லமன். ‡ பரதேயமென்றது பயார்த்தம்—மேலாய தேயம். அதாவது:—இனிப் பூர்வபட்சப்படுத்தற்கியையாததேயம். எனவே சிதாகாயமெனப் பெற்றும். $ பொய்ம்மையில்லான்-பொய்யொழுக்கமில்லாதவன்.

மோகினிதவஞ்செய்தீன்ற முகிழ்முலைமாயைதன்கைப்
* பாகுவெள்ளிலையளித்துப் பரிந்தருகுமடைப்பைப்
போகியென்பவள்சிறந்த போகிபோனடித்துகின்ற
யோகிதன்கரத்தளிப்பித் தூரியனபலவுஞ்செய்தாள். 22

அடிக்கமலங்கள்போற்று மடியவர்வேண்டிற்றெல்லாங்
கொடுத்தருள்கருணைவள்ளல் கொண்டகோலத்திற்கேற்ப
நடிப்பவனுதலாலே நாமவேற்றடங்கண்மாயை
யெடுத்துதவுறுவதங்கை யேற்றனனிழிந்துளோன்போல். 23

வீடைக்கொடியமலன்றன்னே விடைகொடுபுறம்போந்தங்கண்
மடக்கொடிமதவேள்வாளி மருமம்பாய்ந்துருவகைந்து
கடக்கரிதாகியம்பொ னகைமணிச்சிவிகையூர்ந்து
தொடிக்கைநுண்ணிழைமருங்குற் றூழியர்சூழச்சென்றாள். 24

நண்ணிவெண்குடைவேந்தன்பா னடம்புரிதொழிற்கிசைந்த
தண்ணுமையல்லமன்றன் † சதுருரைத்துடனிருப்பக்
கண்ணகன்ஞாலங்காக்குங் காவலனிசைவுகொண்டு
பெண்ணமுதனபமாயை பிறங்குதன்மாடம்புக்காள். 25

வலம்புரிவளையனந்த மருங்குசூழ்ந்துறச்சிறந்த
சஞ்சலமிருப்பதென்னத் $ தமனியமணிமாடத்திற்
பொலங்குழைமகளிர்சூழப் பூந்தவிசிருந்துவீஞ்சை
நலந்தெரிபவள்போலெங்க னம்பனேடுரைவிழைந்தாள். 26

நினைவவன்புணர்ச்சிமேற்று நெடுங்கணேக்கங்கனன்ஞ
ணணிமிகுமகிழன்மேற்று நாவெறுங்கூற்றின்மேற்று
புனைமலர்வணர்வார்கூந்தற் பொற்றொடிக்கிதனுலன்றோ
மனமொழிமெய்யொருங்கு மங்கையரறியரென்பார். 27

நீதறுகழைக்கரும்பிற் றீஞ்சுவையிரதநீத்துக்
கோதினைவிரும்பிக்கொள்ளுங் கொள்கைபோ ‡ ஞவியின்கட்
போதறுமதம்விடித்துப் புன்மலங்கொள்ளுமாபோற்
பேதையெம்பிராஞன்முத்தி பெறுதுபுன்போகம்வேட்டாள். 28

¶ ஒன்றிரண்டொழியவாளி யுளவெலாமாரன்றூர்த்தான்
குன்றிரண்டாயகொங்கைக் கோமகளாற்றூளாகி

---

* பாகு - பாக்கு வெள்ளிலை - வெற்றிலை. அடைப்பை - வெற்றிலைப்பை † சதுர் - வன்மை. $ தமனியம் - பொன்.

‡ நாவி புழுகுபூனை. ¶ ஒன்றிரண்டொழியவாளி என்றதுகிடை, கொல்லுதல், ஆகிய தொழிலைச்செய்யும் முல்லை, நீலம்என்னுமிரண்டு பாணங்களொழியவென்பது கருத்து.

மின்றிரண்டனையமேனி விமலன்மேற்சாய்ந்துவீழ்வாள்
பொன்றிரண்டனையமாதர் பொருந்தலாலணிநின்றாள். 29

தளரியல்காமத்தீயிற் சருகுபட்டாற்றளராகி
யுளநிகர்மகளிர்சில்லோ ருடன்வரவெழுந்துட்போகி
யளிமலரளகஞ்சோர வணிமுலைத்தகில்விலங்க
வளமலியணையின்மீது வாயுயிர்ப்பெறிந்துவீழ்ந்தாள். 30

வேறு.

அள்ளிக்கொளும்பேரழகனரு ணமம்புகலுமவாவாலு
மூள்ளக்கருத்தையுயிர்போலு மகளிர்க்குணர்த்தமுளத்தாலு
வெள்ளப்பவளவாய்திறந்து வீடேதலமன்மேவுதற்குப்
பிள்ளைப்பிறைவாணுதன்மடவீ ரென்றூள்பிறரைவென்றூளே. 31

இறங்குதுறையினீத்தாயிற் றென்னமாயையிடத்துமயல்
பிறந்தபொழுதேயுயிரளவாய் நின்றதென்னும்பெற்றிமையை
யறிந்தமகளிர்நின்கருத்தை யறியவுணர்த்தினல்லமற்குச்
சிறந்தமனையொன்றளிக்குதுமென் றுரைத்தப்பின்னுஞ்செப்புவார். 32

காமமூளாதோன்றிற்றுனக்கென் றெங்கள்கருத்திற்றோன்றிற்று
வாமமணிமேகலைமருங்குல் வடிவேன்மருட்டுமதர்விழியா
யாமுனினதுநெஞ்சகமும் வேறலெனினினிதயத்திற்
* சேமமதனைநாமற் செப்புகென்றூர்திருந்திழையா. 33

கன்னித்தன்மையழியுமெனு நாணுமுலகங்காக்குமொரு
மன்னற்குரியமகளென்னும் பெருமைதானு † மத்தளிகன்
றன்னைப்புணர்ந்தாளென்றுவருந் தகாதமொழியுந்தன்னுளத்தி
லுன்னிக்கருங்கண்மடமாயை யொன்றுமுரையாதிருந்தனளால். 34

இறைவியொன்றுமுரையாமல் வாளாவிருப்பவேவல்புரிந்
துறவினின்றசகளெனு மாதுபிராட்டியுரையொடுதான்
பிறவுமின்றுவேறுபட்டா ளென்னேபெண்ணேயறியேனென்
றறிவுகலங்கியொருவுகலா விலாசியணங்கைவினவினாள். 35

இனியான்மறைப்பதென்கொனுமக் கின்றுவந்தவல்லமனுந்
தனிகாயகன்போழகென்னு நறவையுண்டுதெரியாமற்
கனிவாய்மடந்தையுளமழிந்தா ளென்று ‡ விலாசிகாட்டுரைக்க [அ.
முனியாளியைந்துபுன்னகைகொண் டிருந்தாண்மாயைமுகங்கவிழ்ந்

* சேமம் - வைப்பு; கருத்து. † மத்தளிகன் - மத்தள முழக்குவோன்; அல்லமன். ‡ விலாசி - கலாவிலாசி யென்னுந்தோழி.

மாயையிடையையுளண்மூலையான் மற்றைமாதர்போலென்று
தூய * மதிஞரனுமித்துச் சொல்லுமருங்குற்றோகைதான்
வாயினிளவெண்ணகைதோன்ற வாளாவிருப்பக்கண்டுமய
லாயினுடையளெனமாத ரறிந்தா † ரருத்தாபத்தியினுல். 37

வல்லியுள்ளமறிந்தனமிம் மாயைதனையுமயக்கவல்ல
வல்லமன்றன்கருத்தையினி யறியவேண்டுமென்றவர்தாஞ்
சொல்லவொல்லுமதமானி யென்பாள்யானத்தோன்றறனே
மெல்லவுள்ளமறிவலெனச் சென்றுள்விநோதவிமலன்பால். 38

மங்கையருமவ்வரவையறிந் தவளோர்மாற்றம்வகுத்திடுமுன்
றங்குமனையிற்சென்றிருப்ப னுங்கடலிலியெனத்தேடிற் [ன்
றிங்கணுதல்வெண்ணகைக்கருங்கட் செவ்வாய்த்திருவேசெப்புகவெ
றெங்கடலிலனியம்பமத மானியியம்பன்மேமினுள். 39

வீடுபுறநீவேண்டற்க வையவெதுவிளங்குமணி
மாடனினதேயிவணுறைக வரசர்கோமான்மகளிதய
பீடமதனிலுனைவிடா திருத்தியிருந்தாள்பிரிவறநீ
கூடவுறையும்விருப்புடைய ளென்றுள்குறிப்புவெளிப்படவே. 40

ஒன்றுமில்லேனுனீவிர் மிகவுமுடையீரும்மிறைவி
லென்றியரசர்குலமடந்தை சாதியறியாவிகிர்தன்யா
னன்றிமகளிர்நீயிர்நான் மைந்தனென்றுலடாதம்மா
வென்றுமுங்களுடனுறைவென் றெந்தைநகைகொண்டியம்பினன்.
நள்ளாதொழியினன்றியவ ணட்டாளாயிற்பினைப்பேதங்
கொள்ளாளொருவர்மாட்டுமெனி லுயிர்போற்சிறப்பிற்கொண்டவனை
யெள்ளாளென்னவேண்டுமோ வென்சொலெல்லாமிருந்தறிதி
வள்ளாலெனவின்மொழிபுகன்றுண் மாற்றமறிந்தமதமானி. 42

காறிற்சிறந்தமலர்க்குழலாய் நின்சொலெல்லாங் $ கவர்பொருளைப்
பாரித்திருந்தேறுகிலேன் பணியொன்றெருளர்பாற்புரிவோர்
றூரத்திருந்துவருங்காலந் துணிந்துவருதறுணிவென்று
‡ ஞரிக்கிணங்குமவன்போல நடித்துவிடுத்தருழுவுவோன். 43

---

* மதிஞர் அனுமித்து எனப்பிரிக்க. † அருத்தாபத்தியாவது:—நித்திய வுபவாசியை அவனது பாரித்தவுடலாலிரவிற் காண்பானென்றுணர்கை. அஃதிருவகைப்படும்:—திஷ்டாருப்தாபத்தி, சிரவணருத்தாபத்தியென. அவற்றுளிதுதிருஷ்டாருப்தாபத்தி. அநுமானமாவது காரியத்தாற் காரணமுண்டெனக்கோடலே. அது மூவகைப்படும். பிரதிக்ஞை, ஏது, திட்டாந்தம் என. $ கவர்பொருள் - பிரிவுபட்டுவரும்பொருள். குன்றேறுமா என்றாற்போல.

‡ ஞரி - பெண்.

மன்னர்மன்னன்மகடிருவோலக்கங்காணுமைந்தரோ
டென்னையுன்னுமவளல்ல டலவனுகவுன்னினளா
லென்னவன்னமளையாய்நுந் தலைவிக்கியற்கையுயர்த்திடுதன்
முன்னமென்னவடங்கியொழு குறுதலெனக்குமுறையென்றான்.

சொற்போர்செய்துமறைப்பதினி யென்னும்யாங்கடொழுமி
றையாய், நிற்போய்நின்னையெதிர்ந்தளவே * கரியுண்விளவினிறை
யழிந்தால், கற்போனின்றவருந்தவருங் காணுமுன்னமுனைக்கண்ட,
தற்போனின்றுதடுமாற நினைப்போலிருந்ததலைவியே. 45

என்றுமங்கைகூறுதலுந் தலைவியிதயநீயறிவை
யன்றியின்றுபுதியன்யா னறிவலெவிங் † காப்தமாங்
நின்றவுன்றன்மொழிகேட்கு மதுவேயெனக்குநெறியென்றான்
குன்றைவென்றகுவிமுலையாள்களிப்பவெமையாட்கொள்ளுவோன்.

நல்லசகுனமென்னவெதிர் கண்டுவந்தாய்நம்பிநீ
வல்லவசுரர்சுரர்முனிவ ரெல்லாமாயையையோர்
புல்லினெளியளெனப்புல்ல நின்றுமெனப்புன்முறுவலொடு
சொல்லிமகிழ்வுகொண்டிறைவி பான்மீண்டனளச்சுடர்த்தொடியே.

அங்குமாயைமதமானி சென்றதற்பினகந்தளர்ந்து
மங்கைவாய்மைகூறியுடம் படுக்குமோமன்மகடனக்குப்
பங்கமாமென்றென்னுயிரைச் சிறியகலப்பண்ணுமோ
விங்குநானென்செய்வளென வறியேனென்னவிருந்தயர்வாள். 48

என்னுவறிந்துபோயிளுள் சந்துபொருந்தாதெய்துமோ
வன்னுவசரன்மகளென்ன வஞ்சியழகனகலுமோ
வின்னுரன்னநினைவின் றியெனையே நினைந்திட்டிருக்குமோ
பொன்னுடறழும்வாண்முகங்கண் டலதுதயாம்போகாதே. 49

என்னப்பலவுநினைந்துமட மாயையிருப்பவிகுளமார்
மின்னற்கருங்கணிடனுடக் குறிகணல்லவினங்குதலாற்
கன்னிக்குவகைகைகூடு மென்னவிருக்குங்காலதணி
லன்னப்பெடைபோனடந்தமத மானிகளிப்புற்றடைந்தனளால். 50

வண்டாமரைபோன்முகமலர்ந்து வந்தாள்சென்றமதமானி
கண்டார்மகளிரவனுள்ளங் ‡ காயோபழமோகழறென்றார்

---

* கரியுண் விளவின் - யானையுண்ட விளங்கனிபோல. யானை யென்றது யானைத்தீ என்னும் ஓர் நோய் என்பர் ஆசிரியர் நச்சினர்க்கினியர். † ஆப்தம் - உண்மைக்கூற்று. ‡ காயோபழமோ வெனல்:—கைகூடிற்றோ இல்லையோ வெனக்குறிப்பித்தல்.

தண்டார்வனமென்குழன்மடவீர் பழமேயென்றுசாற்றினுள்
கொண்டாருவகையவர்மாயை யுவகையாரேகூறுவார். 51

மன்னனறியினென்னுமோ வறியோமிதனமறைமினெனப்
பன்னிமகளிருளத்தடக்கிக் கங்குல்வரவுபார்த்திருந்தா
ரன்னமனையாளல்லமன்ற னுடம்பாடுரைத்தவம்மொழியே
கன்னன்மதவேளெய்தபசும் புண்ணின்மருந்தாக்களிப்புற்றாள். 52

வுனலின்விளையா * டிருந்தமைந்தர் தம்முளெழுந்துபோயோடிப் [ப்
புனலின்விழுவான்போல்விழுந்தொளிஞாயிறுபோய்ப்புணரியிடை
புனலின்விழுந்தமுழ்குபுவந் தெழுவான்போலக் † குணுதகடற்
புனலின்மிசைவந்தெழுந்ததிருள் பருகிப்புதுவெண்டிங்களே. 53

தொக்கமலம்வாய்மூடக் கள்ளுண்டிடறுஞ்சுரும்பினங்கண்
மொய்க்குநறுமென்குவளைவாய் திறந்தழுகிறுஞ்சிளம்பொழிலிற்
புக்கமணிநீர்க் ‡ கயத்திரைதேர் குருகுவிண்மீன்பூத்தனவாற்
செக்கரெனுஞ்செந்தீயினிடைப் பொரிந்துதெரித்தபொரிபோல. 54

தூயசோதிப்பகலவன்போய் மேலைப்புணரிதோய்ந்திடலு
மாயைநாமக்கொண்டிருந்த மணிமென்கலாபமயிலுவா
ளைய $ கோம்பிகண்டுசினந் துடலன்சிவப்புற்றடங்கல்போன்
மேயமாலைப்பொழுதிலிருஞ் செக்கர்தோன்றிவீந்ததால். 55

சந்திரோபாலம்பனம். (உபாலம்பனம்-பழித்தல்.)

காலையரும்பிப்பகலெல்லாம் போதாயிருந்தகாமமலர்
மாலைமலர்ந்துபொருமலொரு மாயைநாமமணிவல்லி
மூலையிருந்துபுறம்போந்து விரிவெண்ணிலாமென்முற்றத்திற்
பீலிமஞ்ஞையெனவீழ்ந்து மதநோய்மிகவாய்பிதற்றுமால். 56

தால்வாயடைந்துமிகுந்தலையை மோதிமோதிச்சலித்தலறக்
காய்வாய்நிலவேயுடன்பிறந்தா ளிருந்துவாழுங்கடிமனையை
நீவானெழிந்துவந்தழிப்பா யென்றுலந்தோலியின்றிற்
தேய்வாய்நின்னெடியையில்லா வென்னையென்னசெய்யாயே. 57

தக்கன்மகத்திலொருஞான்று தாளிற்படுநீ ¶ தலையேறி
மிக்கமுனிவர்மந்திரநீ றிறைப்பவின்னுமீண்டிலாய்

---

* இருமைந்தர்க்கு உபமேயப்பொருள் சூரியசந்திரர். †குணுது-குணக்குள்ளது. குணக்கு - கீழ்த்திசை. ‡ கயத்து இரைதேர்தடாகத்து இரையை யாராயும். $ கோம்பி - ஒந்தி. ¶ தலையேறி-சிவபெருமானது சடைமுடியினேறி.

நக்கன்பவளவாய்ப்பட்டுக் களத்தேயிறங்குகஞ்சுகினை
யொக்குமென்பதறியாமை யன்றேவொளிர்வெண்மதியுமே. 58

அங்கமதினஞ்சிருத்திலே னங்கமல்லாவவிர்சடைமேற்
றங்கினைவைத்திட்டதனின் கொடுமைகருதித்தானன்றே
பொங்குமுதகலையென்ன நின்னேப்புகறல்வெண்டிங்கா
ளிங்குமனிதர் * காராட்டை வெள்ளாடென்பதொக்குமால். 59

உருப்பமிகுவன் றழல்சிவப்புற் றுலகர்காணவொளிதாவு
நெருப்புவெண்மையென்பதுநன் னியாயர்நின்னேக்குறித்தன்றே
† பொருப்புநறுஞ்சந்தனச்சேறு புலர்ந்துபொரியப்பூவணையும்
விருப்பமலருங்கொளுந்தவழல் வீசியெழுந்தவெண்டிங்கள். 60

இன்றேருலகிலெனக்கொன்று பிறர்க்கொன்றுகியிருக்கின்றுய்
நன்றேவுனக்குமதியமே ஞாயிறேபோல்வாழாமன்
மூன் ‡ றேகையர்களியாவரையு மொப்பக்காணமுயற்சியினு
லன்றேதேய்ந்துபோகின்று யன்றேவதனையறியாயோ. 61

தென்றலைப் பழித்தல்.

கொல்லாநோன்புமுனிமலையிற் றேன்றியென்னைக்கொல்கின்றுய்
பொல்லாமந்தமாருதமே யென்னைகருணைபூண்டிலாய்
சொல்லாய்திருப்பாற்கடலினிடைத்தோன்றுங்கடுவிற்றன்குணமே
யல்லாலமுதகுணமுண்டோ நின்னேவெறிப்பதறிவன்றே. 62

கேகிலோபாலம்பனம்.

உயிர்த்தபொழுதேநின்குரல்கே ளாமுன்னேடிற்றீன்றதாய்
நயத்தின்வளர்த்ததாய்குரல்கேட் டலுமேநடுங்கத்துறந்ததாற்
பயத்தமலர்ப்பூங்காவகத்தி லிருந்துபல்காற்கூவினூற்
செயிர்த்துநின்னைக்குயிலேநான் வெறுத்தல்செப்பவேண்டுமோ. 63

மன்மதனை நிந்தித்தல்.

கன்னற்சிலையாயென்மனத்தைக் கலக்குங்காளைகவின்கண்டு
முன்னிற்பதற்குநாணியோ விங்கேநின்றுமுனிகின்றுய்
தன்னிற்பெரியரில்லையெனு மலனேச்சமரிற்றுக்காம
னன்னர்த்தளிரின்மெலியாரை யடர்த்தாயாண்மைநன்றரோ. 64

என்றுபலம்பிமயன்முதிர்ந்து மாயையிரங்கியிருந்தயா
மன்றன்மலர்பெய்மெல்லணைப்பூம் பள்ளியறையின்மதமானி
சென்றுரும்பியல்லமனே முன்றந்திருத்தித் $ தேரையூண்
வென்றிமடங்கற்கிடுதல்போ லவளேவிடுத்தாலல்வரையுள். 65

---

* காராட்டை வெள்ளாடென்பது - மங்கலம். † பொருப்பு-பொதியமலை. ‡ தொகையர்கள் - அசுவினிமுதலிய இருபத்தேழு மனேவியர். $ தேரையுண் - தவனேயுணவு.

உருவெனிகாண்டல்.

வேறு.

* வேனினண்பகலின்வெய்யபாலியுணீர்வேட்டவனங்கிலத்துறுநீர்
தானெதிர்கண்டுபெருகவோடுதல்போற்றண்மலராணமிசையமர்ந்த
ஞானநல்லிளக்கைவிழியுறக்கண்டுநகையொடுதிருமுகமலர்ந்து
பானலங்கண்ணிபுணர்முலைவிம்மப்பரிந்துமேல்விழுந்துபுல்லினளால்

† வாடிநிழலெனவணமேனண்ணுறத்தோன்றியவிறையை
யோடினள்விழுந்துதழுவுறத்தழுவவுருமையாலணமிசைவிழுந்தே
யாடியினிழலைப்பற்றநீட்டியகையாடியிற்ருக்கின்றழுது
வாடுறுமழலைப்பேதையேபோலவருந்தினண்மதர்விழிமாயை. 67

சொல்லருமழகன் திருவுருவிழியிற் ரூன்றலான்மீளவு மெழுந்து, பல்லினண்மலர்மென் கைகளால்வெளியைப் புல்லல்போற்சுவைத்தனள்வெறுவாய், வல்லியிவ்வாறு வெளிமயக்குற்று வள்ளறன்கைப்படாமையினு, லல்லமனலனீ தருவெளியென்ன வயிர்த்தனளுண்வையையன்றே. 68

அருந்தவநெடுநாண் முயன்றுதான்பெற்றவமுதை வாய்வைத்திடுமளவிற், கருந்தவறுதல்போ லல்லமதேவன் கட்புலத்துற்றமென்ரூளிற், பொருந்துறவெளிபோல் வராமையாற்றீயிற் புழுவெனப்பதைபதைத்தரிவை, வருந்தினள்காமமல்லமனன்றி வடிவுளார்யார் கடந்திடுவார். 69

கன்னிகையென்றுமிறைமகளென்றுங் கருதிடாதவாவிளத்திட்டு, மென்னிணமுலைகண் மார்புறத்தழுவியிதழ்சுவைத்தணமிசைப்புணர்வுற், றின்னலினின்பக் கடலிடைமூழ்க லிவன்றனற்பெற்றிலேனென்று, தன்னகைநந்துவெய்துயிர்ப்பெறிந் தாடவத்தரையலைத்தவம்மடந்தை. 70

பொழிந்திழிமழையால் ‡ வளிநனைந்திடுமேற் புகைந்தெழுமெரியில் $ வான்வேமேன், முழங்குவெண்டிரைப்பே ராழியக்கலயுமெனினயமுத்துமேனஞ்ச, மெழுந்தரன்றன்னை வருத்துமேன் மயக்கமெய்துவனல்லமதேவ, ஞெழிந்தவர்தம்மை யொழிவறமயக்குமொருத்தியுமவன்றனைமயக்கும். 71

விண்ணினைக்குத்திக் கையிளப்பவர்போல் வேனெடுங்கண்ணியங்கிருந்த, வண்ணலத்தழுவித் தழுவிமெய்வருந்தி ¶ யவசமுற்றணமிசையுறங்கி, யெண்ணுறுநினைவா லவன்புணர்ந்ததுபோ லின்

---

* வேனில் - வெயிற்காலம். பாலை - கடுஞ்சுரம். † ஆடி-கண்ணுடி. ‡ வளி - காற்று. $ வான்வேமேல் - ஆகாயம் வேகுமாயின்,. ¶ அவசம் - பரவசம்.

கனவொன்றுகண்டெழுந்தாள், கண்ணகனிலித்தி னிருள்குடிப்பவ
னுங்கருங்கடன் முகட்டினிலெழுந்தான். 72

காலியின்மாலை வார்குழன்மாதர்க் கண்டுரைசெய்வ ளல்லமன்
றன், கோலமென்சொல்வேன் விழியெதிர்தோன்றிக் குறுகிலென்
கைப்படானதனற், சாலவுநைந்து துயின்றனன்கனலிற் றடமூலை
குழைந்திடப்புலி, மேலுநல்லருள்செய் தன்னைநானென்றும் விடு
கிலேனென்றனனென்ரூள். 73

அருந்தவமழிக்கு மழகுடையணங்கிற் ககப்படாவிறலினன்யா
ரோ, புரந்தரனயன்மால் சுரர்முனிவர்கிம்புருடர் வித்தியாதரரென்
னப், பரந்தவர்தம்முளலனிவலெருவன் பார்த்திடிற் * பராபரனென்
று, திருந்திழைமகளிர்மணத்துளேவியந்து தெரிவையோடுரைத்
தன்மேயினரால். 74

ஆசைகின்னுளத்தின்மிகவளர்ப்பதற்கா யல்லமனிவ்வகைகடித்
தான், பேசுறுகனவின்பயனுனக்குரைப்பிற்பின்புனைமெய்யுறவணை
வன், வாசமென்குழலா யென்றவண்மனத்தின் வருத்தமற்றிடவறி
ந்துரைத்தார், காசணிமருங்குன்மடந்தையர்மாயை கவலைதீர்ந்துள்ளு
ளேகளித்தாள். 75

இன்னணமாயைமாதிடைநிகழ்ந்தவியல்பினேமோகினிசிலர்போ
ய்ப், பன்னுறவறிந்துமானமீக்கூறப் † பருவரற்கடலிடைப்படிந்து,
தன்னெருமகள்வாழ்மாளிகையெய்தித் தனையையைப்பாங்கிமாரொ
டுகூ, யென்னிதுசெய்தா யையகோபேதாயென்று நைந்தின்னன
புகன்ரூள். 76

மானமுமுயிருமொருங்குகில்லாதவழியுயிர்தன்னையேவிடுத்துத்,
தானுறபொருளாய்மானமேகொளுமுன் றந்தைதன்செவிப்படிலெ
ன்னும், பானுவமதியு மியங்குறுமளவும் பழியிதுவழிவழிவாதோ,
யானுனைவருந்தியீன் றதுமிதற்கோ வெஞ்செய்தாய்பாவியென்றிசை
ப்பாள். 77

குரவர்தாமியைந்துகொடுத்திலராயிற்குமரவேளனையவரெனினு
மருவராகிற்பர்தந்தைதாய்தங்களாணையினெழுகுகன்னியர்தா
முருவிலாரெனினுங்குரவருண்மகிழ்வுற்றவறினனையவர்தம்மைப்
பரவுவான்கடவுளாகவேநினைந்துபண்பொடும்பயிலுவான்றே. 78

மணம்புரிவதன்முன்குரவராணையினு மணவினைமுற்றியபின்ன,
ரிணங்குறவருள்செய் கொழுநனாணையினு மிருப்பர்தம்வயமிலரென்
று, மணங்கனையவர்தா மென்பதையறிந்து மடாதவிச்செயலினைச்

* பராபரன் - பராசத்திக்கு மேலானவன். † பருவரல்-துன்
பம். கூய் - கூவி.

தாய், பிணங்குவாரிலேயென் றிருந்தனேபோலும் பேதைநீயென்று தாய்முனிந்தாள். 79

தான்செயுந்தவறுந் தாய்செயுமூனிவுந் தன்மனத்தனே நனிவ ருத்த, நான் செய்வதென்னென் றிருநிலநோக்கி நாணிநீர் விழியுக விருந்தா, டேன்செய்மென்மொழியாண் மோகினிகண்டு சினந்த வீர்ந் தகங்கரைந்துன்மேல், மான்செயும்விழியாய் பிழையிலேயென் றுண் மனங்கரைவன்னேபோலுண்டோ. 80

மங்கைமீர்நீயிர் சூழ்ந்தனரிருந்தும் வலேதருவேலியில்பயிர்போ, லெங்கடம்மடந்தை * நிறையழிந்தொழிய வென்செய்தீர் பாவிகா ளென்று, எங்குறுமடவார் சொல்வரெம்பிராட்டி யருளொடுகேண் மதிமதனு, லுங்குலமடந்தை யுயிர்விடாதிருந்த தன்றவமென்று நைந் தரைத்தார். 81

பாங்கியர்பகரச் சினஞ்சிறிதவிந்து பாங்கியர்குழுவினுட் சிறப் புற், றோங்கியசகலே தன்முகநோக்கி யுரைப்பண்மோகினி யெனு மரசி, பூங்கணைமதவே ளனையவல்லமனைப் புறத்துநின்றகற்றிடா தெங்க, ளீர்ங்கதிர்முகமெல் லியன்முனம்விடுத்தா யென்கொலோ வெனவவளுரைப்பாள். 82

மானுடப்பிறவியரிததிலரசர் மக்களாகுதலரிததனி, லானுறுப் பமைதலரிததிலரிதா லுணர்வொடுபோகங்களுகர்த, ருனெனப்பெ ரியர்கூறலாலன்னுய் தவம்பலமுயன்றுநீபெற்ற, மீனெனப்பிறழுங் கண்ணியைவெருண்டு வெறுப்பதுதகாதென வுரைத்தாள். 83

மோகினிசகலே புகன்மொழிகேட்டு முகமலர்ந்தென் றவப்பய னும், பாகெனுமொழியாடவறில † ளியாழோர் பயின்மணமரசர்மேற் றென்ப, ராகலிலிவளுக் கல்லமன்றனே யருமணத்தலேவனங்கவன் பாற், போகம்வேண்டியவா கொள்கெனப்புகன்று புகன்றனள் பின் னுமோர்மாற்றம். 84

உலகெலாமறிய வதுவைசெய்காறு முலகமன்னவ னறியாமற், றிலகவாணுதலாலொழுக்க நீர்மறைமின்றேமொழியீரிவடீமை, நல மெலாநமதேயாதலானுமக்கு நான்சொல்வதென்னெனுமகளுக், கல கிலாவுவகைசெய்துபோயினடன் னகத்தினுண்முனிவுறவந்தாள். ()

என்பிழைபொறும லன்னையோடென்பா லிருந்தவரேசொலி னதனு, லன்புடையன்னே முனியுமோவென்ன வறைந்தனண்மா யைகேட்டறைவாள், பொன்புரைசகலே நங்குருவுனக்குப் புரரியே

---

* நிறை - கற்பு. கேண்மதி - மதிஎன்பது முன்னிலையசை.
† பாழோர்பயின்மணம் - கந்தருவவிவாகம். இதனியல்களே இறை யனர் அகப்பொருளிலும், தொல்காப்பியம் களவியலினுங்காண்க.

தலைவனென்றிருப்பப், பின்பிதுசெய்தனையெனினின்னைப்பிழை சொல்வார்மேற் பிழையுண்டோ. 86

மானேயாய்நந் தாயறிந்தமையான் மறைந்தகுநொய்த பட்டன்றிக், கோனிதையறிவ னெனினெளிதாமோ கோமளவல்லி நீகேண்மோ, போனதுபோக வினியவன்றன்னைப் புறத்தினில் விடுவதேயறிவு, தானெனவுரைத்தாண் மாயைகேட்டயர்ந்து தாங்கருந் துயரமோடிருந்தாள். 87

அல்லமனறிந்து நுந்திருமடந்தைக் கடுத்ததென்புகலெனச் சகளே, வல்லிநின்மாயை வலையிடைப்பட்ட மறையெலாமிறைமனை நீறைந்த, தொல்லைநல்வினையாலறிந்திலன்வேந்த னெருவனும்யாமுய்யவேண்டிச், சொல்லுவதொன்றுண் டையநீபுறத்தோர் * சூழலிருத்தனன்றென்றாள். 88

† மாயையையகன்று னடக்கக்காலெழுமோ வாயினடமாற்றமொன்றுண்டோ, போயொருவிடய முணமனம்வருமோ பொருந்துறும் பகலிரவுளவோ, காயமுமுயிருங் கலந்துவாழ்வுறுமோ கண்டனமெனவெனையொருவா, நீயறிவுறவிங்குரைப்பவருளரோ நேரிழாயென்றனனண்ணல். 89

கருத்தினையறியாதவன்மொழிதனக்குக் காட்டியபொருளேயே கொண்டு, விரைத்துணர்மலர்மென் குழலினுள்புணரும் விதியுளதென்னிலெங்கொடியைத், தரித்தெவணெருநீ யிருப்பினுமுனக்குத் தருமிதிலயம் வேண்டாவென், றுரைத்தனள் கருணையென்று செய்குவனென்றுழன்றவ ளண்ணலைநோக்கி. 90

சகளையிவ்வாறு மொழிதரநங்காய் சாலவுநன்று நன்றென்று, நகைமதிதவழுஞ் செஞ்சடைமதுகை நாயகன்றிரு முனஞ்சென்று, முகிழ்முலைநடிக்கும்பொழுதுதன்செயல்செய்முயற்சியினின்றனன்றனக்குத், தகுமெனவளர்பே றறிவினுற்றன்னைத் தானலாதறிதரப் படாதான். 91

இரண்டாவது,

பிரபுதேவர் வந்தகதி

முற்றிற்று.

கதி-டு-க்கு திருவிருத்தம்-கூ0எ.

---

* சூழல் - இடம். † முகிழ்முலை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

சிவமயம்.

ஆ ரு வ து,

வி ம லை க தி.

* அமலையேவகனிலத்தெய்துபு
கமலமாயைதனக்கருண்மூர்த்தியா
நிமலனல்லமனீதியையன்பினுல்
விமலைகூறியவண்ணம்விளம்புவாம். 1

மதுகைநாதனைநாடொறுமாயைதா
னதிகவந்தனையாற்றிநமல்லம
னுதவு † மான்மனத்தோங்கவிருந்தன
டிதிகளெண்ணிலசெல்லநிலத்தினே. 2

ஆயகாலையிலம்பிகைஞாலமேன்
மாயைபோய்நெடுநாளினும்வந்திலள்
போயிராதவட்கொண்டிவண்போதென
‡ வேயினுணல்விமலையையென்பவே. 3

கறையில்சோதிக்கயிலையினின்றுநம்
மிறைவியேவவிறைஞ்சிவருமுலப்
பொறையினுல்விழுந்தாளெனப்பூமிசை
மறுவிலாமதிபோல்பவள்வந்தனள். 4

வந்துபொன்னெயில்வட்டவனவசை
நந்துபொன்மணிமாடநணுகியே
சந்தமாயைதனதெதிர்நின்றனள்
கந்தமென்மலர்க்கற்பகவல்லிபோல். 5

நின்றபோதெதிர்கண்டுநிலவுல
கன்றுபோலுமிவ்வாயிழைவாழிட
மென்றுமாயையெழுந்துதொழுதனை
யொன்றுமேவியிருப்பவுதவினுள். 6

அருகிருந்தவனையிருவரு
மிருகரங்களுமேந்துமணியென

---

* அமலை - உமாதேவியார். † மால் - மயக்கம். திதிகள் - நாள்கள். ‡ எயினுள் - ஏவினுள். விமலை - சேடியருளொருத்தி.

வுருவமைந்திவணைத்தனரென் றுரூழ்
புரமடந்தையர்புந்திவியந்தனர். 7

மாயைவந்தமடந்தையைநோக்கியே
நீயிருந்தெங்குன்பெயர்யாதுநீ
மேயதன்மையென்னென்றுவினவலுங்
தேயு * நுண்ணிடைசெப்புதன்மேயினள். 8

கயிலையென்னிடங் † கற்பகவல்லியென்
பெயரியம்பின்விமலைபெருங்குலச்
சயிலமங்கைகின் றன்புடையேவினள்
வியனிலந்தனில்வந்துனைமேவினேன். 9

என்னமன்மகனெம்பெருமாட்டிதான்
மன்னும்வெந்துயர்மக்கட்பிறப்பினேன்
றன்னையுன்னிநின் றன்னைவிடுத்ததென்
பன்னுகென்னப்பகர்தான்மேயினள். 10

வேறு.

அல்லமன்வலிநிலையறிந்துவாவென
நல்லுமைநினைவிடநன்றென் ‡ றெங்கைநீ
வல்லமைபெரியிம்மண்ணில்வந்தபின்
சொல்லியநின்பெருஞ்சூண்மறந்தனை. 11

நின்னையுமறிந்திலநீயென்றுலிவ
ணுன்னுமனமொழியுறுதவல்லமன்
றன்னைநீயறிவுறுந்தன்மையுண்டுகொல்
கன்னிமாதுமைதம $ லீலையையல்லையோ. 12

ஒறிமருந்தயின்றுறங்கல்போலுரை
யாடியசூண்மறந்தயர்ந்திருத்தலா
லுடிநின்றனைத்தாற்கென்னைநல்லுமை
யேடவிழ்மலர்க்குழாலேவினளென்றுள். 13

கதிரெழுபகலெனக்கண்டிடாதுதண்
மதியெழுமிரவெனமனந்தெளிந்துதன்
றிதியொடுநினைவுமோர்சிறிதறிந்தனள்
விதியணிறைமகள்விமலைசொல்வினுல். 14

---

* நுண்ணிடை - விமலையென்பவள். † கற்பகவல்லி யென்பது அண்மைவிளியாதலின் இயல்பு ‡ எங்கை - எமது தங்கை. இதவும் அண்மைவிளி. $ லீலையை - அடிசமுடையை.

மூலகாரணனெனச்சிலர்மொழிந்திடு
மாலுமோர் * மானிடப்பிறப்பில்வந்துதன்
சீலமோந்திலனெனிற்சியபேதைநான்
ஞாலமேன்மயங்குதனவிறல்வேண்டுமோ. 15

அல்லமனியல்பெலாமறியப்பூந்துணர்
வல்லிநின்குமுதவாய்மலர்ந்துகூறெனச்
சொல்லிநின்றிணையடிதாழுதமாதொடு
வில்லுறழ்நறுநுதல்விமலைகூறுவாள். 16

கயிலையினுமையொடுகண்ணுதற்பிரான்
செயலுறுமல்லமன்செய்திகூறலு
மயலுறவிருந்துகானறிந்துளேனதை
மயிலியல்கேளெனவகுத்தன்மேயினாள். 17

வேறு.

படியில்வள்ளிகாவையெனும்பதியிற்றனக்குநிகரில்லா
னெடிவில்கருணைநிராங்காரனென்னுமுண்மைப்பெயரினான்
மடிவில்கற்பினவன்றேவிமாசுதீர்ந்தசுஞ்ஞானி
கடிவின் † மறையாகமவிதிகள்கண்ணுற்றறியவொழுகுவார். 18

மெய்ம்மைசிவமேயல்லாதுவிரியுமுலகம்பொய்யென்பா
ரிம்மைமறுமைநிலையல்லவென்னநிகழ்ந்தகருத்தினோர்
செம்மைதெறியிற்புறமொடகந்திரியுங்காரணங்காமாதி
பொய்ம்மைவினையிலவர்குருநூல்பொருளாத்தணிந்துவீவெப்பார். ()

இளையராகியிருக்குநாளில்வாழ்க்கையினின்றிடுதலாற்
றனையரின்மையாநெஞ்சந்தளர்வான்போன்றுநிராங்கார
னினையுந்தியானமில்லாதநெஞ்சுஞானமில்லாத
வினையும்போலுமக்களிலாமிக்கவாழ்வென்றியம்பியே. 20

இந்தவுலகிற்குதவியாயியன்றதொழில்கள்பலசெய்பு
மைந்தன்வேண்டுமெனநிற்போன்மக்கட்பதடியாகுவா
னந்தவுலகிற்காகினேப்போனறங்கூர்மகனு ‡ மத்துவிதா
னந்தமுதவுமகவிருப்போன்ஞானியாகுமென்றெண்ணி. 21

உடம்பைப்பொறியைக்கரணத்தையுயிரைத்தானென்றுழலாம
லடங்கத்தறந்துதனையறிந்துபேதாபேதமென்னுமயல்

---

* மால் - விட்டுணு. மானுடப்பிறப்பு-இராமனும்பிறவி. † மறை யாகமம் - வேதசிவாகமங்கள். ‡ அத்துவிதம்-இரண்டன்மை. இரண்டில்லையெல்லையென்பது மாயாவாதிமதம். அது பொருந்தாதென்க.

கடந்திட்டிருக்கும்பரமுத்திகாட்டும்புதல்வன்வேண்டுமென
விடும்பைப்பிறவிநோய்தணிப்பவெண்ணுமனத்தானெண்ணினன்.()

இரண்டோடிரண்டுமூவிரண்டையிரண்டாறிரண்டுமீமிசைபெண்
ணிரண்டோடிரண்டுகொண்டிருந்த * விதழ்ப்பங்கயங்கள்கடந்துபோ
யிருந்தகுளத்தின்மேலோராயிரந்தோட்டமலகமலமிசை
யிருந்தசோதினைக்கண்டெம்மெண்ணமுடிப்பேமெனவெழுந்து.()

வேறுமொருவனுடனிருப்பும்வேண்டாதவத்திற்கென்பதொடு
மாறுய்மனையுங்கொழுநனும்போய்வனத்திற்கமலாசனத்திருந்து
தேறுர்புனல்போற்றெளிந்தமனந்திறந்துந்திறவாவிழியொடதம்
பேறுமிட்டவங்கத்திற்பிறழாதமையும்படிவைத்து. 24

தறிபோலுடலநிருந்ததயங்குமருங்கினிருகாடி
நெறிபோய்மீளும்வளியதனைநிறுவிநெடுமடியிற்செலுத்தி
யறிவோர்சிறிதுஞ்சலியாமலன்னப்பெயர்மந்திரமாறிக் [ல.
† குறிபோயிருந்தவொருகுறியைக்குறித்துக்கொண்டங்கிருந்தனரா

வாயுநிற்பமனநின்றுமனந்தானிற்பப்பொறிநின்று
பாயபொறிகணிற்பவிடாபபுன்புலன்கணின்றனவா
லாயபுலன்கணின்றமையாலகிலந்தோன்றுதுள்ளத்தே
‡ தூயபரமானந்தபரஞ்சோதிதோன்றக்கண்டிருந்தார். 26

ஒருங்குமனமோடினையசிவயோகசமாதிநவதிங்க
ணிரம்பவிருந்தகாலத்துநெற்றிமிசையிற்பரஞ்சோதி
திரண்டுசுழலியுருவாகிச்சென்றுபுறமுற்றிடவதனை
விரும்புமிருவர்தாமுமுடன்விழிகடிறந்துகண்டனரால். 27

வெம்மையொழிந்துநிலத்திழிந்தவிளங்குகதிரோபனிநீங்கி
யெம்மையாளவருமதியோவிடுமிந்தனங்களுங்காத
செம்மையொளிவான்பேரழலோதெரியாதென்னவொளிர்ந்ததவர்
தம்மையறியாவுவகையுளந்தழைப்பச்சோதிமதலையே. 28

அலைந்துபிறப்பிலாங்காரவஞ்ஞானிகளாமானுடரு
மலிந்தசுரருமுனிவரருமற்றையோரும்பெறவரோ

---

* ஆறுதாரகமலங்களுக்கு இதழ்களாவன:—மூலாதாரத்திற்கு ச, சுவாதிஷ்டானத்திற்கு சு, மணிபூரகத்திற்கு கo, அநாகதத்திற்கு க்உ, விசுத்திக்கு கசு, ஆக்கினைக்கு உ. † குறிபோயிருந்தவொருகுறியாவது-சிவலிங்கம். இதன்றி வாச்சியார்த்த நெறித்தாணின்ற நிலையையென்றல் பொருந்தாது. ‡ தூயபரமானந்த பரஞ்சோதி தோன்ற-சிவபெருமான் பிரசன்னமாக.

தொலைந்தமாயை * நிராங்காரசுஞ்ஞானிகள்போன்மலவிகுளை
நலிந்துவளர்சச்சிதானந்தநந்தாவிளக்காமதலையையே. 29

பேரானந்தம்பிள்ளையரப்பெற்றவர்க்குவிடயத்து
ளோரானந்தம்பெற்றுடனேயொழியுமுலகர்தம்மைநாம்
நேராவியம்பலாகுமோநிகர்தாந்தம்மிற்றூமென்று
வாராளிளமென்முகிழ்மூலநன்மடவாயுரைப்பதன்றியே. 30

பண்டுபாசந்தபுசிலரும்பரஞ்சோதியைத்தாந்தம்மூளே
கண்டுவாழ்வுபெறுவரலாற்கண்ணிற்காட்டுமெவரில்லை
தொண்டுபடுமிந்நிராங்காரசுஞ்ஞானிகடம்மூட்கண்டு
கொண்டவொளியையுலகுய்யக்குழவியாக்கிக்காட்டினரால். 31

சங்குந்தெய்வதருந்துபியுந்தழங்கமலர்மாமழைபொழிந்த
வெங்குந்திசைகள்விளங்கினகன்றீன்றமலடுதறிதளிர்த்த
பங்கங்கலந்தபுனறெளிந்தபதகர்மனமுந்தெளிந்தவருள்
பொங்குந்துறவர்மனமகிழ்ந்தபுனிதன்மகவாய்த்தோன்றுநாள். 32

நையாமனத்துநிராங்காரன்ஞானத்திரளாம்பிள்ளைதனை
மெய்யாமுளக்கண்ணறியுமிவ்விழியுங்காணப்பெற்றனமென்
றெய்யாவுவகைக்கடன்மூழ்கியேறுன்மார்போடுறத்தழுவிக்
கையாலெடுப்பவெங்குநிறைகனவான்கனவாஞைய்தாகி. 33

செவ்வாய்ஞானமயில்கொழுநன்செந்தாமரைத்தாள்வணங்குபுந
மிவ்வாய்மகனதியல்புரீயியம்பரென்னவவன்றெறிந்து
† சைவாகமமுமாரணமுஞ்சாற்றற்கரியநம்மகவை
யெவ்வாறுரைப்பனியான்மடவாயென்றுவியந்துகூறுவான். 34

நாம்பார்க்குழவியாகாமனம்பாற்குழவியாயினுன்
றீம்பாற்கடலிற்றுயில்வோனுஞ்செந்தாமரைமேலுறைவோனுந்
தாம்பார்க்கரியவடிமுடியோன்றானேயையமிதற்கில்லை
காம்பாற்புரிந்ததனையதோட்கனிவாய்த்தடங்கணெனன்றான். 35

ஆன்றமயல்செய்சையோகத்தன்றித்தவயோகத்தினு
லீன்றபொழுதிற்றன்மகனேயிருந்தசான்றோனெனக்கேட்டுத்
தோன்றுமுவகைக்கடற்படிந்தாள்சுஞ்ஞானித்தாய்பசும்பொன்மலை
போன்றுவளர்ந்துமருங்குன்மிடிபோக்கவறியாவிளமூலையாய். 36

---

* நிராங்காரமும் மெய்ஞ்ஞானமாகிய அபரஞானமுமிணைந்த வழிப்பரஞானமாகிய சிவஞானந்தோன்றலின் நிராங்காரன் மனைவி சுஞ்ஞானியெனப்பொருத்தினர். † சைவாகமங்களாவன - காமிகம், யோகசம், சிந்தியம், அசிதம், தீப்தம், சூசுச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், இரௌரவம், மகுடம், லீமலம், சந்திரஞானம், புரோற்சீதமுதலாயின.

வேறு.

* மத்தநெஞ்சகமோடுதம்மத்தியிலொன்றையறைந்திது
மெய்த்தறும்பொருளென்றதைவேதமாகமமோதுமென்
றுத்திவிட்டுரைசெய்ததிதொன்றைநிந்தைசெய்சமயர்தம்
பித்தையல்லெனுமல்லமாப்பிரபுவெனும்பெயரிட்டனர். 37

வினையினுலொருவன்றருமேனியாளனலாதொரு
மனிதனுகிநடித்திடும்வடிவனுதலில்லம
னினையுமாறுதவழ்ந்துபின்னின்றுமெல்லநடந்துபோய்
வனையுமாமணிமாளிகைமறுகினுடல்பயின்றனன். 38

வருகவெங்கடமாலியேவருககண்ணுகராமுதமே
வருகவெங்குலதீபமேவருககேடறுசெல்வமே
வருகபாசவிநாசனேவருக † ஞானவிநோதனே
வருகவென்றனே ‡ மகிழ்தரவந்துமேல்விழுமல்லமன். 39

மாயையாலுளவாகியவடிவுநாமமழித்துள
தாயவோர் $ பிரமந்தனையறியுமாறறிவித்தல்போன்
மேயபேதையர்மணலமைவீதொள்கொடழித்தனன்
போயுலாவுவன்மானுடன்போலவேவிளையாடுவோன். 40

நானியக்கினியங்குறுஞாலமென்றறிவித்தல்போற்
றூனுருட்டுநல்வீதியிற்றமனியச்சிறுதேரினை
யானடக்கருநெஞ்சகமிதனையொக்குறுமென்பது
போனமக்குயிராயினுன்புதியபம்பரமாடுமால். 41

ஆடியொன்றெதிர்கொண்டுதம்மானனந்தெரிவார்கள்போற்
கூடியவொண்குருவெதிர்கோடுகொண்டுதன்பெருவிஞ்சைக
ணூடியவொண்கலைகற்றல்பேரனுடகம்பலசெய்தனன்
பீடுறும்பழமறைகளும்பேசரும்புகழாளனே. 42

தந்தைதாயுளமின்புறத்தனதுபேரருளாலிள
மைந்தனுகியிருந்தொருவாலலீலைநடித்தரு
ளெந்தைதானுலகெங்கணுமெய்திமக்கடம்வல்வினை
சிந்துமாறுகினேன்திதுசெப்பன்மேயினனென்பவே. 43

உங்கள்பாவனையொருமையாலுருவமாமகனுகிநா
னிங்குமேவியிருந்தனனினிநடந்துலகெங்கணுந்

* மத்த நெஞ்சகம் - அல்லதை யாமெனக்கோடல். † ஞான விநோதன் - ஞானத்தையே விளையாட்டாக வுடையவன். ‡ உளம கிழ்ந்திட என்றும் பாடம். $ பிரமம் சிவமென்பன ஒருபொருட் பெயர்கள்.

தங்குமாதவர்முதலியோர்தங்களெண்ணமுடிப்பனென்
றெங்களனதனியம்பவவ்விருவரும்புகல்கின்றனர். 44

பிறப்பெனுங்கடலிற்படும்பீழையேமுறுபூணையனுய்த்
* அறப்பில்வீடெனுமொண்கரைதன்னுரூத்தமிழ்வேமெனு
மறப்பிலாவிருகுரவருமனமுவந்தரைசெய்திடச்
சிறப்பஞானசிகாமணிதெளியுமாறுரையாடினன். 45

சற்றுநும்மையகன்றிடேன்றளரன்மின்மனமென்றுநான்
சொற்றதையுமுமக்கெனிற்றுணியுமாகமவேதநூல்
கற்றுளோரைவினவுய்நிராங்காரஞானிகடமையிவ
ணுற்றவல்லமனகல்வனேலுரைமினென்றுணர்மின்களே. 46

என்றுபொன்றுமிவ்வுடன்முதலியாவும்வேறெனநீக்குபு
நின்றதம்மில்வேறலனெனுநிலையைநின்று † தாதான்மிய
மொன்றுறும்பரிசுரைசெயுவுணரும்வண்ணமுணர்த்தினன்
பின்றலின்றியவல்லமாப்பிரபெனுங்குராயனே. 47

தந்தைதாயிலனுகியதாணுவாகியசங்கரன்
மைந்தனுய்மகவில்லெனுமனவருத்தமகற்றவு
முந்துதேசிகனுகிநன்முத்திநல்கவுமெய்தினே
ரிந்தமாதவரலதிலேயென்றுமக்கடுதித்தனர். 48

ஆதலாலெழிலல்லமனருளினலுறுகின்றது
வாதமாறுநன்முத்திதான்மலதருங்கொடியறிதியென்
றேதிலனரனதுபொழுதுடனிருந்தனனென்றவண்
மேதைமாயையறிந்திடவிமலகூறினனென்பவே. 49

† எள்ளிலெண்ணெயெனப்படரிந்தனத்தெரியன்னவாய்
விள்ளுமென்மலர்மணமெனவிரவியெங்கணுநிற்பினும்
வள்ளலல்லமனன்பதம்மனமடைந்துவிளங்குவன்
றெள்ளுமின்சுவைவிம்முபாற்றிரண்முலைக்கணிளைழுகல்போய். 50

ஆறுவது,
வி ம லை க தி
முற்றிற்று.
கதி-சு-க்கு திருவிருத்தம் - கூடுக.

---

* அறப்பில்வீடு - அத்துவித முத்தியாகிய சிவசாயுச்சியம். † இங்
கே தாதான்மியத்தை யென்பது - ஐக்கியத்தை. ‡ இது தலவனு
கிய பிரபுசித்சடப்பிரபஞ்சங்களில் வியாபித்து நிற்குமுறைகூறிய
தாம் இவ்வாறு சிவஞானசித்தியார் சுபக்கமுங்கூறிற்று.

சிவமயம்.

ஏழாவது,

மாயைகோலாகலகதி.

நல்லெழில்விமலையின் னணநவின்றிட
முல்லைவெண்ணகைவருமுயற்சியெண்ணியே
புல்லுவனவனெனென் றெழுந்தபோதினி
வல்லமனகன்றமையறியக்கூறுவாம். 1

முகிழ்மதியணிபவன் முதல்விக்கோதிய
வகைபெறவிமலைதான் வகுப்பமாயைகேட்
டகநெகிழ்வுற்றுநாமல்லமப்பெருந்
தகைதனையடைவதெவ்வாறுசாற்றென்றுள். 2

* மழுவலமுயரியவள்ளல்வந்தனை
யழகுறவியற்றினையாயினல்லமன்
விழியெதிர்தோன்றிநீமனத்துவேண்டிய
தொழிவறநல்குவ னுனக்கென்றேதிஞள். 3

முதல்விநீயுரைசெயுமுன்னமேயருண்
மதுகைநாயகன்றனைவழிபட்டேத்தினே
னதுதரும்பயனிலையறிந்துளேனெனம்
புதுமயன்மூழ்கிஞள்புலர்ந்துகூறினள். 4

வெருவறவிவ † ளகவிழியிலாமையாற்
பரசிவபூசனைபயனிலென்றன
ளரகரவென்றுகா ‡ தங்கைவைத்திஃ
தரைசெயும்விமலைதன்னுளங்கலங்கியே. 5

$ பயனிலையருச்சனைபயின்றுமென்றனை
யயனரிமுதலியவமரர்க்காயினு
நயமொடுசதாசிவநாதன்பூசனை
முயலுதலன்றியோரெண்ணமுற்றுமோ. 6

---

* மழு - ஆயுதம். † அகவிழி - ஞானக்கண். ‡ அகங்கையை-அங்கையெனல் விகாரம். $ இதனால் சிவபூசை முதலிய சரியை கிரியைகள் பயனில என்னும் விவர்த்தவாதிகள் மறுக்கப்பட்டார்.

வாசவனரியயன்வானநாட்டுளோர்
* பாசமின்முனிவர்பலருமண்ணிடைப்
பூசனைவிதிமுறைபுரிந்தவாலயங்
காசணியல்குலாய்காண்கிலாய்கொலோ. 7

மலைமகள்சுரமகளிர்பாற்கட
லலைமகண்முனிவரில்லறக்கிழத்தியர்
கலைமகள்விழிதுதற்கடவுட்பூசையா
னிலைமைகளடைந்தமைநினைந்திலாய்கொலோ. 8

சித்தியுமாயுளுஞ்சிறப்புங் † காமிய
புத்தியரடைவரப்புத்திநீக்குளோர்
முத்தியையடைவரெம்முதல்வன்பூசையாற்
சத்தியஞ்சத்தியந்தளர்மருங்குலாய். 9

மீதுறுமானிடப்பிறப்புவாய்த்துநல்
லேடவிழ்மலரிலுலிறையைப்பூசியார்
பாடமைநாளெலாம்பாழ்க்கிறைப்பவர்
மூடரையெண்ணுங்கான்முந்திநிற்பரே. 10

‡ காம்படுதோளிமுக்கண்ணன்ருண்மலர்
தேம்படுமலர்கொடுபூசைசெய்பவர்
பாம்பொடுபழகிலாப்பரமனென்றவர்
பூம்பதமனமகிழ்ந்துலகம்போற்றுமே. 11

நோய்ப்பிறப்பிலாதகண்ணுதலைப்பூசியா
வாய்ப்புறத் $ தலைக்கொருமதிபெறுநர
லுய்ப்பிறப்புற்றதினறிவுகொள்ளுரு
நாய்பிறப்பாற்றவுநன்றுநன்றரோ. 12

பொருவிலியாகமம்புகன்றமந்திரக்
கிரியைகள்வழுவறக்கிளக்குநல்லருட்
குருபரனருளினுற்கொண்டுசெய்குநர்
பரசிவபூசனைப்பயனைநண்ணுவார். 13

---

* பாசம்-ஆணவம், மாயை, கன்மம் என்னு மும்மலங்கள். † காமியமாவது-இம்மையிற்செல்வம். மக்கட்பேறு முதலியவையும், மறுமையிற் சுவர்க்காதிபோகங்களுமாம். ‡ காம்பு-மூங்கில். $ தலைக்கொருமதிபெறல்-சிவசாரூப்பியம்பெறுதல். மதி-அறிவுமாம்.

அண்ண * லம்முகங்களுமருளுமாகம
நண்ணியவிதிமுறைநன்குசெய்யினு
மெண்ணருமன்புளத்தில்லையெனிற்
பண்ணியபூசனைபயன்றராதரோ. 14

பூசைசெய்தன்னையும்பூசிக்கப்படு
மீசனதியல்பையுமிறைவன்பூசைசெய்
யாசறுபொருளையுமறிவறிந்தயர்
தேசிகனருளினுற்றெளியவேண்டுமால். 15

மந்திரதந்திரவழுக்கள்வந்தவோ
சிந்தனைபுறவிடயத்திற்சென்றதோ
பைந்தொடிபூசனைபயனிலென்றுநீ
நிந்தனைசெய்தெனினிகழ்த்துவாயென்றாள். 16

என்றுநல்வியலாதியம்பப்பூசையால்
வென்றிகொளல்லமன்விழியிற்றோன்றிய
நன்றியையறிந்திலணழுவிநிற்றலால்
வன்றுயர்மனமுறமாயைகூறுவாள். 17

வேறு.

ஒன்றையுமுணர்கிலேனு † னெங்குருவுரைத்தவாற்றூ
லின்றளவிலிங்கபூசையியற்றியும்பயனுன்றில்லை
யென்றனள்பருவமுற்றோர்க்கிருமுறையுபதேசிப்ப
தன்றிவன்மனிதர்க்கோதினதுபயன்படுவதுண்டோ. 18

நெறிபலமுறையுரைத்துநினைந்திலதனையந்தோ
மறுகுறுமனத்தளாகிமாயைமால்கொண்டிருந்தா
ளறிவிலர்க்கறிவிப்பார்தாமறிவிலாரெனின்று
வெறிமலர் ‡ வணர்வார்கூந்தல்விமலைதன்மனந்தளர்ந்து. 19

இவண்மனங்கவன்றிருந்ததினைனநிவெனின்று
குவிமுலைவிமலைசொல்வாள்கோற்றொடிமடந்தாய்நின்மே
லவிழ்மலரம்புபட்டதாயிருந்தன்றெனக்கு
நவிலுதிமறையேலன்னை $ நகமகளாணையென்றாள். 20

ஆணையெருவிமாயையம்பலத்தாடாநின்ற
தாணுவுமுளம்விரும்புந்தண்ணுமைத்தொழிலான்கண்கட்

---

* ஐம்முகங்கள் - ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பன. இவற்றினின்றும் இருபத்தெட்டாகமங்களுந்தோன்றின. இதனுல் சிவாகமம் பிரமாணமாகதென்னும் மாயாவாதிகள் மறுக்கப்பட்டார். † எங்குரு - அகங்காரன். ‡ வண்ர் பூங்கொத்து. $ நகமகள் - பார்ப்பதி.

கூணெனுமழகின் மிக்காரெனுருவன்வந்தனன்ஞானக்
காணலுமெனை நான்காணேனென்றனள்கற்பூர்போல. 21

அல்லமனேயனுமவன் றனக்கலதென்னெஞ்சக்
கல்லுருகுறு திமுக்கட்கடவுளுக்கன்றிமேரு
வில்லுருவாவதுண்டோவிளங்கிழாய்நின்னேக்காணு
நல்வினையொன்றிருப்பநானுயிர்தரித்தேனென்றுள். 22

நீநவிலல்லமன்வேனெடுங்கண்வாணுதன்மடந்தாய்
ஞானவிலல்லமன்றுனச்சுமுன்றனக்குத்தக்க
மானுடவடிவங்கொண்டுவந்தனன்போலுமன்னன்
ஞானநல்விழியினன்றிநயந்ததன்னுண்மைகாட்டான். 23

என்னநல்விமலகூறவிலங்கிலெடுவேற்கண்ணி
தன்னிகரலமன்சச்சிதானந்தசம்புவென்று
யன்னவனலனிவன்றன்மத்தளவல்லமன்காண்
மூன்னெடுபின்மயங்கமொழிந்தனையணங்கேயென்றுள். 24

வேண்டியவடிவங்கொண்டுவேண்டியவாறுசெய்யு
மாண்டருளல்லமற்கீதாமென்றுமாகாதென்றுங்
கோண்டருகின துநெஞ்சாற்குறித்திடப்படுவதுமிண்டோ
பூண்டிகழிளமென்கொங்கைப்பொற்றொடியென்றுசொன்னாள். 25

தருக்கநின்னுடனுரைத்தறகாதினி * யரங்கிலென்றன்
கருத்துறுமனையன்றன்னேக்காட்டுவல்கண்டுநீபின்
புரைத்தருளினபனென்னவுணர்ந்தறிவியனென்று
தெரித்தவளுயினன்னுன்றிறலினேக்காண்பலெனறுள். 26

கண்டுகொண்மணியின்றன்மைகாட்டுதற்கறிந்துளோரைக்
கொண்டுசெல்பவர்போல்வந்தகோதையையுடன்கொண்டேகிப்
பண்டுதன்பூசைச்செய்தும்பரிசுபோன்மகளிர்சூழத்
தொண்டையங்கனிவாய்மாயைசுடர்மணிக்கோயில்புக்காள். 27

அருச்சனைமுன்புபோனன்றுற்றபுமதுகைநாதன்
றிருச்சரணங்கள்போற்றிச்சேயரிநெடுங்கட்செவ்வாய்
விரைத்துணர்மலர்மென்கூந்தல்விமலைமாதோடும்வந்து
நிருத்தமண்டபம்புகுந்தாணிரைவளோத்தளிர்க்கைம்மாயை. 28

அல்லமனிவன்றன்றனென்றறிதராவறிதிடாமற்
சொல்லுகவெனவடிக்குந்தோற்றம்போன்மத்தளத்தை

* அரங்கு - நடனஞ்செய்யும் இடம். இதனியல் சுத்தானந்தப் பிரகாச பரதநூலினும், சிலப்பதிகாரத்துங்காண்க.

வல்லவனறைதலோடுமாயைநெஞ்சுசலாடச்
சில்லரிமணிச்சிலம்புசிலம்புறவாடுகின்றாள். 29

மூன்றுநின்றஞானமூர்த்திமேல்விழியுமார்த்துப்
பின்றுநின்றமூர்த்திமான்மிசைப்பெயருநெஞ்சு
மன்றுறவிருத்திநின்றுமாயைதானடித்தாள்கண்டோர்
தன்னயனமுமாநெஞ்சுந்தன்மிசைவந்துவீழ. 30

அரத்தமதுறுபளிங்காயிமதர்மழைக்கண்மாயை
கருத்துறுகாமந்தன்பாற்காணுறத்தோன்றிநின்றான்
வருத்துறுசெயல்கொண்மாயைமருவிய † குணமடித்துப்
பரத்தினிற்றோன்றுமென்றுபகர்வதுமுண்மையன்றே. 31

கூத்துக்குப்புகுந்தம்பி ‡ கொட்டுக்குநாணுறுமற்
சீர்த்தப்புடைநவின்றிசிந்தைவேறுகின்றாள்
வார்த்தைக்குட்படாதஞானவாரிவைவாயாற்சொல்ல
$ மூத்தக்குமதியைவென்றமுகத்தியர்குழாத்தணைந்தாள். 32

கையொடுசெல்லாநின்றகடைக்கணுண்மாயைகாட்ட
வையனிமலகண்ணுற்றதிசயமுடையளாகி
வையகமதனின்மிக்கமனிதருளினையன்போல
மெய்யழகுடையான்றன்னைவேறுகண்டிலனென்றாள். 33

மாறருமலமனேயிவ்வடிவுகொண்டிவள்செய்பூசைப்
பேறருளுதற்குற்றாளேபெருந்தவத்தாற்பிறந்த
வேறொருமகளேயென்றுவிமலையையாற்றாளாகித்
தேறலிணிற்பமாயஞ்செய்துநின்றனனெங்கோமான். 34

தம்மில்வேலையினிற்சேய்மைத்தடத்தொருவனைக்கண்டன்னை
னமைவுறவருதல்போதலையமுற்றறியார்போல
நிமலனிவிகாரியென்றுநிகழ்ந்திருவிகாரியென்றும்
விமலையேமயங்குமென்னின்மாயையைவெறுப்பதென்னை. 35

நீர்நிலை ¶ கோலாற்காணுநீர்மைபோலிங்குநின்றோன்
சீர்நிலைமாயைதன்னுற்றெளிவுறவறிவுசென்ற
வேர்நிலைவடிவமாயைக்கினையனேயமெனன்று
வார்நிலைமுலைமடந்தைவடிக்கணுற்காட்டினாளால். 36

கண்ணினுற்கேட்குஞ்சீர்சால்கங்கணத்திறைவன்முன்னர்
கண்ணினுற்குமரர்நெஞ்சக் கட்டவிழ்த்தாடுவாட்குக்

---

* சிலம்புற - ஒலிக்க. † குணம் - முக்குணம். ‡ கொட்டு - மத்தளவொலி. $ மூத்த உக்கும் மதி-பூரணசந்திரன். முதிர்ந்த குறைதற்கேதுவாயமதி. ¶ கோல் - அளவுகோல்.

கண்ணினுற்கூறவந்தகயிலைமாதறிந்தாளன்னுன்
கண்ணீனுற்கண்டுஞானக்கண்ணினுற்காண்பான்றன்னை. 37

வல்லிதன்மனத்திற்காமமாய்ந்துவண்கயிலைக்குன்றிற்
சொல்லியசூணைஞசத்திற்றேன்றலுஞ்சுழன்றுடிப்போ
யல்லைமன்மீதுவாழ்வாளாகமேல்வீழ்ந்துபற்றிப்
புல்லியதினைந்துசென்றுள்புல்லியநெறியினின்றுள். 38

கண்டனனவள்கருத்தைக்காரிகைமனத்திற்காம
மண்டலமுணரக்காட்டிவழிக்கொள்வலென்றுளத்திற்
கொண்டுகைதவறிவீழ்ந்தகுடமெனமத்தளந்தான்
விண்டுகவெறிந்துபோகட்டோடினன்விரைந்துவீரன். 39

இத்தனையாட்டமெல்லாமிவட்கிதனுலென்றெண்ணி
மத்தளமதனைவீசிப்போகல்போல்வள்ளல்போகப்
பித்தடைந்தனன்கொலென்றுபித்துறீஇமாதரெல்லாங்
கைத்தளிர்விரன்மூடக்கி * கவுளடிவைத்துகின்றார். 40

பறையடித்தின்றுகாறுமறைத்தலிப்பாவைசெய்கை
பறையுடைத்தொழிந்துகாளைபாரெலாமறியச்செய்தான்
கறையடிக்களிநல்யானைக் † கருங்கழற்சீற்றத்துப்பி
னிறைமகட்குயிர்நில்லாதென்றிகூளையர்மனமுளைந்தார். 41

சிலைமதனின்றுசெய்யுஞ்செருவினுக்கன்றிவெள்ளி
மலைதனிலியம்புமாற்றம்வழுவிற்றென்றுளமழிந்தாள்
கலவிசெய்தலைவனீக்கக்கைப்பொருட்கழுதிரங்கு
மிலைவிலைமகளிர்போலமுத்தவாணகைப்பொற்கொம்பு. 42

‡ மாலைவாய்மரையேபோலுமாயைவாண்முகத்தைக்கண்டு
வேலுலாங்கருங்கட்செவ்வாய்விமலைமாதவளுளத்திற்
சாலு $ மாளுரறிந்துதடங்கணுய்தனரேனீங்கின்
சிலநாயகன்போந் ¶ தேத்துந்தேடிநாங்காண்போமென்றுள். 43

சிலைநுதல்வியலைசொல்லாற்றெளிந்துளமிறையைநோக்கிக்
கலைதொடருழைபோன்மாயைகாட்டினிற்றொடர்ந்துபோனன்
மலர்தொடரளிகள்போலமாயையைத்தொடர்ந்துசென்றார்
கொலைபடுமயிலமர்த்துக்குழைபொருதடங்கணல்லார். 44

---

* கவுள் - கதுப்பு.

† கருங்குழல் என்றும் பாடம்.

‡ மாலை-அந்திக்காலம். தாமரை என்பதுமரைஎனல்முதற்குறை

$ ஆளுர் - பெருந்துன்பம். ¶ தேத்து - தேசம்.

மெய்த்தவம்பயின்றுபெற்றுவேந்தர்க்குங்கொடாமன்முக்க
ணத்தனுக்கென்றுவாளாவரசன்வைத்திருந்தபாவை
மத்தளிகன்பின்போஞண்மகடனேயந்தோவாண்டு
பத்தின்மேல்வைத்திருத்தல்பாவமென்றிகழ்ந்தார்கண்டோர். 45

பாவமும்பழியுநல்கும்பல்வகைப்புகழறங்கள்
யாவையுமழிக்குமெய்துமின்பமுமதனுலெய்து
நோவுநன்மரபுஞ்செய்யுநோன்புநல்வொழுக்குமேன்மை
சாவுமெண்ணுறுமனிற்குந்தயங்குபுன்காமமென்பார். 46

வேறு.

பஞ்சின்மேன்மிதிப்பினும்பதைபதைக்குமென்பதங்க
ளஞ்சுரும்பரன்மிதிப்பதைநீருணவவாவாள்
விஞ்சுஞாயிறுமுதிர்கதிர்வெதுப்பிணைவெருவா
ணெஞ்சியோகிமேலிருத்தியந்நிரைவளைசென்றுள். 47

காமவெந்தழலாலுடல்வெந்துளங்கரிந்த
கோமடந்தையலாலைமேல்வருகுளிர்தண்
பூமடந்தையப்பாலையிற்போமெனிற்புனலிற்
றூமிளங்கயல்சுடுமணல்வீழ்ந்தெனத்தளரும். 48

பானலங்கருங்கண்ணிபோகியகொடும்பாலை
யானைதன்புழைக்கைநீங்கர்தளியிடைவிடாமல்
வானநின்றுபெய்யினுந்தழற்பட்டவல்லிரும்பின்
* மேனகந்தெறிதிவலைபோற்சுவறுறும்விரைந்து. 49

மாலருந்தியபோதுதன்வயிற்றிடையிராதிப்
பாலையென்றுடலுமிழ்ந்திலஞ்சின்மெய்பதைத்து
† வேலையின்றலைவீழ்ந்ததலைலுமுண்வெண்ணெ
யாலும்வெந்தழறணிந்துயிருய்குவனலனே. 50

நாயினுவினீர்சிறுமுயற் ‡ குருளைகணக்குந்
தீயபாலையிற்றனமறந்தவசத்திற்சென்ற
மாயைமாதுபின்னொடர்ந்துசென்மலர்முகமாதர்
வாயி $ னீரறீஇக்கண்கணீர்சுரந்தனவந்து. 51

கானனீரெனச்சிறிதிடங்கடிதுசென்றிளைப்பார்
மானனுர்சிலர்வாய்க்கடைநாவினுல்வருடித்

---

* மேல்நகம்-நகநுனி. † வேலை - பாற்கடல். ‡ குருளைகள்நக்கும் எனப் பிரித்துக் கொள்க. $ நீர் அறீஇ - நீர் அற்று.

* தானையோர்கரமுகத்தெதிரைசத்துமெய்த்தளர்வார்
வேனிலாகொடிதென்றுதம்விதியினெவறுப்பார். 52

மாதரிவ்வணந்தொடர்ந்துபின்வரவெழின்மாயை
பாததாமரைவருந்தினபாலையுண்டந்தவ்
வாதிநாயகன்றனைமறித்துதவிசெய் † தறன்மெல்
லோதியோடுறவாவிமென்றுழைகண்முன்னேடும். 53

கூந்தன்மேல்விரிமுகிறரக் ‡ கோபம்வாய்காட்ட
வேந்துகொங்கையின்வடமலையருவியையேய்ப்பக்
காந்தளங்கைகடாவருங்காரெனக்கலாபம்
வாய்ந்தமஞ்ஞைகண்மகிழவந்தனள்பெருவனத்தில். 54

சிங்கமுங்கரியும்பணிசெயத்தவஞ் $ செய்யு
வங்குறுந்தவர்மாயைதன் ¶ மூலையிடையாமா
தங்கமுஞ்சிறுசிங்கமுங்கண்டுளந்தளர்ந்து
பொங்குறுந்துயரோடெழுந்திரிந்துபோயினரால். 55

கொடியவாள்வரிவேங்கையைக்கண்டமான்குழாம்போ
னெடியவார்சடைமுனிவரர்கலங்குறுநிலையுந்
தொடியுலாவுமென்றோண்மடவார்வருதுயரு
முடியுமாறருள்செயநினைந்தனனருண்மூர்த்தி. 56

மாயைபோகவோர்கணத்தினிற்றுரப்பனீர்மனத்தி
னேயுறீரெனவொருமுனிபோனின்றுநுவன்று
தாயமாதவர்க்கருள்செய்துதொல்லைநல்லுருவாய்த்
தேயுநண்மருங்கணங்கெதிர்தோன்றினன்சிரித்து. 57

பொங்குமாரழல்வெஞ்சரம்புக்கபூவையர்க்குக்
கங்கையாறெதிர்ந்தாலெனக்கண்ணெதிர்தோன்று
மெங்கணையகன்றிருவடித்தாமரையிணையைத்
தங்களாகுலந்தீர்ந்துமெய்குளிர்தாச்சார்ந்தார். 58

பொருளகற்றினிலழுந்தியங்கெழுபவன்பிடித்த
கரமெகிழ்த்துவிட்டகல்பவன்போலினங்காளாய்
விரைமலர்க்கணைபட்டுளவுநையுமெல்லியலே
யருளறத்துறந்தனையென்கொலென்றனரவர்தாம். 59

---

* தானை - புடைவையின்தலை. † அறல் - கருமணல். ஒதி-கூந்தல். ‡ கோபம் - இந்திரகோபம். $ செய்யு - செய்தது. ¶ மூலமா தங்கமும், இடை சிங்கமுமென்க.

பற்றியாயிடைவிடுத்தகுரியேபற்றி
யிற்றைநாளுமைவிடுத்திலெனினதனையிவ்வுலக
மூற்றுமோகுறந்தம்பிழைமொழிகுருளரோ
குற்றநாடியேதிலரிடைகூறுநரல்லால். 60

என்னவோதலுமல்லமனேந்திழைமடவார்
மன்னன்மாமகண்மனத்தெழுகாமநோய்வளரு
முன்னநீமுனியாதிருந்தின்றுதான்முனிந்தா
* யென்னையேறவிட்டேணியைவாங்கினேயென்றார். 61

தொல்லைநின்றிருமேனிபோலுள்ளமுந்தூய்தாய்
நல்லையென்றனேநம்பினேன்வஞ்சகநடிப்பு
வல்லையென்பதையறிந்திலேனெனவன்சொற்
சொல்லினின்றனண்மாயையெம்பிரானிதுசொல்லும். 62

வஞ்சநாடகநடிப்பதுமாயைதன்செயலோ
† தஞ்சவல்லமன்றன்செயலோவெனத்தடங்கட்
பஞ்சின்மெல்லடியாய்கடவுளரையும் ‡ படிறி
னெஞ்சமாதவர்தமையுங்கேட்டறிதிநீயென்றான். 63

கள்ளன்மங்கையைக்களவுசெய்பொருளினேக்கண்டு
கொள்ளுநன்குறிபுகல்விப்பதொக்குமென்கூத்தைத்
தள்ளருஞ்சுரர்முனிவராற்சொல்விக்குந்தகைமை
வள்ளலென்றபுன்னகைகொளீஇயுரைக்குமம்மாயை. 64

நெஞ்சம்யாதினுலெனேயகன்றிடவரினினேக்குங்
கஞ்சன்மாயையையிலனெனக்கழறவாயுண்டோ
விஞ்சுமம்வானிறையென்னையெம்மெய்யினுல்விடுவான்
றஞ்சமாயையென்றிகழ்தாத்தக்கசொற்கற்றீரெய். 65

என்னையஞ்சிமாவழங்குகாட்டிருக்குமாதவரென்
றன்னேவென்றிடவல்லரோவல்லரென்றென்னேப்
பின்னேவென்றிடவல்லர்யார்பேசுதியென்று
மின்னேவென்றநுண்ணிடைசொலவல்லமன்விளம்பும். 66

என்றணேயைக்கடப்பவரிலையிலையென்று
வென்றிகூறினேபலவர்நிற்கவேல்விழியாய்
கின்றவாருயிர்முயற்சியானிகழ்த்தியமாற்ற
மன்றிவாழ்மறையாகமத்தறிதியென்றறைந்தான். 67

---

* என்னே - இஃதென்னே. † தஞ்சம்-எளிமை. "தஞ்சமென் பதெண்மைப்பொருட்டே" என்றது, தொல்காப்பியவிதி. ‡ படிறு இல் - பொய்யில்லாத.

* நாலுவாக்குரீபார்ப்பினுநான்வற்றினுக்கு
மூலகாரணமுமாருவன்மொழிந்தவிம்மாற்ற
நூலெலாமுரைத்திடுமெனச்செருக்கொடுநுவன்றுண்
மாலெலாம்பிறப்பதற்கிடமாகியமாயை. 68

† ஆட்டுகிற்பனிவ்வகிலமுமென்றனெகின்னை
யாட்டுகிற்பவராரெனவறிந்திலேபேதாய்
கேட்டுகின்னையோர்பொருளெனமூடரேகிளப்பார்
நாட்டுமென்னைநன்கறிந்துயர்ஞானிகணவில்வார். 69

ஆரையாரிருந்தாட்டுவரோவதையறியே
மாரவேள்செயுநோய்மறித்ததன்பினென்வாதம்
பாரெனுலியம்பினள்பசிக்கனலிடற்பசிநோய்
தீருமாமருந்துதவுவனென்பவர்சீர்போல். 70

காமியாகியநீயருச்சனைகடைப்பிடித்தமையா
னுமேவெனைங்கண்ணினுய்காலிபோனடித்தேன்
றீமைநெஞ்சினுற்சுணினைந்தனைநினைத்தீண்டேன்
போமினுருடனென்றனன்வன்சொலாற்புனிதன். 71

வேறு.

மண்ணுலகிலிழிகுல மத்தளத்தொழிலோன் றனைவிரும்பிவறி
தூமீண்டா, ‡ எண்ணன்மகளெனும் பழியையமாளாமனிறு விப்போய
ங்கைகொட்டி, விண்ணுலக நகைசெய்யச் சுண்முடியாதெவ்வாறு
விமலன்பங்கிற், பெண்ணரசிதன்முகத்தில் விழிப்பலெனமாயை யு
ளும் பீழையுற்றுள். 72

அன்பினுலன்பர்பெறற்கெளியனுமெனைச் சூளொன்றறைந்துவந்து
வன்பினுற்பெறவேண்டிகின்றழிந்தாயிதகுமோமாயைமாதே
முன்பினுக்கடவிதைத்துக்கரும்பாகவேண்டிமிகமுயன்றுநெஞ்சிற்
றுன்பராய்த்திரியுமவர்போலென்றுன்மாயைதனைத்துறக்கவல்லான்

கரைகுறுகவந்த $ கலங்கவிழ்ந்தநாயகன்போலக்கலங்கினின்ற
வரைபுரைமென்முலைமாயைதனைக்கண்டுவிமலையுளமறுகிமாழ்கி
யிரதமுறுகளிம்புமலிசெம்பினியனைச்சுருவியல்புபோல [னுள்.
வருள்புரிதியையவிவள்குணநேரக்காதென்றுதொழுகஞ்சிச்சொன்

---

* நாலுவாக்காவன - சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்பவைகளாம். † ஆட்டுகிற்பன் - கில் - ஆற்றலிடைநிலை. ‡ அண்ணல்-அரசன். $ கலம் - தோணி. நாய்கன் - வணிகன்.

இலங்கிலைவேன்மருட்டுமதர்விழிவிமலாய் * வறியவோடிரதந்
தன்னு, னலங்கிளர்பொன்னுருவாயி லென்னுலிம்மாயை யின்பநணு
குமென்று, புலங்களறிவறிய பரமானந்தசிவயோகிபுகலமாயை கலங்
கியளிபசும்புண்ணிற்செவ்வேல்பட்டெனவழுங்கிக்கழறுகின்றாள்.

நனவொருபுன்கனவாக மயங்கவெனைப்புணர்தலினு ளுளும்வெ
ன்றி, யெனதென நின்றுளஞ்செகுக்கிமடமாயை சூதுதலுமெங்கள்
கோமான், கனவினுகர்வுறுமுணவுகுறையுமோபசியதனுக்களவுண்
டோ, நினைவில்வருகன வொன்றுகண்டிறுமாந் தனைபேதாய் நீதா
னென்றான். 76

எவ்வண்ணமுரைவன்மை கொண்டுநீதள்ளினுநா னின்றுபோ
கேன், கைவண்ணமலர்ப்பகழிமதனனையாய் நினைத்தழுவிக்கட்டிக்
கொண்டு, செவ்வண்ணநமர்கைலைக் கேகியெஞ்சூண் முடிப்பலென
ச்செருக்கிச்சொன்னாண், மைவண்ணமலர்க்குழலாள் † வான்றிரட்
டிவிழுங்குவலென் மாற்றம்போல. 77

முடிக்குமலர்க்குழன்மடவாள் சூண்முடிப்பலெனுமொழிக்கு மூ
றுவல்செய்து, பிடிக்கவலையாயிலெனப்பிடிநடையாய் பிடியென்று
பிரான்மறைந்தான், வடக்கொடிதன்விழியினுற் காண்பதும்போய்
மதிமயங்கிவறிதுநின்றாள், சுடர்த்தொடிமென் றோண்மடவாரின்றி
ழந்தோ மிவளெனத்துயருழந்தார். 78

வெண்டிங்கணிலவுவாயிடைப்புகினுஞ் ‡ சகோரமெனுமென்பு
ளன்றி, யுண்டிங்குவாழுமுயிருளதோநம்மல்லமனுமொருவன்றானும்,
பண்டங்குமொழிமாயை கைப்படினுமவள் பிடிக்கப்படுவதெனைதான்,
றோண்டன்பின்வழிநின்றுமனமாசு தீர்ந்தபெருந்தூயோர்க்கல்லால்.

மாயைதனைவாதித்துத்தள்ளுதன்னிலைநின்றுமாயாவாதி
யாயினனன்மறைச்சைவசித்தாந்தகுலதீபமாயினனென்
றோயுமனநிறுவியிறப்பெதிர்வுகிழ்வெனுங்காலமுணருமாற்றற்
றூயமுனிவரெல்லாமல்லமனைத்தொழுதவந்தொடங்கிவாழ்ந்தார்

ஏழாவது

மாயைகோலாகலகதி

முற்றிற்று.

கதி-எ-க்கு திருவிருத்தம்-சுட்டி.

---

* வெறுமையாகிய ஒடு இரதம் - இரசகுளிகை. † வான்-ஆகாயம். ‡ சகோரம் - நிலவைப்பருகும்பறவை $ வைதிகசைவசித்தாந்தமாகலின் "மறைச்சைவ சித்தாந்தம்" என்றார்.

எட்டாவது

வசவண்ணர்வந்தகதி.

அசைவிலல்லமற்கர்யுமைநற்கலே
வசவதேவன்வலியகண்ங்கடாங்
கசியுமன்பிற்கயிலையினின்றுதென்
றிசையில்வந்ததிறமுரைசெய்குவாம். 1

தீங்குகாணுஞ்சிறுவிலைநாட்கடன்
வாங்குமோர்பொருள்போக்கும்வறியர்போ
னீங்களானெடுந்தகைமாயைநின்
றேங்குமாவியியக்கமுமின்றியே. 2

மத்தளங்கொடுவந்தவன்றன்னெடு
பொய்த்தநண்ணிடைபோயினளென்னவே
சித்தநாணுந் துயரமுந்தின்றிடப்
பித்தர்போற்பின்னெடர்ந்தனர்பெற்றவர். 3

தக்கதாய்தந்தை * சாயப்பழிசெயு
மக்களின்றிமலடர்தாமாதலு
மிக்கவன்பிணிமேவலுநல்லவென்
றுக்கநெஞ்சுடனேடினன்மன்னவன். 4

காய்பசிக்குக்கவன்றுதைசதின
வாய்பதைக்குமறவர்வலையிடைப்
போய்விழக் † குழக்கன்றுபுகுந்தவண்
டாய்பதைப்பதுதன்னெதிர்காணுமோ. 5

கண்டுவார்சிலைக்கானவர்பார்ப்பினைக்
கொண்டுபோகக்குடம்பைகண்டேங்கியே
தண்டமாரிரைசோறப்பறவைகண்
மண்டுநோயின்மறுகுதல்காணுமோர். 6

அரின்மித்திட்டதர்படப்பூம்பணை
மரமுறித்தமழைமதக்கைமுக

---

* சாய - ஒறக்க. தளர்ந்துவரட என்னலுமாம். † குழக்கன்று- இளங்கன்று. இதுமுதல் நான்கு செய்யுள்கள் மாயையின் தாயாகிய சுஞ்ஞானி கூற்று.

வுலாடிப்பிறையொண்முருப்பஞ்செவிக்
கரிநடப்பக்கலங்கியிரியுமோ. 7

பரற்கண்மென்பதம்வைத்துப்பதைக்குமோ
* சுரத்துமேனிதுவண்டுவெதும்பிநீ
ரிரக்குமோமகளென்செயிமோவெனத்
தரிக்கருந்துயர்தாயடைந்தேகினள். 8

பொன்னேயன்னபுதல்விபொருட்டிவண்
மன்னர்மன்னன்மனத்தில்வளர்ந்தெழு
மின்னல்காணவுமூழொன்றிருந்ததென்
றுன்னிமாழ்கியவ்வூர்பின்போயினர். 9

அயர்ந்துநிற்குமரிவையைக்கண்டுநான்
முயன்றுமெய்த்தவமுற்றும்பயின்றனேப்
பயந்ததற்குப்பயனன்றுதவினே
நயந்தெமக்கெனத்தந்தைநவின்றனன். 10

என்னேநீங்கியிழிதொழில்செய்பவன்
றன்னேநாடித்தலைமை † யிழந்ததனே
கன்னிநீகொடுங்காட்டில்வந்தாயென
வன்னேயோவென்றரற்றியழுதன்னள். 11

மகனுமல்லனவ்வல்லவன்மாயையும்
மகளுமல்லள்வரைபுரைதோளினு
யிகலும்வாட்கணரசியுநீயுமிங்
ககலுமென்றுவிமலேயறைகுவாள். 12

வினேப்பயன்கொளவேண்டுநேரோரிடந்
தனேப்பொருந்துறச்சம்பந்தமாத்திரத்
தெனக்கினியவெனறபிமானமொன்
றனேப்பொருந்தியழிவரறிவிலார். 13

தனேயராகியுந்தந்தைதாயாகியு
முனேயுருதவுயிரிலேயாதலா
லினேயர்கேளிரினேயரயலென
நினேவுறேன்மிளிர்நெட்டிலைவேலினுய். 14

வேனெடுங்கண்விமலேயிவைசொலப்
பானலங்கட்பனிமதிவாண்முகப்
பூநறுங்குழற்பொற்றொடிமாயைமுன்
றுன்றைடந்தமைதந்தைக்குணர்த்தியே. 15

* சுரத்து - பாலிலத்தில். † இழந்து என்னே என்க.

காவியங்கட்கனியிதழ்மாதுமை
யேவவந்தவென்னெண்ணமுடித்திலன்
* போவனங்கிப்புரிகுழலோடுநா
னீவிர்நோவன்மினென்னைநினைந்தனை. 16

விரைந்தெழுந்துவிமலையணங்கொடு
வருந்துநெஞ்சகமாயையக்காட்டுளோர்
பிரிந்தழுங்குரல்பின்றொடர்ந்தேகவே
பொருந்தருங்கயிலைத்தடம்போயினள். 17

அழிதுவாய்விட்டரற்றிலன்றன்னுடல்
புழுதியாடப்புரண்டிலன்மன்னவன்
பழுதிலாததன்பாவைகாணுமையா
லெழுதுமோவியமென்னநின்றனரோ. 18

விழுவண்மீளவெழுவண்மெலிந்துநைந்
தழுவண்மேனியசைந்துநிலக்கையா
லுழுவல்வாய்கொண்டுயிர்ப்பளிறப்பலென்
றெழுவள்கைந்நெரித்தேங்குவளன்னையே. 19

† பாடுமாதரும்பந்துங்கழங்குநின்
றூடுமாதருமாகுமரிவைய
ரோடுமேவியொருமகள்வாழ்ந்தவம்
மாடநானினிக்கண்டுயிர்வாழ்வனே. 20

துளிக்கும்வார்மதுச்சோலையும்வாவியும்
டளிக்குமாடமும்பாழ்படவென்மகள்
களிக்குமானிருங்காட்டினுளெம்மைவிட்
டொளிக்குமாறெருசற்றுமுணர்ந்திலேன். 21

என்னைநீவிட்டிருப்பினும்பொற்றொடி
யுன்னைநான்விட்டுயிர்பிழையேனென
வன்னைவாய்விட்டரற்றினளாயிடை
மின்னனீருங்கதறினர்வேலைபோல். 22

வந்துவேந்தன்வழி ‡ மரபாரிய
னுந்தமாமகணேண்மைநமக்குநான்
முந்துசூலிலனுதயர்மூழ்கினீர்
சிந்தைநோதறகாதெனச்செப்புவான். 23

---

* போவன்-போவேன். அங்கு இப்புரிகுழலோடுஎனப்பிரித்துக் கொள்க. † பாடுமாதர்-விறலியர். ‡ மரபு ஆரியன் - பரம்பரைக்குரு.

அருந்தவம்பலவாற்றுமறிஞரும்
பொருந்தருங்கயிலைக்குமின்போனமை
தெரிந்துநெஞ்சந்தெளியவறிந்துநீ
வருந்துந்தன்மைமடமைமடமையே. 24

நிலநுதற்பசுந்தேமொழிமாதுமை
கலநுமக்குக்கவின்மகளாகுகீர்
தலைமைபெற்றதுசாலுமுமையினி
யுலகினிற்பிறரொப்பவரில்லையே. 25

என்றுகூறக்குரவனிறைமகன்
மன்றல்வாழ்க்கைமனையொடுதன்பொரீஇச்
சென்றுமாடத்திருநகரிற்புகாக்
குன்றமாமதிற்கோயிலிணிணினான். 26

வேறு.

* கயிலையில்விமலையோடுங்கவிரிதழ்மாயைசென்று
வியனிலமதனிற்றன்னைவிடுத்தஞான்றென்னவானோர்
ப்யிலவைதன்னினிற்கும்பரனையுமியமீன்று
மயிலியறனையும்வாழ்த்திவணங்கியங்கருகுநின்றுள். 27

பொலிவழிவதனங்கண்டபோதேயம்மாயைநெஞ்சின்
மெலிவினையறிந்தமன்னைவினவலுஞ்சூள்கொண்டேகி
மலர்தலையுலகிற்றுன்முன்மயங்கியவாறனைத்து
நலியு † நாண்டவவருந்திநவின்றனள்குறிப்பிற்றோன்ற. 28

நன்னகமகள்கேட்டுள்ளநாணுபுமுகங்கவிழ்ந்தாள்
பன்னகசயனனுதிபண்ணவர்நெருங்கவைக்கண்
முன்னகைசெய்துதியமுப்புரமாளச்செய்தான்
புன்னகைபுரிந்தான்பங்கிற்புரிகுழல்செருக்குமாள. 29

அளியனென்றுனக்குநான்சொல்லமனரியனேமற்
றெளியனேவுரைத்திநீயென்றிலங் ‡ கயிலெறிதலேபோல்
வெளியபுன்மூறுவல்செய்யவிமலன்வெண்மதியங்கண்ட
நளினமென்மலர்போலென்றூய்நகைமுகமொடுங்கினளால். 30

போக்கரும்வலிபுகன்றுபோய்வருமாயைசொன்ன
வாக்கினில்வருந்துவேனவ்ள்ளனீநகைசெய்தென்ளன்

* கவிர்-முருகமலர். † நாண அட-வெட்கம்கொல்ல. ‡ அயில்-எறிதல்-வேலாயுதத்தை வீசுதல்போல.

மூக்கிலிமுகத்தின்முன்னர் * முகுரங்காட்டுதல்போன்மென்ன
மீக்கிளரிமயமீன்ற மெல்லியன்மெலிந்துசொன்னாள். 31

நடம்பயிலெந்தைமங்கை நாணினுல்வருந்தினுலென்
றடந்தருள்சொல்வன்ஞால மூலக்குமம்மாயைசூளா
னெடுந்தகைமுன்னஞ்சென்ற நிலையேநன்முடுகொல்லோன்
மடங்கன்முன்வெல்வேனென்று வருதலேயாற்றலன்றே. 32

அல்லமன்பெருமையெல்லா மனைவருமறிந்துகொள்ள
நல்லெழின்மலைமடந்தாய் நன்குணர்த்தினைநீயென்று
சொல்லுநான்றினின்னை நிந்தனைசொல்லவல்லா
ரில்லையென்றியம்பயாவு மீன்றவளியம்புகின்றாள். 33

† பொறியிலியேன்செய்தீமை பொறுத்தருள்புரிந்துமெய்ம்மை
யறிவருள்குரவனுகு மல்லமன்றன்னைக்காணு
நெறியருள்புரிதியென்ன நிரைவளைவணங்கிக்கூற
மறிமழுவமர்ந்திருக்கு மலர்க்கைவானவனுரைப்பான். 34

மத்தமதறுகுணத்து மாயையைவிடுத்தவாற்றூ
னித்தியகுரவன்றன்னை நீயறிந்திலையணங்கே
சத்துவகலைமடந்தை தனையினிவிடுத்தியாபிற்
கைத்தலநெல்லிபோலக் காண்குவையவனையென்றான். 35

மிடியடவிறப்பலென்று மேவுமோரிடத்திற்செம்பொன்
குடமொடுகண்டவன்போற் கொலைசெய்நாண்டுறந்துவந்து
குடியிடையுமையெம்மானைத் தொழுதுசத்துவவணங்கைப்
படிமிசையலமற்காண்பான் செல்கெனப்பணித்தாளன்றே. 36

அப்பொழுதருகுநின்ற வருணந்திதேவனன்னை
யொப்பரும்பத்தியென்னு மஞ்சனமொன்றுண்டாயிற்
செப்பருஞானனந்த வல்லமதேவனென்னும்
வெப்பினையெளிதுகாண லாமெனமகிழ்ந்துசொன்னான். 37

அழிவருநிதியவைப்பை ‡ யஞ்சனங்கொண்டுகாணும்
விழியுடையவன்போன்ஞான மெய்க்குரவனைத்தான்கண்டு
கழிமயலன்பர்காணக் காட்டுவோனிவனென்றெம்மை
வழிவழியடிமைகொள்ளும் வள்ளனந்தியைப்புகழ்ந்து. 38

சத்தியால்யான்பிணித்த தனைத்தனைத்தனதுதாய
பத்தியாலவிழ்க்கவல்லோன் பார்க்கினிங்நந்தியேதா

---

* முகுரம் - கண்ணுடி. போனம் என்ன - போலும் என்று.
† பொறியிலியேன்-அறிவில்லாதவளாகிய யான். ‡ அஞ்சனம்-மை.

* னித்தினுல்விலங்குபூட்டு மிறைவனேவிடுவிப்பானே
மெய்த்தவாரருளினென்யார் விளம்புகவென்றுசொல்வான். 39

அல்லமனென்னுஞான வானையையகப்படுத்த
வல்லவொண்பார்வைரீயே யாதலான்மண்ணிற்போகி
யெல்லையிலன்பர்நெஞ்சத் திண்பருணந்தியென்று
சொல்லினுயிரிற்றேன்றுத் தூணெனவிருக்கும்பெம்மான். 40

அந்திவண்ணத்தெங்கோமா னருளினுலின்னகூறச்
சுந்தரிதனக்குமெட்டாத் தூயவன்றன்னைக்காண
நந்திவல்லவனேவென்று நகைசெய்துகணங்கடம்மூள்
வந்தொருசிலருரைப்ப மங்கைபங்காளன்சொல்வான். 41

நந்தியென்றனையுணர்ந்தா னனவன்றனையுணர்ந்தேன்
சிந்தைசெய்தெம்மைநீவிர் தெளிவுறவறிகிலீரென்
றெந்தையெம்பெருமான்கூற விகழ்ந்துரைசெய்தோரெல்லாம்
வெந்துயர்கொண்டுநின்றூர் மீளவும்விமலன்சொல்வான். 42

மாசறுநந்திபத்தி வார்த்தையாலறியீர்நீவிர்
காசினியதனிற்சென்று கண்களாலமையக்கண்டு
பேசுதிர்பின்னரென்று பெருந்தகைநந்திதன்னை
யீசனெண்கணங்கடம்மை யேவினனருளினானே. 43

கண்ணுதலருளாலேவுங் கணங்களுட்டலைமைபெற்றோர்
மண்ணுலகதனில்வேண்டும் வளம்பதிதோறும்வந்து
நண்ணினருலகர்கண்ணி னர்வடிவாகத்தோன்ற
வெண்ணுறினெழுநூற்றின்மே லெழுபதென்றுரைக்குமெண்ணூர். 44

நந்தியென்கின்றஞான ஞாயிறுநிலத்துதிப்பின்
முந்துறு † மமணரென்னு மூடவல்லிருள்கெட்டோடுஞ்
சந்திரமௌலிசீர்வெண் டாமரைமலருமென்னு
விந்திரன்முதலாயுள்ள விமையவர்மனமகிழ்ந்தார். 45

எட்டாவது,
வசவண்ணர்வந்தகதி
முற்றிற்று.
கதி-அ-க்கு திருவிருத்தம் - ௪அ௨.

---

* இதினுலென்றது - இத்தினுலென்றபடி, எதனைக பற்றிவந்தவிரித்தல் விகாரம். † அமணர் - புடவையுடுக்காது திரியும் புத்தருஞ் சமணருமாகிய திகம்பரர்கள்.

சிவமயம்.

ஒன்பதாவது,

அக்கமாதேவியுற்பத்திகதி.

புரஞ்சுடுசிறுநகைப் புனிதன்பாலமர்
கருந்தடங்கண்ணிதன் கலேயுநந்தியு
மருங்கணாதரு மகனிலத்திடை
வருந்திறமறிந்தவா வகுத்துக்கூறுவாம். 1

பெடையொடு * சுரும்பினம் பெரிதிரைந்திடக்
கடிதடமளவுவாய்க் கநலினெடியே
மடையுடைமதுமழை மலர்பெய்சோலகு
ழுடுதடையெனுக ரொன்றுண்டாயிடை. 2

நன்மையென்பனவெலா முடையனுன்மறைப்
புன்மையென்பனவெலாம் பொருந்துரூனெனுந்
தன்மைதன்பெயரினு லறியத்தக்கவ
னின்மலனெனவொரு நிகரிலானுளன். 3

அவனெழின்மனேயவ † ளாடகத்தினேச்
சுவணமென்குதலெனச் சுமதியென்பவ
டவநிலதன்னினுந் தலைமைத்தென்னவே
யுவமையிலில்லறத் தொழுகு ‡ நீர்மையாள். 4

தூநிருமலனுகச் சுமதிதன்னிடைத்
தாலெருமகளெனச் சார்ந்துதோன்றினு
$ ளானுயர்கொடியினே னங்கைதாங்குரு
மானுறழ்சத்துவ கலைமடந்தையே. 5

மதிபெறுகடலென மகளேயீன்றவர்
நதிபெறுசடைமுடி நம்பன்பாலுறு
கதிபெறுமதிரூதற் கரும்பைப்பெற்றுநற்
றுதிபெறுமலேயென மகிழ்ச்சிதுன்னினர். 6

---

* சுரும்பு - ஆண் வண்டு. † ஆடகம் என்பது நால்வகைப் பொன்னுட்சிறந்தது. நால்வகை யாவன - ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம். ‡ நீர்மை-குணம். $ ஆனுயர்கொடி-இடபம் வரைந்தகொடி.

நெறிமுறைநிருமல னீறுசாத்தியே
யறிவருமஞ்செழுத் தறைந்துமெய்யுணர்
குறியினேத்தரித்தனன் குழவியாகிய
* பொறிங்கருமொரு புதல்விக்கென்பவே. 7

இந்தவார்சடையினே னிடத்தளேயெனுஞ்
சிந்தையான்மகளேமா தேவியென்றொரு
சந்தராமங்கொடு தானழைத்தனன்
றந்தையாதற்குநற் றவம்புரிந்தவன். 8

அறிவருளாதர வடக்கம்வாய்மைமெய்த்
துறவுநல்லொழுக்கமே தூய்மையென்றிவை
யுறவொடுகுழலியா யுடன்வளர்ந்திட
மறுவறுசுமதிதன் மகள்வளர்ந்தனள். 9

வாடியமருங்குலம் மாயைதோன்றுநாட்
கோடியசிலைகொடு தவங்குலைப்பவே
யோடியமதனன்மா தேவியோங்குநாள்
வீடியசிலையுய் வீழ்ந்துமாழ்கினன். 10

விழுந்தனகொடியநீ வினைப் † பரப்பெலா
மெழுந்தனகல்லறம் யாவுந்திங்களங்
கொழுந்தெனநிருமலன் குமரியோங்குநாள்
முழங்கினசிவாகம முற்றுமெங்குமே. 11

தே வ று.

ஈங்குமாதேவியின்னணமிருப்பவெம்பிரானேவியகணங்க [வாகித்
டாங்கள்வேண்டியவொண்பதிதொறுமுன் செய்தவத்தர்பானன்மக
ளீங்கிலாச்சித்தராமையன்மாச்சிதேவனென்றிடுபெயர்முதலா
யோங்குநாமங்கள்வேறுவேறுறக்கொண்டுற்றனர்நற்றவமுயன்று. 12

பயக்குறுமினியசங்கரபூசை பல்வகைநெறிப்படவியற்றிச் [றக்க
செயற்கருஞ்செய்கைசெய்தவரிருந்தார் தென்றிசைக்கயிலேபோற்சி
மயக்குறும்மணவல்லிருண்மெலிய ‡ வயிணவமெனுமுமழுங்க
வியக்குறு $ சைவமலராண்ணந்தி வெய்யவனுதித்தமைவிரிப்பாம்.

---

* பொறி - இலக்குமி. † பரப்பு-விரிவு. ‡ வயிணவம்-பாஞ்ச
ராத்திரமதம். $ சைவம் என்றது ஈண்டுச் சித்தாந்தத்தை.

வாயின்மண்ணிட்டுக் கொண்டவன்றன்னே மதித்துநன்னுத லின் * மண்ணிடாமற், பாயும்வெண்டிரையிற் றுயில்பவன்றனக்குப் பரிதியொன் றளித்தருண்முக்க, ணுயகன்றனேயே கருதிவெண்ணீ ற்ரு னன்னுதல் வீதியையணியுந், தாயநன்மறையோர் தமக்கிடமா குந் தரிசிலாவிங்குளாபுரியே. 14

கதிர்வீசுசெந்நெற்காடுசூழ்கரும்பு கரும்புசூழ்கதலியங்கதுசூழ் புதுநறும்பாலைக்கமுகதுசூழ்முப் புடைப்பசுங்காயதெங்கதுசூ [ழ் மூதிர்கனித்தேமாந்தண்பொழில்பார்ப்பார்க் குயர்வுறுதுயர்மிடிபுகா லதிர்முரசியம்பும்வீதியந்நகரிற் கணிகள்வைத்திடுபடைகாட்டும். 15

விருந்தினுக்கிடுவா ரன்னமந்நகரின் வேதியர்மடந்தைய ரெல் லாம், பொருந்துமன்னத்திற் கிடுவனவிருந்து புனல்வயல் செங்கம லங்கள், வருந்துநண்ணிடை நண்மாதர்கைம்மலர்க்கு வண்டினக் கொடுப்பர் பேரின்பந், தருந்தனிநகர்சூழ் தடங்கள்வண்டிற்குத் தாண்மலர் கொடுத்திடுமன்றே. 16

இந்நகர்வாழுமறையவர்செய்யும் யாகதூமம்படிந்தன்றே, பொ ன்னகர்வாணர்நிறைந்தவாயுளராய்ப் பொருந்துதலிந்நகர்மறையோ, ருன்னருமனுவானெருப்பினேவளர்த்திட் டொழுகுநீர்காட்டுறினன் றிப், பின்னெருசெயலாற்கலியுகந்தன்னிற் பெருகுநீர்காணுறப் படுமோ. 17

இனேயமாநகரி னந்தணர்க்கெல்லா மிறைமைபூண் டுளனெரு மறையோ, னினேவெலாமன்ரு ளினுமுரையெல்லா நிருமலன் றுதி யினுஞ்செய்யும், வினேயெலாமவன்பூசனேயினும் வைத்தோன்வேத மூமொழுக்கமும்வல்லான், மனேயுளானெனினுந் துறந்தவர்க்கொப் பான்மற்றவனுமமாதரசன். 18

திருந்தியவனே யான்றேவிதன்னுமஞ் செப்பின்மாதாம்பிகை யென் ளருந்ததிமுதலாங்கற்புடையார்த மருங்கிலுறின்றிமுற்ற [பா நிரந்தரமவளுக்கைகுவித்திறைஞ்சி நினேந்துபின்பாயலிற்படுப்பார் கருந்தடங்கயற்கட்பூங்கொடியனேயாள் கற்பினேயாவரேபுகல்வார்.()

பூங்கொடியனமாதாம்பிகைபெருமை புனேந்துரையன்றுபட்டாங்கே யோங்கிய † வபரசிவனெனவேத முரைத்திடுமெருணந்திவந்தான்

---

* மண் - சித்திரபுண்டரம். இது இக்காலத்து நாமம் எனவழங் கப்படுகின்றது. இது அவைதிகம், நவினமென்பதனைச் சைவபூ ஷண சந்திரிகை யென்னு நூலிற் பரக்கக்காண்க. † பரசிவம் அபர சிவமென்றிருபாற்று. பரசிவமெனல் - மூப்பத்தாறு தத்துவங்களை யுங் கடந்துநின்ற நிருமலதற்பரசிவத்தை. அபரசிவம் எனல்-படை ப்பாதி யைந்தொழில்களையு மியற்றுவான்கொண்ட நவபேதத்து ளொன்றை.

ருங்குறவவடன்வயிற்றிடையதனுற்றக்கவர்தகவிலரென்ப [யோர். தாங்கவர்பயந்த புதல்வனுற்றெளிய வறியினென் றறைகுவர்பெரி

* ஐந்தொழிலொருவன் றிருவுளமகிழ † மறுதொழிளாளன் மாதரசன், பைந்தொடிகொழுநற் றெழுதெழுதொழிளால் பரிந்து தீவளர்ப்பவன்மறையோன், செந்திருவனையாள் ‡ விருந்தினர்வயிற் றிற் றீயவிப்பவளிவர்பெருமை, நந்தெழின்மலரோன் சொன்மகளிருக்கு நாவினும்புகன்றிடப்படாதே. 21

இன்னமாதரசன்றேவிதன்வயிற்றி னிவ்வுலகெலாஞ்செய்யபுண்ணியத்தான், மன்னுமாளிகைள் விருந்துணக்காமர் வல்லியின் மலர்மலர்வதுபோ, லென்னையாளுடைய நந்திவானவன்ரு னெய்தி வந்துதித்தனனன்று, சென்னியாலமார்தொழுதபூமாரி சிந்தினர் சந்துபிழுங்க. 22

எங்குருநந்திதோன்றுநாட்புதுமை யென்சொல்வாங் $ கண்டு மூட்டென்னும், வெங்குணவமண ருளத்தெரிமழுவோன் வேடங்கண்டஞ்சலிசெய்ய, வங்கொருநேயம் பிறந்ததுதிருமா லடியவருளத்தினிலெங்கள், சங்கரனிறைவனெனவொருஞானஞ் சார்ந்ததுதமையறியாமல். 23

கொலைகளவழுக்கா றவாவொடுவெகுளி கொடுஞ்சொல்பொய் பயனிலகூற, னிலையழீஇயொருவன் செய்ந்நன்றிமறத்தனிந்தினவஞ்சனைபிறர்தஞ், சிலநுதன்மடவார்க் கருதலென்றினைய தீமைகளியாவும்போயினவா, னலமலிதரும மூர்த்தியாகியநன் னந்திவானவன்புவிவருநாள். 24

தாடலைதந்திங்கெம்மையாணந்திதாயகட்டினுநின் றுதரைமே[வாய்க் லேடவிழ்மலர்வாண்முகமதுதோன்ற வெழுந்தருளுதன்முனங்குருகூடலசங்கமேசன்ரு ய்க்கொளித்துக் குறுகிநன்னுதலினீறணிந்து வீடருள்பரமசிற்கனலிங்க மெய்யுறத்தரித்தனனம்மா. 25

தரித்தபின்றன தமேனிதோன்றுமற்ரு யெதிர்நின்றிடப்பேர் [வாதிரித்தநல்வசவனென்று பேரிட்டுச்சென்றனன் சிவன்றனைக்குரு

* ஐந்தொழிலாவன:—சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் † அறுதொழிலாவன - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். ‡ விருந்தினர்-நூதனமாக வருபவர். $ பிறமதத்தவரைக் கண்டகாலத்துக் கண்டுமூட்டு என்று சொல்வார்சமணர்.

யொருத்தர்தம்மிடத்திற்பாவனைசெய்கென்றுரைப்பவருரைகெடத்
யருட்குருவடிவாய்வந்தருள்புரிந்தவாலமார்சூலபாணியனே. [தானே

பிறந்தமெய்ஞ்ஞானப்பிள்ளைகன்னுதலிற்பெருகொளிதீறுமொ
ண்களத்திற், சிறந்துளவமலலிங்கமுங்கண்டுசெறிந்தவரினைவரும்விய
ந்து, மறைந்தரன்குருவாய்வந்திவைபுனைந்து மகவினைவசவனென்
றுருபே, ரரைந்தனனென்னவறிந்தனரமலனறிவுணின்றறிவிக்க
வன்றே. 27

* குறில்வழிலகரந்தனிநிலையாயுங்கூடிய தகரமுன்னெழுத்தென், றறிகுறிவடிவந்திரிதல்போனந்தியடல்விடைமெய்திரிந்துறினு
நறுமலர்விழியிற்கண்டவரெல்லாநந்தியேயென்றுளமகிழ்ந்தார், பெ
றுதவமுயன்றவன்னையும்பிதாவும்பெறுமுவகையினாருரைப்பார்.

ஈன்றநாடொடுங்கிச்செய்கடன்முற்று மியற்றினன்மாதரசன்
ருன், றேன்றுமோர் குழவிப் பதங்கடந்தெங்கோன் சொல்குறுமு
ன்னுறங்கிலை, யான்றமாமறைகண் முதலவாத்தான்முன் னறிந்து
ளகலை யெலாமறிந்தான், சான்றதாமதிய மிரவிவந்திறுப்பத் தன்க
திர்தானடைகுதல்போல். 29

பரமனையிகழ்ந்துநெறியலாநெறிபோம்பரமதயானையையடக்க
வரமுறுகூர்மையங்குசமென்னவரனடியாரெனுமாவிற் [யாண
கொருமழவிளங்கன்றெனவருள்வசவனெழுகுநாள் வளங்கொள்கல்
புரமுறவமணகுழாத்தொடுமிக்கபுரவலன்விச்சனளிருந்தான். 30

படியில்கல்யாணபுரமெனுந்தாசபரிவபத்தியால்விளர்ப்பக்
கொடியபுன்சமணமாசுவர்பிடித்தாங்குவலயத்திருந்திடுமந்நா
ளடியவர்செல்வமெனுவசவேசனங்குடன்வந்தநாகாம்பை
யுடன்வரவந்தவ்விச்சளனகரி னுற்றனனற்றவர்நெருங்க. 31

வந்தனன்வசவதேவனென்றுரைப்பமன்னவன்விச்சளனிந்து
மந்திரியென்றுமறைந்தவுட்பகையைமலிபொடிமூடியதழலே [போ
வெந்தழலென்னவறிந்திடாதெடுப்பமென்கைதீண்டுதலெனவெதிர்
யுய்ந்திடவரிதாய்த்தன்மதமழியவுடன்கொடுகோயிலுட்புகுந்தான்.

பொருந்துமத்தாணியிடைத்தவிசொன்றுபுறமதகோளரிக்குதவி,
யிருந்திறற்சிங்கஞ்சுமந்தபூவணமே லிருந்தனனரசனப்போதி, லரு
ந்திறற்றூனைகாவலர்வேந்த ரமைச்சர்வெண்கவரிகொண்மாதர்,நெரு
ங்கிநிற்கியபோவையிடத்து நிகழ்ந்தமையொன்றெடுத்துரைப்பாம்.

* "குறில்வழிலளத்தவ் வணையினுய்த - மாகவும் பெறூஉ மல்வழியானே" என்னுந்தன்னூற் சூத்திரத்தினர்க.

லேறு.

இந்திரனெதிர்நின்றுமேந்திழைகாதிற்செம்பொற்
சுந்தரவோலையொன்றுசோர்ந்தனச்சுருண் * மூடங்க
லந்தரமுகட்டினின்றுமரசன்போவையிடத்து
வந்தெதிர்விழுந்தொன்றுமானிடர்மருண்டுநோக்க. 34

நின்றவரெடுத்துவந்துநெடுங்கையிற்கொடுப்பவாங்கி
வென்றிகொண்மடங்கலன்னான் விரித்ததையெழுத்துநோக்கித்
தன்றலையெழுத்தேயென்னத் தானுணர்ந்திலன்மயங்கி
வன்றிறலமணகாலன் மலர்க்கையிற்கொடுத்தானன்றே. 35

வாங்கியமுடங்கலோக்கி வசவநாயகனிவ்வோலை
தாங்குநின்றவிசின்கீழோர் தமனியவைப்புண்டென்ற
தோங்கியதூண்செய்கோளரா யுனக்குநான்காட்டுவேனென்
றோங்கதையவிழத்தானவ் வரசர்கோனதிசயிப்ப. 36

அகழ்ந்திடநிதியவைப்பொன் றூடகமலிபடத்திற்
புகுந்திவண்வந்துமெல்லப் புறப்படல்போலத்தோன்ற
மகிழ்ந்தனனரசர்கோமான் வசவனைக்கண்டபோதே
நிகழ்ந்தவொண்பயனுணர்ந்து நெஞ்சகநனியியந்தான். 37

பயிலுநல்வினையெமக்குப் பயந்தவிவ்வசவதேவன்
கயிலைநன்மலைக்கிரண்டாங் கடவுளேயென்றுசொல்லி
யியலுரைமடந்தைபொய்யா ளென்பதைப்புதுக்கினனச்
செயலினைவிழியிற்கண்டோர் தெளிந்துநெஞ்சகமகிழ்ந்தார். 38

மந்திரிக்கிழமைநல்கி மாபுளியுரிமையாற்றி
மைந்தனைப்புரக்குந்தாய்போன் மற்றெனைப் † புரத்தியென்று
சிந்தனைகளிப்பவின்சொற் செப்பியாயிடையிருப்ப
நந்தியைத்தொடர்புகொண்டா னுந்தகத்தடக்கைவேந்தன். 39

பெருந்தகைவசவதேவன் பெருமைக்குத்தக்கவாறே
யருங்கடிமணஞ்செய்வித்தா னலங்கல்வேல்முருகனன்னான்
றிருந்தியவம்மணத்தின் சிறப்புநாம்விரிப்பதென்கொல்
புரந்தனையன்றுதொட்டுப் புகன்றகல்யாணமென்றால். 40

இவ்வகைகல்யாணத்தி னிருப்பநாகாம்பையென்னுந்
‡ தவ்வைநம்வசவதேவன் றன்பிரசாதந்தன்னு

---

* மூடங்கல் - ஓலை; திருமுகம். † புரத்தல் - பிறராலபாயம் வராமற் காத்தல். ‡ தவ்வை - மூத்தவள்.

லெவ்வமின்முத்திமெய்யோ டிருக்கையினளிக்கும்வீர
சைவநன்னெறிவளர்க்குந் தனயனீன்றுளம்மா. 41

மைந்தனீன்றுவந்து வசவநாமம்புனைந்தா
ணிந்தையில்கற்புநங்கை நிகழ்திருமுகங்களாறு
* மந்தமிறலங்களாறு மறிவித்தற்குலகில்வந்த
கந்தனென்றுன்னவந்நா காம்பைதன்மகன்வளர்ந்தான். 42

வீரமாகேசரென்னு மென்பயிர்வளர்க்கவந்த
மாரிபோனிகரில்சென்ன வசவதேசிகனிருப்ப
நேரிலாவசவநாம நெடுந்தகைமகவொன்றீன்று
சீருலாஞ்சங்கமேச தேசிகன்பெயர்புனைந்தான். 43

மொழியினுனினைவாளெக்கான் மூக்கணைடியர்வேண்டிற்
றெழிவிலாதுதவித்தாய்போ லோம்பினன்புறமதத்தோர்
வழியெலாம்வழக்குமாற மலிபுகழ்ச்சைவமென்னும்
பழியிலாவழிநடப்பப் பண்ணினன்வசவதேவன். 44

அனடியவர்க்குத்தேனு வாகியவசவன்சீர்த்தி
வீரிநிலமுழுதும்போர்ப்ப வெள்ளிவெற்பினையகன்று
தரைமிசைவந்திருந்த தவரெலாமுணர்ந்துசென்றூர்
பொருவில்கல்யாணத்திற்குப் போதல்போற்கல்யாணத்தில். 45

பலரெடுவரினுமெள்ளும் படிதனிவரினுமிக்க
நலமொடுவரினுமேனி நலமறவரினுஞ்சீர்சான்
மலமகள்கணவன்றொண்டர் வரவுகண்ணுறினெதிர்ந்து
நிலமிசைவணங்கியஞ்சி நின்றுநன்றுற்றநந்தி. 46

சாதியுங் ‡ குறியுநீத்துச் சரணரைச்சிவனேயென்று
பாதபங்கயமிறைஞ்சிப் பத்திசெய்குவனந்நந்தி
தீதறுசுவைத்தீங்கண்டாற் செய்தசெங்கரும்புவேம்பும்
பேதமொன்றுறுமற்சாதி பெயர்விடுத்தறிதல்போல. 47

மாதர்கடமையகன்ற மலிதுறவினரெண்ணில்லார்
கோதையருடனிருந்துங் கெர்டுமையலிலரெண்ணில்லார்
மேதைகொளருச்சனைக்கு வேண்டுவமுழுதுங்கொண்டு
$ போதுகள்வழாமலீசன் பூசைசெய்பவரெண்ணில்லார். 48

* ஸ்தலங்களாறுவன - பக்தஸ்தலம், மாஹேஸ்வரஸ்தலம், பிரசாதிஸ்தலம், பிராணலிங்கஸ்தலம். சரணஸ்தலம், ஐக்கிய ஸ்தலம்.
‡ குறியாவது - அடையாளம். $ போதுகள் - கர்லங்கள்.

விரதங்கள்வேறுவேறு மேவிநிற்பவரெண்ணில்லார்
* பரதஞ்செய்மதரிக்கட் பரத்தையர்மனைகடோறுஞ்
† சுரதஞ்செய்பவரெண்ணில்லார் துயரந்நன்னந்திநாம
வரதன்றனன்பின்வாழும் வழுவின்மாகேசரம்மா. 49

தீதுசெய்சமணர்முன்னர்ச் செயற்கருஞ்செய்கைகாட்டி
வாதுசெய்தவர்செருக்கு மாய்வுசெய்திமயமீன்ற
சூதுசெய்மூலமடந்தை தூணவனுர்தொண்டர்க்கெல்லாம்
யாதுசெய்குவனென்றேவ லியற்றுவன்வசவதேவன். 50

உளந்தெளிசரணர்தம்மோ டிம்முறையொழுகுநாளி
னளந்தறிவரியசோதி யல்லமன்வரவுநோக்கி
வளங்கெழுதிருக்கல்யாண வளநகர்தனில்வாளுக்கு
மிளம்பயிர்போலிருந்தா னெம்மையாளுடையநந்தி. 51

ஒன்பதாவது,

அக்கமாதேவியுற்பத்திகதி

முற்றிற்று.

கதி-கூ-க்கு திருவிருத்தம் - நுஙூ.

---

* பரதம் - நாடகம். ப-பாவம், ர - இராகம், த-தாளம் எனப் பொருள் கொள்ப. பாவமாவது - அபிநயம். அது, பணித்தலைப் பட்டோ னவிநயம், வெயிற்றலைப்பட்டோ னவிநயம், வெருண்டோ னவிநயம்முதலாக இருபத்தெட்டு. இராகங்களை இசைநூணுக்கம், முறுவல், சயந்த முதலிய நூல்கள் விரிக்கும். தாளவியல்களை யெல்லாம் தாளவியல். தாள சமுத்திரம் முதலாய நூல்களுட் காண்க. † சுரதம் இவையெனக் காமதந்திரத்தும். கந்தபுராணம் இந்திரபுரிப்படலத்துங் காண்க.

சிவமயம்.

பத்தாவது,

அக்கமாதேவி துறவுகதி.

தன்னைக்காணவேள்கணேபாயத்தடுமாறு
மன்னைக்காலுஞ்சோறெனவிட்டருண்மாதேவி
மின்னைப்போலுமல்லமதேவன்வீளாயாடுங்
கொன்னைக்கானிழறேடியடைந்தமைகூறுற்றும். 1

கொங்கைப்பொறையைக்கொண்டுமருங்குற்கொடிவாட
வங்கைக்குடநெய்பெய்தழலென்னவழகெய்தி
நங்கைக்கிணைகண்டிலமுலகெங்கணுநாமென்ன
மங்கைப்பருவநண்ணினண்முற்றுணர்மாதேவி. 2

வாதித்தொன்ரூடொன்றெழல்போன்முலைவந்துற்றும்
* பேதைப்பெண்போற்காமமுளத்திற்பிறவாமற்
பாதிப்பெண்மேனியனெனுமின்பப்பதிதன்னைச்
சாதித்தெய்துஞ்சாதனமோதுதலைப்பட்டாள். 3

தன்னையறிந்திடையீடறமுக்கட்டலைவன்பாற்
பின்னமறும்படிமேவுபெரும்பருவப்பெண்ணைக்
கன்னனெடுஞ்சிலைமன்மதன் † வேரிக்கணைபாயு
மன்னுமிளம்பருவத்தினளென்பர்வறைப்புற்றூர். 4

வண்டுபடாதலர்சண்பகமேயென்மாரூகிப்
பண்டாரனுடமர்செய்மதன்வண்டுபடாமேனி
கண்டிடுமொண்சுடரேயெனுமாறுகவின்பொங்க
வொண்டவனின்மலன்மாதமர்நாள்களினூர்நாளில். 5

வீரங்குறைவின் ‡ மும்மதவேழமிசைகொண்டு
தாருந்தோளும்பொங்கமதிக்குடைதன்மேலா
மாரன்களிமேல்வந்தனனென்னமணிப்பொற்றே
ரூருந்தெருவிற்கவுசிகமன்னனுலாவந்தான். 5

---

* பேதை - ஏழுவயதுப்பெண். ‡ வேரி - தேன். பண்டு-முன்.
$ மும்மதமாவன—கன்னமதம், கபோலமதம், கோசமதம்.

* இயங்கடரங்கநெடுங்கடலென்னவெழுந்தார்ப்ப
வுயங்குமருங்குன்மடந்தையர்ப்பாடியுட்ன்போத
வயங்கனிவர்ந்திளமைந்தர்மருங்கினடுத்தேகப்
புயங்களலங்கலிலங்கவிசும்பிறைபோல்வந்தான். 7

மாணுநெடுங்கரிமீ தாபுரந்தனில்வந்தானைக்
காணுமடந்தையரோ தமுணர்ந்திலர்காமத்தா
லூணுமிழந்தனர்தூசுமிழிந்தனர்நன்றுகும்
பூணுமிழந்தனராவியிழந்திலர்போனார்கள். 8

நல்லமதந்தாலெண்கவுளின்பானன்றுண்ணச்
செல்லுசரும்பேவெங்கரிநின்றுழ்செவியூடு
மெல்லநடந்தேபோவெனமெல்லவிளம்பென்று
சொல்லிமறங்கூர்வேலனகண்ணுர்துயர்கின்றார். 9

கோதையர்மாலாலிவ்வகைநோவக்கொடிமாட
வீதியினூடுவருந்திறன்மன்னன்வினையில்லா
மாதவனுகுநின்மலனுக்கோர்மகளாகுங்
காதொடு † காதுங்கண்மடமாதைக்கண்டானே. 10

கண்டன்னெடுவிலையோவெனுமுன்னங்கழைவாங்கிக்
கொண்டனன்வாளிசொரிந்தனனெடிக்கொடுமார
னுண்டிலையோவெனவாவிதளர்ந்தேயும்பன்மேல்
மண்டலமாளுமன்னனிருந்தான்வசமற்றே. 11

கொங்கைப்பாரத்தான்மலர்வாசங்கூடாரம
லிங்கிப்பாரிற்போதுமலர்க்கணிழின்மாலோ
மங்கைக்கோலங்கொண்டுநிலத்தில்வருமின்னே
வங்கைக்காந்தட்பொற்றொடியாரோவறியேனே. 12

வஞ்சிநடந்தேயென்னெதிர்வந்தேதமயல்செய்தா
ணெஞ்சுதளர்ந்தேன்மாலில்விழுந்தேனிலகாணே
னஞ்சிலையென்றேயின்றணையாளெலனல்காணும்
பஞ்சுபடும்பாடங்கசனம்பாற்படுவேனே. 13

என்னநினைந்தேமன்னவன்வெந்தீயிழுதாகி
மூன்னர்மருங்கேகின்றவொருத்தன்முகநோக்கிப்
பொன்னெனவந்தவ்வாய்தலினின்றுபுறப்பட்ட
கன்னியணங்கார் நீயறிகென்றுன் ‡ காமுற்றே. 14

---

* இயங்கள் தரங்கம் எனப் பிரிக்க. இயங்கள்-வாத்தியங்கள்.
† காதம் = மீறுதும். ‡ காமமென்பது = காமன்றூது.

ஓடியநிந்தேயன்னவன்வந்தங்குரைசெய்ய
வாடுமருங்குன்மங்கையையின்னன்மகளென்று
நீடியவெந்துயர்மன்னனறிந்தெந்நெறியாலுங்
கூடுவணிந்தவணங்கினேயென்றுகுறித்தேகி. 15

கோயிலின்மேவியிருந்துயர்ஞானக்குறிகூறுந்
தூயவராகியவாரியர்தாமுஞ்சடர்செம்பொற்
சேயிழையாரும்வலிந்துறிலின்புசெயாரென்று
வாயிலினுலணைவேனெனமன்னன்மனத்தெண்ணி. 16

வேறு.

தூதுவல்லநன்முதுக்குறைமாதரைத்துணிந்து
நீதிவல்லவனிருமலன்மகடனைநீவிர்
தீதிலெம்மனைக்கிழத்தியாம்படியுரைசெய்து
போதுமின்களென்றேவினன்வியனிலம்புரப்பான். 17

ஐயவன்னதைசெய்குவமெனப்புகன்றகத்திற்
பையவந்துநன்னிருமலன்றிருமுகம்பார்த்து
வையமன்னவன்கருத்தினைவகுத்தனர்மறுத்துத்
தூய்யமங்கையீரெமக்கடாதிதுவெனச்சொன்னுன். 18

வேந்தன்மாமனைநும்மகளாயினவ்வேந்தன்
சாந்தவாழ்வெலாநுமவெனவறிகிலீர்தானே
போந்தவோர்திருமகள்வரவினைப்புறம்போக்கு
மாந்தர்யாருளரென்றுமங்கையர்செலவகுப்பான். 19

இம்மைசேர்பயன்கருதியேதகாதவரிடத்திற்
கொம்மைவார்முலை * மகட்கொடைநேர்ந்தவக்கொடியா
ரம்மையாழ்நிரயத்திடைவீழ்த்தனரழுந்தித்
தம்மைநோக்குநரொருவருமின்றியேதளர்வார். 20

தமக்கடாததுசெய்துயிர்வாழ்வதுதன்னிற்
சுமைக்கடாதமெய்விடுத்தலேநன்றெனச்சொல்ல
ரெமக்கடாததுபுகன்றனிர்மங்கையீரிச்சொ
னுமக்கடாததென்றியம்பலுமங்கையர்நுவல்வார். 21

உரையில்வாளொடு ‡ மாவழங்குறுவனத்தேடி
மறவனேர்பொருடருகெனவிரத்தலேமானு

* மகட்கொடை - மகளைக்கொடுத்தல். ‡ மா - மிருகம், வழங்குறும் - சஞ்சரிக்கும்.

மிறைவன்வாழ்குடிதன்னிலொன்றுருபொருளிரத்த
லறவனுகியநீயிதையறிந்திலையந்தோ. 22

என்றுமாதரார்கூறலுநிருமலனெங்கண்
மன்றல்வார்குழல்பேதையோவல்லணும்மனத்தைச்
சென்றுகூறுமினவண்மனமிசைந்துரைசெய்யி
னன்றுபோமினென்றியம்பினனவர்மனநயந்து. 23

மங்கைபாலடைந்தறைகுவர்மதன்வலிமாயக்
கொங்கைமாமுகிழ்ப்பூங்கொடிநீயருள்கூர்ந்தே
யெங்கள்கோமகளுருயிர்நிறுத்தினையென்னி
லங்கண்மாநிலத்துயிர்க்கெலாமன்னையாகுவையால். 24

என்னவோதலுநிருமலனீன்றருளென்றாய்
மன்னனுன்மனதுறக்குமோர் * சூழ்ச்சியைமதித்துப்
பொன்னனீரசெனக்கொருசூளினைப்பொருந்திப்
பன்னுமாயினீர்பணித்ததுநன்றெனப்பகர்ந்தாள். 25

தூதுசென்றவாபொற்கொடிசொல்லியசொல்லாற்
காதல்கொண்டனளென்றுளந்தெரிந்துதாங்கருதி
மாதுநின்பெருங்கருணைசெய்வதற்கெங்கண்மன்னன்
யாதறைந்தனையதுசெயத்தக்கவனென்று. 26

உள்ளமார்வமோடேகியம்மடந்தையருரைப்ப
வள்ளலாகியமன்னவன்மணநனிமகிழ்ந்து
தெள்ளுமாரமுதனையவளிருந்துழிச்சென்று
னெள்ளுகாமநோய்கொண்டவனென்செயவிசையான். 27

வல்லிகொங்கையைப்பொன்மலையென்னவேமதியா
† னில்லுறுங்குடமாகவேயெண்ணினனுதலே
‡ வில்லெனும்படிநினைத்தனன்வெண்பிறையென்னுன்
சொல்லுவன்றனக்கப்படுமடந்தையாய்த்துணிந்து. 28

அருள்செய்தன்னைநீ $ யளித்திடுமதற்குநான்செய்வ
துரைசெய்நானதுசெய்வனென்றரசர்கோனுரைப்ப
வுரைசெய்தாளிலுயென்னைநீவலிந்துபுல்லாமைக்
கொருசொலுண்மைசொல்லென்றனளொருபுடையொதுங்கி.

---

* சூழ்ச்சி - ஆலோசனை, உபாயம். † இல் - வீடு. ‡ வில்வலை யுமாயின் உயிர்க்கேடு பயக்குமென்பது கண்கூடாகலின் நுதலே வில்லாகநினைத்தானென்றார். $ அளித்திடு - உயிர்போகாமற் காப்பாய்.

நின்கருத்திசைவாலன்றிநின்னையான்வலியே
னென்பதற்கொருசூளைசெய்குவன்முகிலெழுந்த
மின்கொடிச்சிறுமருங்குலாய்கேளெனவெள்வேற்
புன்புகர்க்கருங்கடாக்களிற்றரசர்கோன்புகல்வான். 30

வே று.

வந்தநல்விருந்திருப்பமனையினுற்றருந்துவானும்
பந்தியிலுணவுவேறுபண்ணுபாதகனுந்தாயுந்
தந்தையு * முணவுண்ணுதசழக்கனுமூச்சிப்போதி
லெந்தவர்தமைநோக்காமனுகர்ந்திடுகொடியன்றானும். 31

நிந்தைசெயுணவினுனிருமலன்பூசையின்றி
வந்துணவருந்துவானுமறத்தினுகர்விப்பானுந்
தந்தநல்வினையாற்செல்வஞ்சார்ந்தவர்தம்மைக்கண்டு
சிந்தனைபொறுதழுங்கித்தீர்வினுண்மகிழ்வான்றானும். 32

கன்றுணவிடாமலான்பால்கறந்துகொள்பவனுஞ்செய்த
நன்றிகொல்பவனுங்கோடி † நடுநிலைதவறுவானுங்
கொன்றுயிர்பதைப்பநோக்குங்கொடியனும்போர்க்களத்திற்
றன்றலைவனைவிடுத்துச்சாய்ந்துபோமடமையானும். 33

அடைக்கலமெனவந்தானையளித்திடாதகற்றுவானுங்
கொடுக்குதுமெனவுரைத்துக்கொடானுமொண்கொடைவிலக்கி
விடுக்குறுமவனும்பாவவினையிடத்ததியாகி
நடக்குறுமவனுந்தோற்றுநட்டபின்வஞ்சிப்பானும். 34

‡ குரவர்தம்மூரைகடக்குங்கொடியனுந்துறந்தளார்தம்
வரவெதிர்கண்டெழாதமறவனுமறந்தான்போன்று
காவினிலருநூல்கற்குங்கயவனும்புதியாகி
யிரவினில்வந்தநல்லோர்க்கிடங்கொடாதகற்றுவானும். 35

மூன்புகழ்ந்துரைத்துப்பின்னர்மூறுவல்செய்திகழ்வான்றானுந்
தன்பெருங்கிளைநல்கூர்ந்துதளர்வுறவாழ்கின்றானு
மன்புகொண்டொருவன்வைத்தவரும்பொருள்கவர்கின்றானுந்
துன்புறுந்தொழில்செய்வித்துச்சொல்பொருளிலையென்பானும். 36

---

* உணஉண்ணுத-கூட இருந்துபுசிக்கத் தானுமுண்ணுத. சழக்கன் - பொய்யன். † நடுநிலை - நீதி. கோடி - வளைந்து. ‡ "குரவர்தம்மூரைமறுப்பினும் பிறர்புரிந்த நன்றியதுகொல்லினு-மிரவியுள்ளளவுமதியமுள்ளளவுமிவர்களே நரகிலெய்துவார்" என்றதுமாபாரதம்.

கற்பழிமனைவியோடுகலக்கிருப்பவனுமற்றோர்
பொற்புடைமனைவிதன்னைப்புணர்வதற்கெண்ணுவானுஞ்
* செற்பொருளுணர்த்திஞனைத்தொழவுளநாணுவானும்
† விற்பனவலாதவிற்றுமெய்வளர்த்தழிகுவானும். 37

‡ நலமலிவயலிலாற்றினந்தனத்தாலயத்திற்
சலமலமொழிப்போன்ருனுந்தனிவழிவிலக்குவானும்
வீலைமொழிபொய்த்துவிற்கும்வெய்யவாணிகனுந்தாழ்ந்த
குலமிலிதன்குற்றேவல்கூலிகொண்டியற்றுவானும். 38

உறவிசெய்தறிந்தசொல்லையுவர்த்தழிக்கூறுவானும்
பிறர்பிழைதனையேநாடிப்பிறரொடுபேசுவானு
முறைவழுவுறுகொடுஞ்சொன்முனிவிடைமொழிகுவானு
மறிவழிமனைவிசொல்லின்வழிநிற்குமறிவிலானும். 39

கலந்தவர்தமைப்பிரித்துக்கலகங்கண்டிடவல்லானும்
புலந்தருநூலினில்லாப்பொருளினைக்கூறுவானு
நலந்தனையழுக்காறெய்திநகைத்திகழ்கிற்போன்ருனு
மெலிந்தவரிடத்துமிக்கவெகுளியைப்பெருக்குவானும். 40

புண்ணியம்பிறர்பொருட்குப்புரிபவன்ருனுமிந்த
மண்ணிடையின்பத்திற்காமமுமைசெய்தொழில்விடுக்குந்
தண்ணியவறிவிலானுந்தவத்தரையிகழ்கிற்பானும்
பண்ணியவினையிலென்றும்பாவமேபயில்கின்ருனும். 41

ஆவலுலுண்மைநீயாதறைந்தனையதுசெய்தன்றி
மேவுவேளையினென்றுவேள்விரும்பழகன்கூறக்
காவிநோவிழிமாதேவிகருத்திசைந்தற்றேயாயிற்
போவம்வாவென்றுசொன்னுள்புரவலனுவகைபூத்தான். 42

கோயிலின்முன்னர்ச்சென்ருன்கொற்றவன்சிவிகையேற்றி
யாயிழைமடந்தைநல்லாரருகுசூழ்வுற்றுச்செல்லப்
போயினளரசர்கோமான்புக்குழிப்புக்காளொள்வேற்
சேயரிநெடுங்கட்செவ்வாய்த்திலகவாணுதன்மாதேவி. 43

மடந்தையைத்தனிக்கண்டங்கிமருவியவரக்கேபோல
வுடைந்துநெக்குருகியாற்றவுள்ளமோடிளம்பூங்கொம்பே

---

* சொற்பொருளுணர்த்திஞன் - நல்லாசிரியன். † விற்பனவலாத-ஊன், கள், குலம் முதலியன. ‡ ஆறு - நதி, வழியுமாம். நந்தனம்-நந்தவனம்.

கடந்திடற்கரியகாமக்கடல்கடந்தேறக்கொங்கைக்
குடந்தரத்திருவுளத்திற்கோடியென் றரசிறைஞ்ச. 44

காவலன்காமமிக்ககழிபடர்கிளவிகண்டு
பாவைபுன்முறுவல்செய்துபண்பெனுந்தொடரால்யாப்புண்
டோவல்செய்யாதுநிற்குமொருகளிறேயாயான்சொ
லேவல்செய்திட்டபின்னரென்ஞடுபேசுகென்றுள். 45

ஏதுநான்செய்வதன்னதியற்றுவனறைதியென்ன
வோதிஞனரசனேதவொண்டொடியயன்மாறேடுஞ்
சோதிமாசிவலிங்கத்தைத்தாயையாய்க்கரபீடத்திற்
போதிலருச்சித்தென்னேப்பொருந்துதிபின்னரென்றுள். 46

எல்லையில்காமம்பொங்கவிளமுலைஞமுங்கத்தோளாற்
புல்லுவனென்றெழுந்தபுரவலன்றனேத்தடுத்துச்
சொல்லியதன்னமன்ஞள்சுரத்தணீர்முகந்துவாயிற்
செல்லுமொண்கரத்தையோடிச்சென்றுபற்றுதலேயொக்கும். 47

* முகையிடைமுருகுண்டாயின்முளையிடைவிளவுண்டாயின்
மகவிடைமதனவின்பம்வருவதுண்டாயிற்சைவப்
பகையொடுமருவிகின்றபார்த்திபன்றனதுளத்தி
னுகைவிடையமலற்போற்றுமொழுக்கமும்வந்துநண்ணும். 48

செப்புறுஞ்சுணினேந்துதீண்டிலனரசனின்று
முப்புராஞ்சிறுமுங்கண்முதல்வன்பூசனேதான்யாங்க
ளெப்பொழுதுஞ்செய்தக்கதன்றெனவிணையிலாகின்
றுப்புறுதோளும்யாங்கடொடுவதன்றெனப்புகன்றான். 49

மட்டவிழ்குடன்மடந்தைவாயுரைகையும்வாயுங்
கட்டியதெனவடங்கிக்காம † மிந்தனமீறீப்போற்
கெட்டிடவறிதிருந்தான்கிளர்மணித்தூண்செய்தோளா
னெட்டிலையில்வேற்கண்ணுணீத்தனள்போகவெண்ணி. 50

துறவெனுமரசுநெஞ்சத்தொன்னகர்கொளவவாவா
மிறைவனதாணையெல்லாமிரிதல்போற்பூண்கன்யாவு
‡ மறுவையுமகற்றியோதியவிழ்த்தவார்மைக்குழம்பின்
மறைவறுமணிப்பொற்பாவைபோலுடன்மறையலிட்டாள். 51

---

* முகை - அரும்பு. முருகு - வாசனை. † இந்தனம்இல்தீப்போல் எனப்பிரித்துக்கொள்க. இந்தனம் - விறகு. ‡ அறுவை-ஆடை.

மருளடைந்தனள்கொலென்றுமருண்டுமன்னவனிருப்பத்
தெருளடைந்தங்கைகொண்டசிவலிங்கத்தொடுநினைந்த
பொருளடைந்தெனமகிழ்ச்சிபொங்கமன்னவனீங்கி
யருளடைந்தொழுகுகண்ணுளணிமறுகுடுசென்றுள். 52

அன்னையும்பிதாவுங்கேளாவருமகட்கடுத்ததென்னென்
றுன்னிவந்தழுங்கநீவிரும்மகளென்றுமாழ்கி
யின்னல்கொண்டிரங்கன்மின்போமென்னேநானறியத்தேடித்
தன்னிருங்கருணைசெய்யுஞ்சற்குரவனைச்சார்கிற்பேன். 53

என்றவளவரைநோக்காதேதிலர்போலகன்று
சென்றணிருமலப்பேர்ச்செல்வனுஞ்சுமதிதானு
நன்றிவணினைந்ததென்றுநம்முடைமரபிற்கெல்லா
நின்றிடும்புகழென்றெண்ணிநிறுவினர்தங்கணமம். 54

கண்டவரெல்லாநெஞ்சங்கரைந்துகக்கண்ணீர்மல்கத்
திண்டிறலரசன்பின்னர்ச்சிவிகையூர்ந்தலர்பூங்கோயி
லொண்டிருமகள்போற்சென்றவொண்டொடியிப்பேய்க்கோலங்
கொண்டிவண்போகாநின்றகொள்கையேதறியேமென்பார். 55

மங்கையை * யிவனங்கண்டோம்வயிறெரிதவழநின்றே
மிங்கிவடன்னையீன்ரூரென்படுவரோவென்பார்
மங்கலவடிவங்கண்டுமகிழ்ந்தகண்ணிதுவுங்கண்டு
பொங்குறுதுயரங்கூரப்புரிந்ததெப்பாவமென்பார். 56

இன்னணநகாமெல்லாமிரங்கமாதேவியம்மை
கன்னலுமமுதுந்தேனுங்கைப்பப்பேரின்பநல்குந்
தன்னிகர்ருருகேசன்றன்னையேதேடிச்சென்றுண்
மென்னிழல்விரும்பிமிக்கவெயில்சுடச்செல்வார்போல. 57

அடவிக † டொறுமடைந்துமடுக்கல்கடொறுமிவர்ந்துங்
கடிநகர்தொறும்புகுந்துங்காமனெவென்றவல்லி
மடிவறுமனத்திலன்புவளர்தரக்கருணையாலெங்
குடிமுழுதடிமைகொள்ளுங்குரவனைத்தேடுகின்றுள். 58

பத்தாவது,

அக்கமாதேவிதுறவுகதி

முற்றிற்று.

கதி கo-க்கு திருவிருத்தம்-டுகூக.

---

* இவ்வண்ணமென்றது - இவணமென்றுயது. மரூஉமொழி.

† தொறும் என்னும் இடைச்சொற்கள்இடப்பன்மைப்பொருட்கண் வந்தன.

சிவமயம்.

பதினொராவது

கொக்கிதேவர்கதி.

அருள்செயுமல்லம னநிமிடப்பெயர்
சூரனெனமெய்யொடு கலந்துகொண்டுதான்
பாவுறுமடியர்தம் பவந்துறந்துபோய்த்
திரிதருநிலையினைத் தெரிந்துசெப்புவாம். 1

சீர்நிலையல்லம தேவன்சூல்கொளுங்
கார்நினைமயிலெனக் கருதித்தன்னையே
பார்நிலமிசையமர் பத்தர்தம்மையா
ளோர்நினைவொடுநடந் துலாவுநாள்களுள். 2

* ஒன்றொருநாளொரு திசையிலேங்கருட்
குன்றனையாளெரு கோலங்கொண்டுதான்
சென்றனவனெதிர் சிறந்துதோன்றிற்று
மன்றன்மென்மலரிள வனமொன்றுயிடை. 3

சிறு † பொழுதைந்தினுந் திரிவிலாதபே
‡ ரறுபொழுதினுமித முழிழ்ந்துதேன்சொரி
நறுமலர்நிறையுமந் நந்தனத்தினைப்
பெறின்மகபதிவளம் பெறவுவந்திடார். 4

படிமிசைதவம்பல பயின்றுநொந்தவர்
$ வடதிசைக்கயிலையின் மருவவேண்டலிக்
கடிமலர்ப்பொழின்மணங் கலந்ததென்றல்வந்
தடன்மிசைதவழ்தர லொன்றுமுன்னியே. 5

கண்ணிறைமலர்பல கண்டுகண்டுபோ
யுண்ணுறுநறுமது கொளவுழன்றிடு

---

* ஒன்றொருநாள் - ஒன்றுகின்ற ஒருநாளெனலுமாம். † பொழுதைந்தாவன:—மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல் என்பன. ‡ அறுபொழுதாவன - மேற்படி ஐந்தும், ஏற்படுமாம்.

$ கயிலை யிருவகைத்தாதலின் கயிலை யுரைப்பான் வடதிசைக்கயிலை யென்றார்.

மெண்ணறுமளியின மிரையுந்தன்மையாற்
றண்ணுறுநந்தனம் வண்டின்சந்தையே. 6

நறுமலர்நிறையுமந் நந்தனத்தினைக்
குறைவறவளிப்பவன் கொக்கிதேவனென்
றறைதருபெயரினு னினையுமிடைத்
திறமுறுசெயலினைச் செய்துநின்றனன். 7

நின்றவன்றனையரு ணினைந்தநெஞ்சொடு
* சென்றனனல்லம தேவன்கண்டிலன்
புன்றொழில்விடவரும் பொருளுணர்த்துவ
லென்றருகடந்தைய சரணமென்றனன். 8

தானெதிர்நிமலனைச் சரணைனத்தொழாத்
தேனலர்வனத்தனின் செயலியாதுநின்
மேனியின்பெயரெது விளம்புகென்றலு
ஞானநல்விளக்கினு னவிறன்மேயினன். 9

பத்தர்தம்மனைதொறும் பத்தப்பிச்சைகொண்
டெத்திறவினையுமின் றிருப்பனல்லம
னுத்தமவென்பெயர் பெயருனக்கெனென்
றத்தனும்வினவவத் தன்பெயரறைந்தவன். 10

அருங் † குருலிங்கசங் கமத்திற்காகமெய்
வருந்துறுதொழிலற வறிதிருப்பவ
னருந்துறுபிணமென வறையு ‡ மாற்றநீ
தெரிந்திலையோவெனச் செப்பன்மேயினன். 11

வேறு.

எய்தற்கரியயாக்கைதனக்கெய்திற்றென்றூலதுகொண்டு
செய்தற்கரியவறங்கள்பலசெய்துதயர்கூர்பிறவியினின்
றய்தற்கொருமைபெறவொண்ணுதழல்வோனுடம்புபொற்கலத்திற்
பெய்தற்குரியபால் $ கமரிற்பெய்ததொக்குமென்பாரால். 12

மின்போலழியுமூடல்கொடுநல்வினைசெய்தழியாவுடம்பெய்தி
யின்போடமர்தலரியிருப்பயாக்கைவருந்துமென்றெண்ணி

---

* சென்றநம் மல்லமதேவனென்றும் பாடபேதமுண்டு.

† குரு-இலிங்கம்-சங்கமமென மூப்பாற்று. இவற்றுள்:—குரு-ஞானசிரியன். இலிங்கம்-சிவம். சங்கமம்-சிவனடியார் திருக்கூட்டம். ‡ மாற்றமெனல்-சருதிப்பிரமாணத்தை. $ கமலர் - நிலவெடிப்பு.

யன்போடறஞ்செய்திலோயாமலருந்திவாளாவிருக்குமவன் [ன்.
றன்போன்மருளரிலேயென்றுன் றண்பூம்பொழில்வைத்தளிக்கின்றூ

உரைத்தமொழியையல்லமப்பேருடையான்கேட்டுக்கைகூலத்தச்
சிரித்துவினைநல்லனசெய்து சிதையாவின்பம்பெறுவானேல்
* வருத்தலுறுமும்மலங்களினூல்மலமாகியவாணவத்தாலும்
பொருத்தமுறுபேரின்பநாம்புணரலாமென்றியம்பியே. 14

தான்செய்வினையாலோருடம்பிற்சாருமின்பமென்றனையவ்
வூன்செயுடலமொழியவுடனெழியுமம்மெய்யழியரமல்
வான்செய்பதத்திலிருக்குமெனின்மாயைதந்ததன்றுகுங் [ய்
கான்செய்மலர் †நந்தனஞ்செய்துகருவைத்துடைப்பவெண்ணுவோ

இன்பநனிசெய்நல்வினையி னிறப்பினிறப்பவுடம்பினிடைத்
துன்பமதுசெய்தீயவினை தோன்றுமத்தீவினைமாய்வின்
முன்புசெயுநல்வினைவருமிம்முறையாலிரண்டுமாறிவரு
மென்பவுலகிலொண்பகலுமிரவுமாறிவருதல்போல். 16

புறத்துக்கருமம்பலசெய்துபொருப்பையகழ்ந்திட்டெலிபிடித்தாங்
கிறப்பச்சிறியவிண்ணின்பமெய்துமவனேநோவாமன்
மறத்துச்செயல்களனைத்தினையும்வாளாவிருந்துபேரின்பம்
பெறத்தக்கவனேமருளன்யார்பேசுகென்றுனெம்பெருமான். 17

பொறியிற்புறத்தமனஞ்செல்லிற்புலனேதோன்றியிடுமகத்திற்
செறியக்கரணம்பரானந்தசிவமேதோன்றுஞ்சிவந்தோன்ற
வறிவிற்பரந்தவிடயமயமாகுமுலகந்தோன்றுமற்
பிறவித்துயரக்கடல்கடந்துபேரின்பஞ்சார்குவரென்று. 18

கண்ணற்காணக்காட்டியிவன்கருத்தைத்திருத்துவேமென்ன
வெண்ணக்கருணைக்கடலனையானிவணீயகழ்தியென்றுரைப்ப
நண்ணப்பெருமநன்றென்றுகவின்றநிலத்தையகழ்கின்றூன்
பண்ணற்சிறந்தபொறிவண்டுபாடுமலர்ப்பூம்பொழிலுடையான். 19

தொடலுஞ்செம்பொற்சிகரமொன்று தோன்றச்செய்யுட்பொருள்
கடிதினகழ்ந்துதுருந்ததனுட்கண்டார்நிலத்தையகழ்ந்திட்டு [போலக்
மிடியன்கண்டபொருள்போலவிடயம்புறத்துக்காணுமல்
வடிவஞ்சிறிதுமசையாமல்வசமற்றிருக்கும்யோகியையே. 20

---

*இதனுல், பாசம் என்பது மித்தையெனக் கூறும் மாயாவாதி மதம் பரிகரிக்கப்பட்டது. †நந்தவனம் வைத்தல் அத்துவிதமுத்தி சாதன சதுட்டயங்களுள் ஒன்றுகிய சரியையின்பாற்படுதலால் கருத்துடைக்குமென்றூர்.

கையிற்சிவலிங்கத்தின்மேற்கண்களைவைத்திட்டெலும்பலான்
மெய்யிற்றசையொன்றின்றியேமேவும்புனிதன்றனைநோக்கிச்
செய்யச்செயலிலாதசெயற்சிவயோகியைக்கண்டனையோவென்
றையத்தடைந்தவனறியவறிவித்தயரல்லமதேவன். 21

கடலின்விழுந்துதயர்பவர்க்குக்கலமொன்றருகுவந்ததெனக்
கெடலில்பரமகுருவெனக்குக்கிடைத்தாவாவற்புதமென்
றுடலம்விதிர்ப்பக்கண்கணீரொழுகவுருகித்தொழுதனலால்
விடலின்மரபிற்குருசீடவிதியைவிளக்கவுளங்கொண்டு. 22

காந்தங்கண்டவிரும்புபோற்கண்டபொழுதேயகமிடன்ற
னேந்துஞ்செங்கைச்சிவலிங்கமெங்கள்பெருமானங்கமலர்
போந்தங்கிருந்ததுபொழுதிற்புனிதன்சிவகலைதானுஞ்
சார்ந்தங்கிருந்தசிவலிங்கந்தன்னெடவன்பால்சார்ந்ததால். 23

வந்தபரசிவலிங்கமருவப்பெறுமல்லமன்றனையு
மந்தவிமலலிங்கமுடனடைந்தஞானக்குரவனையுங்
கந்தமலர்நல்வனமுடையான்கண்டுமகிழ்வுற்றிவர்பெருமை
சந்தமறைதேர்நான்முகனுஞ்சாற்றற்கரிதென்றறைகுவான். 24

நின்னுற்கண்டேன்சிவலிங்கநிட்டை * ஞானயோகிதனை
மூன்னுட்கருமமனத்துமினிமுடித்தேன்ஞானநிலைநின்றே
னுன்னுற்செய்யப்படுமுதவிக்குதவிவேறுமெடுந்தகா
யென்னுற்செய்வதொன்றுளதோவெழிலிக்குதவியார்செய்வார். 25

ஐயனினையுநின்கரத்தினடைந்தசிவலிங்கத்தினையும்
பொய்யில்குரவன்றனையுமொருபொருளென்றறிந்தேனின்றென்று
செய்யகமலத்திருவடியிற்சென்றுதொழுதலல்லமநாம்
மெய்யனெதிர்நின்றன்பிலுல்விளம்புவனங்காவலனன்றே. 26

என்னையறிவித்ததுபோலிவ்விட்டலிங்கமகம்புறமு
மன்னியிருக்குநெறியினைநின்மலர்த்தாள்பரவுமடியார்க்குப்

---

* அத்துவிதமுத்திக்குச் சாதனமாகிய சரியாதி மெய்ஞ்ஞானம் நான்கும் சரியையிற்சரியை, சரியையிற்கிரியை, சரியையில்யோகம், சரியையின்ஞானம், கிரியையிற்சரியை, கிரியையிற்கிரியை, கிரியையில்யோகம், கிரியையின்ஞானம், யோகத்திற்சரியை, யோகத்திற்கிரியை, யோகத்தில்யோகம், யோகத்தின்ஞானம், ஞானத்திற்சரியை, ஞானத்திற்கிரியை, ஞானத்தில்யோகம், ஞானத்தில் ஞானம் என நந்நான்குவகைப்படலால் "ஞானயோகிதனை" யென்றார்.

பன்னியுணர்த்திச்சாமாதிப்பாரிற்சரிப்பாயெனத்தொழுதான்
றன்னினிலத்தினாரெல்லாந்தகும்டோரின்பம்பெறினேன்தான். 27

கொக்கிதேவனிரந்தமொழிகொண்டுகிளரல்லமதேவன்
றக்கபெரியோர்தமக்கியல்புதாம்பெற்றுள்ளபேரெல்லா
மிக்கவுலகம்பெறுகவெனவேண்டிக்கோடலெனப்புகழ்ந்து
செக்கர்மலைப்பூக்கைகளாற்றீண்டித்தழுவியருள்செய்தான். 28

அங்கைச்சிவலிங்கத்தினிடையமைத்தநோக்குநெஞ்சகமுந்
தங்கச்சிவயோகத்தினேயேசார்ந்தங்கிருந்தாலேவியம்போன்
மங்கைக்கிடந்தந்தருளினேன்மலர்த்தாட்கிடபூவனமாக்கிப்
பொங்கபுரந்தவத்தான்மெய்ப்பொருளாசிரியன்கண்ணுற்றான். 29

அடியர்வேண்டிற்றேபுரியுமல்லமப்பேரெம்பெருமா
னெடியவிழிகளருள்சுரப்பகிமலலிங்கங்கரத்தேந்திப்
படியி * லரியதவஞ்செய்யும்பத்தருள்ளங்களிகூர
வடியவிளமாத்தழைப்பவரு † மந்தாநிலம்போற்சரிக்கின்றான். 30

பதினேராவது

கோக்கிதேவர்கதி

முற்றிற்று.

கதி-கக-க்கு திருவிருத்தம்-சுஉக.

---

* அரியதவமென்றதற்கு நிட்காமியமென பொருள் கோடன் சாலாது தவமென்றது ஈண்டுச் சரியை முதலிய நெறிகளே. அதனே. "ஐம்புலவேடரினயர்ந்தனே வளர்ந்தன - தம்முதல் குருவுமாய்த் தவத்தினிலுணர்த்தவிட் - டன்னியமின்மையினரன்கழல்செலுமே." என்னுஞ் சிவஞானபோதச் சூத்திரத்தாற் றெளிந்து கொள்க. † மந்தாநிலம் - தென்றற்காற்று. அது "திருந்துந்தளிர் காட்டித்தென்றல் வாத்தேமா - வருந்துஞ்சுழல்கால்வர" என்ற நூலாசிரியர் வாக்கானு முணர்க.

சிவமயம்.

பன்னிரண்டாவது,

முத்தாயியம்மைகதி.

கண்டிலேனசகண்ணனேயென் * றஞர்
கொண்டுவாடுங்கொடியிடையாயெர்
லிண்டுபோகவிரைந்துவந்தல்லமன்
பண்டுகூறும்பரிசுவிளம்புவாம். 1

† பொடியணிந்தெழில்பொங்குமல்லம
னடியர்தங்களகத்திற்றுயரினே
‡ யுடையிழந்தவொருவன்கமெனக்
கடிதடைந்துகளேந்தருள்செய்புநாள். 2

மறைத்திருந்தமலிசிவபத்தியைப்
புறத்தறிந்தபொழுதேயுடம்பினே
வெளித்தகன்றவெளியுருவாயினு
னறுத்தபந்தசகணனென்பவே. 3

அறைந்ததாயவனங்கவுபாகிபோய்
நிறைந்தநீர்மைநினைந்திலள்போயுயி
ரிறந்துபோயினனென்னத்தளர்ந்துடன்
பிறந்தமாதுபெரிதுளமாழ்கியே. 4

புலம்பிநைந்திருக்கின்றவப்போதினி
லிலிங்கமுங்கரமுந்திகழ்வெய்துற
கலங்கொளல்லமனண்ணினனண்ணலுங்!
கலங்கினின்றவக்காரிகைகண்டனள். 5

கண்டபோதசகண்ணனேக்காண்கிலாள்
கொண்டபீழைகுறையவழுதடிப்
புண்டரீகப்புதுமலர்வீழ்ந்துகண்
மண்டுநீருகவாய்விட்டரற்றினுள். 6

பாவியேன்முகம்பார்க்கவொண்ணுதென
வாவியாமசகண்ணனகன்றுசெய்

---

* அஞர் - துன்பம். † பொடி - திருநீறு. ‡ "உடுக்கையிழந்தவன்கைபோலவாங்கே - யிடுக்கண்களேவதா நட்பு" என்ற திருக்குறட்கருத்து.

நோவெலாமிவணுக்கவருளினன்
மேவினனெனமீண்டும்வணங்கினள். 7

வணங்குமாதின்மலர்முகநோக்கியே
யணங்களுய்நல்லசகணன் றன்மையை
யுணர்ந்திடாம * லுளதலுணர்வளார்க்
கிணங்குரூதுதென்றெந்தையியம்புவான். 8

அழிவிலானேயழிந்தனனென்றுநீ
விழியினன்மிகுவெள்ளம்பெருக்கினை
கழிவிலாதவாகாயங்கழிந்ததென்
றுழிவிலாமலுளமெலிவார்கள்போல். 9

சச்சிதானந்தசங்கரனுகவே
யச்ச † நீங்குபுதன்னையறிந்தவன்
றுச்சமாந்துயர்தோன்மலியாக்கையை
யிச்சியானதையானெனவெண்ணியே. 10

ஒண்டரைக்கணைமுவிலருளுருக்
கொண்டடுத்தகுருவருளாற்றனைக்
கண்டமெய்த்தவன்காயந்தனையண
மூண்டநெட்டிலையொப்பவிடுப்பனல். 11

படியில்வந்தபரமகுரவனற்
றடையறும்படிதன்னையறிந்தவ
னுடல்விடும்பொழுதான்றெருமண்மயக்
கடமுடைந்தவாகாயங்கர்ப்பனல். 12

பந்தபாசமுழுதும்பரிந்திட
நந்திமோர் ‡ சிவஞானிநரர்வினை
சிந்துமாறுசெறிந்தவுடம்புதான்
வெந்தசாம்பலின்விழியெதிர்தோன்றுமே. 13

யாவுமாகியிருக்குஞ் $ சிவத்தொடு
மேவுஞானவிழியுடையான்றனக்
கோவுமாறிலுறவுபகையெனும்
பாவமோவிலையென்றறிபாவையே. 14

யாக்கைதானென்றிருந்தழிகின்றவ
ரூக்கிலாவறிவாகியுடம்பொடு

---

* உளதல்-வருந்தல். † நீங்கு-நீங்கி. செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ‡ சிவஞானி-சிவனை யுள்ளவாறறிந்தவன்.
$ சிவத்தொடுமேவல் - சிவபெருமானுட னிரண்டறக்கலத்தல்

தாக்கிலாதவர்தம்மையுந்தாமென
நோக்குவாரவருண்மையைநோக்குரூர். 15

* கூத்தனுடகக்கோலநடிப்பினைப்
பார்த்துவாய்மையென்றெண்ணிலர்பாருளா
சேத்தஞானிதன்யாக்கைநடிப்பினை
† யோர்த்துமாதவருண்மையென்றுன்னுரூர். 16

அறிந்திடாமலசகணன்றன்மையை
யிறந்துளானென்றிரங்கினையன்னீ
மறந்திடாயிம்மதியென்றெணல்சொல
நிறைந்தஞானமுத்தாயினிகழ்த்துவாள். 17

‡ அரவின்காலரவன்றியறிபவர்
தரையினில்லையசகணன்றன்னீ
தெரியினன்றிச்சிறியனறிவிலோ
பெருமையான்செய்பிழைபொறுப்பாயென்று. 18

வேறு.

பங்கனிருந்தபதிக்கருள்செய்து
கங்கையடைந்தகணக்கெனவென்பா
லிங்குறவந்தனையெங்குடியுள்ளார்
தங்கடவந்தருதன்மையினென்று. 13

வந்தனைசெய்துவழுத்திமுனின்று
பந்தமகன்றபதம்பெறும்வண்ண
மெந்தையியம்பியெனக்கருள்செய்யென்
றந்தமடந்தையறைந்தனளன்றே. 20

தேசிகனல்லமதேவன்மகிழ்ந்து
பாசமகன்றபரம்பொருள்காணு
நேசமடைந்தனைநின்னைநிகர்ப்பார்
காசினியின்மிசைகண்டிலமென்று. 21

பிறப்பொருகோடிபிறந்துபிறந்து
புறக்கருமங்கள்புரிந்திடினும்பொய்
மறப்புறுமாணவவல்லிருளின்றிச்
சிறப்புறுமுத்திசெறிந்திடுவாரோ. 22

இது "ஒருவனே யிராவணுதி பாவகமூற்றுற்போலத் - தருவ னிவ்வுருவமெல்லாந் தன்மையுந்திரியாளுகும்" என்ற சிவஞானசித் தியார்த்திருவிருத்தக்கருத்தாகும். † ஓர்ந்து என்பது ஓர்த்து என ஒலித்தல் விகாரம்பெற்றது. ‡ "பாம்பின்கால் பாம்பறியும்" என் றும் பழமொழியும் மிருத்தல் காண்க.

மறிப்பொடுதிப்பு * மறிக்குதிமென்று
கருத்தைவெளிக்கருமத்தின்விடுத்து
விரிக்குதனெய்யைவிடுத்தெரிகின்ற
நெருப்பையவிப்பரிணாமப்பதையாக்கும். 23

† மட்டறவோடமனத்தைநிறுத்திக்
கட்டுதல்வீடவிடுத்திடல்கட்டென்
றுரட்டியபண்பினுரைத்தலமப்பேர்ச்
‡ சிட்டனவட்கருள்செய்தனனன்றே. 24

$ தத்துவமுற்றுமயக்குவதள்ளி
மெய்த்ததனேப்பெறவேறுகொடுத்தான்
பொய்த்துறுகுப்பை ¶ கிளேத்தொளிபொங்கு
முத்தையளித்தெனமுத்தைதனக்கு. 25

வீடுவிரும்பிவெறுத்திலன்மெய்யைத்
தாடருமொண்குரவன்றனேயெங்கு
நாடியுழன்றிலனுனையவென்னைத்
தேடியடைந்தருள்செய்தனேயென்று. 26

அல்லமனென்னு மருட்குரவன்ருள்
புல்லிவணங்குபொற்கொடியன்னுள்
செல்லலகன்று ○ சிதம்பரமெய்தி
யெல்லையிலின்பொடிருந்தனளம்மா. 27

பன்னிரண்டாவது,

முத்தாயியம்மைகதி

முற்றிற்று.

கதி-கூ-க்கு திருவிருத்தம் - சுசஅ.

---

* மறிக்குதும் - தடுப்பேம். கருத்து - மனம். † மட்டற-அளவின்றி. ‡ சிட்டன் - பெரியோன், சிரேட்டன் என்பதன் மரூஉ. $ தத்துவங்களாவன - ஆன்மதத்துவம், இருபத்து நான்கும், வித்தியாதத்துவங்கள் ஏழும், சிவ தத்துவம் ஐந்தும் ஆகிய மூப்பத்தாறு தத்துவங்கள். ¶ கிளேத்தல் - சீத்தல்; கிளறல். ○ சிதம்பரம் - சிதாகாசத்தலமாகிய இல்லே.

சிவமயம்.

பதின்மூன்றாவது,

சித்தராமையர்கதி.

வேறு.

* காமரு சித்த ராம னிடத்திற் போமணல்சொற்ற சீர்மை யுரைப்பாம். 1

† செல்லல் களைந்து நல்லறி வின்பஞ் சொல்லுவ னென்னு மல்லம னென்பான். 2

கரும யோகமுங் கிரியை யாவையும் மருவி ராமன்வாழ் புரியை மேவினன். 3

வரவி யாலயங் ‡ காவி ராமனு ரேவ ளாளர்செய் தோவி லாமையை. 4

பார்த்தரு ளண்ணன் மூத்தவி ராமன் வார்த்தை யறிந்த கூத்தின னென்றே. 5

பேரறி வின்னுன் சார விருந்த வூனினு மில்லென் றூர விகழ்ந்தே. 6

இல்ல மகன்றிவ் வல்ல லடைந்தா னல்ல பசும்பொன் வல்லி யுவந்தான். 7

என்று நினைந்து நன்றுற வாவி யொன்றகழ் வார்பாற் சென்றது சொல்வான். 8

வேறு.

$ ஒட்டரானுளத்தினி
லிட்டம்யாதுகொலித்தொழின்
முட்டிலாமன்முயன்றனன்
கொட்டிவீழுமிகுத்தல்போல். 9

விழற்கிறைப்பவிடித்தல்போற்
றொழிற்குளெய்த்தறுதொழினுமை

---

* இதுமுதல் எட்டுச் செய்யுள்கள் வஞ்சித்துறை என்னும் பாவினமாம். காமர் மரு என்பன காமரு என மரூஉ விற்று. † செல்லல் - துன்பு. ‡ காவிராமன் - தவனம். தோ - குற்றம். $ இதுமுதல் ஐந்து செய்யுள்கள் வஞ்சிவிருத்த மென்க.

யிழைக்கவிட்டதெனென்றிட
சொழிற்கலுற்றவனேதினன். 10

சாந்தனேதியதாழ்மொழி
காய்ந்தவேலிருகாதினும்
போந்தபோன்றபுகுந்தன
மாந்தராகுலமன்னினர். 11

அறமழித்தனேயன்றியு
நெறியறக்குருநிந்தனே
பெறவுரைத்தனேபித்தவென்
றுறவுறுத்தனரொட்டலர். 12

* ஒட்டனென்றனேயும்பருஞ்
சிட்டனென்றுகொள்சித்தனேத்
துட்டவென்றுசுளித்தனர்
வெட்டிருந்தடமேவினேர். 13

வேறு.

மெய்த்தடமகழ்பவர்வினேயேயன்றியே
சித்தர்தஞ்செயலொருசிறிதுமின்மையான்
மத்தர்நங்குரவனேமண்ணினும்மினு
முத்தமவொட்டனென்றுரைத்துமென்றனன். 14

நிகழ்ந்துலகிடைநிலைநிற்குநல்லற
முகந்துசெய்பவன்றனேயும்பனேயெனம்
புகழ்ந்தவர்புண்ணியர்பொருமையானிழித்
திகழ்ந்தவர்நரகமென்றிசைப்பர்நல்லவர். 15

மறவினேயுடையரைமாற்றித்தாயநல்
லறவினேயுடையரையறிந்திட்டன்னரோ
டுறவினேயடைந்திலேயொப்பக்கண்டறத்
துறவினேயுளேயெனவொட்டர்சொல்லினர். 16

ஒங் † கிருவினேகளுமொப்பக்கண்டவர்
தாங்களென்றனேயொருதமரிற்பேணுவ
ராங்கவையிரண்டையுமடைந்துபோயுழ
னீங்களென்றனேயுணர்நெறியிலீரென்றனன். 17

---

* ஒட்டன் - குளமுதலியன தோண்டுந் தொழிலோன், இது இரட்டுறமொழிதல். † நல்வினே தீவினேகளு மொத்தவிடத்து மல பரிபாகம் வருதலேக்கி யுரைத்தார்.

எனக்கறவினையுமிலென்றுகூறினு
யுனக்கொருகதியிலென்றுண்மைகூறியே
னினத்தனர்நிலனகழ்சிறியர்யாவருந்
தனக்கிணதானெனுந் * தம்பிரானையே. 18

முற்றியகல்வியின்மூடர்நீவிர்நுங்
கற்றறிமூடனுக்கறைமினன்ன வ
னுற்றனனெனிலவனுணர்வுஞ்சொல்லினு
லிற்றெனவுணர்வமென்றெந்தைகூறினான். 19

சேடனும்புகழ்வுறுஞ்சித்தாமனே
மூடனென்றுரைத்தவம்மொழி † கயந்தொடத்
தோடருங்கொட்டினேர்சீற்றத்துப்பெனு
நீடுவெந்தழல்சொரிசெய்நிகர்த்ததால். 20

இறுக்கின ‡ ரழுக்குடையெயிறுமென்றன
ருறுக்கினரதிர்த்தனருயிர்த்தமீசையை
முறுக்கினர்நகைத்தனர்முருட்டுக்கைகளாற்
பொறுக்கினர்சிலகளைப்பொருஞ்சினத்தராய். 21

நங்குரவனையிகழ்நயமிலான்றனை
யிங்கொரு $ சிலையினுலெறிந்துகொல்லுதல்
பொங்குருமறமொடுபுகழுமாகுமென்
றெங்குரவனையவறெதிர்த்தருஞ்சினர். 22

கட்டுமி ¶ னடிமினுங்கரத்திற்கொட்டினுல்
வெட்டுமினிக்கைசொல்வாயின்வெண்பலைத்
தட்டுமினெறிமின்வன்றலைகுமைந்திடக்
குட்டுமினெனவுளங்கொதித்துக்கூடினர். 23

என்மனவிருளறவெழுந்தவள்ளமன்
மின்மலிவுறுதிருமேனிமீதிடிச்
சொன்மலியொட்டலர்சூழ்ந்துகொண்டுவன்
கன்மழைசொரிந்தனர்கைசலிப்பவே. 24

சாக்கியனொறிதனிக்கலன்றிமெய்
நோக்கிலர்தாமொருநூறுகோடிகன்

---

* தம்பிரான் - தமக்குத்தாமே தலைவனுகவுள்ளவன், தம்-ஆன் மாக்கட்கு பிராணதலைவன். † கயம்-தடாகம். ‡ அழுக்கு உடை-அழுக்கு வஸ்திரம். $ கிலை - கல். ¶ படிமின் எனவும் பாடம்.

மீக்களர்சோதிதன்மீதுவீசினுந்
தாக்குறுமோவவைதாக்குறுவரோ. 25

கொடியவரெறிந்தகல்குவியக்குன்றென
முடிமிசைநின்றனன்முத்தனல்லமன்
புடவியினுடனிழல்புதைப்பவந்நிழல்
கடிதினின்மீமிசைகாணுந்தன்மைபோல். 26

ஒறுப்பவனிழிந்தவனெருவன்செய்தநோய்
பொறுப்பவணடுவுளன்பொறுக்குநெஞ்சமு
மறப்பவனுயர்ந்தவனென்றுவாய்மையாற்
சிறப்பவரிம்முறைசெப்புவாரரோ. 27

தீங்கினையெதிர்நின்றுசெய்தபோதினே
தாங்கிலன்முனிவினை மறந்துதாமரைத்
தேங்கமழ்மலரெனமுகஞ்சிறப்புறீஇ
யீங்கினின்றிடுமிவன்யாண்டுளான்கொலோ. 28

மலர்மிசைவேதனைமலர்க்கண்மாயனை
பலர்புகழ்மழலிடைப்பாகனைவெனி
லலனிவன்பிழைசெயுமவரிடத்தினு
நலனுளனென்றுகண்டவர்நவின்றனர். 29

கல்லெறிபடாமையைக்கண்டவொட்டலர்
சொல்லுறினிவனைருசூழ்ச்சிமந்திரம்
வல்லவனிவன்றனைவலிந்துபற்றியே
கொல்லுவமெனவெதிர்குறுகினரரோ. 30

குறுகலுமவன்பலகோலங்கொண்டன
னிறைபுனற்கடந்தொறுநிலவுதோன்றல்போன்
மறுகினர்நிலனகழ்மனிதர்பற்றுதற்
கறிகிலரினையனென்றனையன்றன்னையே. 31

மருண்டனர்சித்தராமப்பெருந்தகை
யிருந்தருளிடத்துமெய்யிளப்பவோடியே
திருந்தியவடிமிசைச்சென்றுவீழ்ந்தெழுந்
* தாந்தைபோடனையவரறைதன்மேயினர். 32

யாந்தொழில்செயுமிடத்தேதலின்றியே
போந்தனனெருமகன்புதியனின்புக

* அரந்தை - துன்பம்.

ஞோர்ந்திலனுரைக்கொணுவிழிப்புரைத்தன்ன்
மாய்ந்திலமூடனசைமருவியாங்களே. 33

என்றவரறைதலுமிராமன்சிந்தையிற்
புன்றெழிலகன்றுமெய்ப்போதம்பெற்றிட
வன்றருளல்லமனடிகள்காட்டுறு
மொன்றெருசீற்றம்வந்துதித்தெழுந்ததே. 34

யாவனென்றென்னேபின்றிகழ்ந்துளானவ
னுவரிந்திடுவனுனெனவெழுந்தனன்
* மேவுறுந்தவமுதவெருளிதானினி
யோவுறுந்தாத்தன்றெருவரானுமே. 35

வேறு.

என்னேவைதவன்யாரவனெனமுனிந்தெரிபோன்
முன்னரெய்தினன்சித்தராமப்பெயர்முதல்வ
னன்னேயன்னநம்மல்லமனவன்கினமறிந்து
சென்னியொண்கரமசைத்துவெண்ணகைசெய்துசெப்பும். 36

† அகழ்கின்றூர்தமைத்தாங்குறுமகனிலமென்ன
விகழ்கின்றூர்தமைப்பொறுக்குமித்தன்மையெய்தலினு
னிகழ்கின்றருண்மாதவமுடையோகிநீயென்று
புகழ்கின்றனைவிகழ்ந்தனன்பின்னரும்புகல்வான். 37

சிறப்புப்பெற்றுநல்யோகிதன்மனத்தெழுசினந்த
னறத்தைக்கொன்றிடுமுன்புபஞ்சியிற்புருமழல்போ
லொறுக்கப்பட்டவன்பவம்பினேயொழித்திடுமதனுற்
பொறுத்தற்கொப்பிலேயென்றுநன்றறிந்தனேபோலும். 38

காலனின்மூனம்பொறையுளனுகுவன்கடல்சே
ராலநல்லமுதாகுமென்றவன்றவம்புகழ்வான்
பேரலவைதனன்கொடியவனெனும்பொருளோன்றச்
சீலநலகுமோர்தொழில்செயுமல்லமதேவன். 39

பொறையுறும்படியல்லமன்சூழ்ச்சியிற்புகலக்
குறையுறுஞ்சினமிகுந்தனெருப்பெனக்கொதித்தே
‡ யறையுறுந்திரள்பந்தெனச்சித்தராமைய
னிறையுறுந்திருவருளுடைப்பிராளெடுநிகழ்த்தும். 40

* "குணமென்னுங் குன்றேறிநின்றூர் வெகுளி - கணமேயுங் காத்தலரிது" என்பவாகலின் இங்ஙனம் கூறினர். † "அகழ்வாரைத்தாங்கு நிலம்போலத்தம்மை - யிகழ்வார்ப்பொறுத்தறலே" என்ற திருக்குறன். ‡ அறையுறும் - அடிக்கப்பட்ட.

குறிப்பில்லைதனெவெளிப்படையிகழ்வினுங்கொடிதாய்
வெறுப்புமுன்செயாவென்னெநீயீண்டிகழ்ந்தமையாற்
பொறுப்பனல்லன்யானுதல்விழித்தீயிடைப்பொடிப்ப
வுறப்பனென்றனனிகழ்வினுக்காருளமறுகார். 41

தன்னைக்கொல்லினுந்தான்பிறிதென்றினைக்கோறல்
பன்னிற்பாவமென்றறைகுவர்கற்றுணர்பறையோர்
நின்னைச்சொல்லியவறத்தினைநிந்தையென்றெண்ணி
யென்னைக்கொல்லுவனென்றநீபுறவனேயென்று. 42

சாதனங்களு * ணீறுமுந்தியதென்பர்சாற்று
மாதவங்களுளுயிர்செகாமையுமற்றுமதிப்பிற்
பாதகங்களிற்கொலைசிறந்தன்றெனப்பார்த்து
நீதெரிந்திலையரக்கனேயென்றனனிமலன். 43

செருக்கொழிந்திலையென்னெதிர்செவிசுடுதீச்சொ
லுரைத்துநின்றனையுனைவிடுகிலனெனவுருத்து
நெருப்பெனுந்திருநுதல்விழிதிறந்தனனினைத்து
மரிப்பினுந்தருவேனுயிரென்றிராமன்ரூன். 44

நெற்றித்தீவிழிகாமனைநீற்றுவதன்றிப்
பற்றிக்காமமில்யோகியைப்படுத்திடவற்றே
செற்றத்தானுதல்விழியழலல்லமதேவன்
வெற்றித்தாண்மலர்க்கீழ்ச்சென்றுபணிந்ததுவிரைந்து. 45

பணிந்துமீளுமவ்வழலொருவீரன்மேற்பாயத்
தணிந்துபோயவனுற்றல்கண்டுளவலிதொலைந்து
தணிந்துபேடிமேற்செல்லுமாறலே ‡ வனசரன்போ
லணிந்திராமன்வாழ்நகரினிற்பற்றியதன்றே. 46

கங்கைவார்சடைக்கறைமிடற்றிறைநகைக்கனல்போய்த்
தங்கமாமதில்சூழ்தருபுத்தினைச்சுடல்போ
லெங்கணையகன்மேல்விடுமிராமனன்னுதற்க
ணங்கிபோகியந்நகரினைச்சுட்டதையன்றே. 47

அணியெரிந்தனமென்றுகிலெரிந்தனவாரத்
தணியெரிந்தனகலனகளெரிந்தனசுதையின்

---

* பாவங்களே நீற்றலால் விபூதி நீறெனப்பட்டது. ‡ ஆறலை-வனசரன் - வழிநின்று சூறையாடும் வேடன்.

பணியெரிந்தனமேனவளமெரிந்தனபகரு
மணியெரிந்தனவெரிந்தனகண்டவர்வயிறு. 48

சேயெடுப்பவர்விருத்தரையீர்ப்பவர்சேமம்
போயெடுப்பவர்புகவரிதாகிமண்புரண்டு
வாயடிப்பவர்மேனியெரிவிப்பவர்மறுகிப்
பாயலேக்கடலெனவழுதிரங்கினர்பதைத்து. 49

உதித்தஞாயிறுபோன்றசெம்மணியினமொளிரப்
பதித்தமாளிகைமீதுபற்றியவழற்கொழுந்தாற்
கதிர்த்தவாடகச்செங்கமலத்துவான்கங்கை
கொதித்ததாயிடைக்கொதிபொருதன்னங்கள்குழைய. 50

அன்னகாலையிலருட்கடலல்லமதேவன்
சொன்னலாபுரத்தவர்தயரதனைத்தையுந்தொலைப்ப
வுன்னியோர்விழியழலினையிமைப்பினிலொழித்தான்
முன்னமாலமுண்டமரரைக்காத்தருண்முறைபோல். 51

எந்தையல்லமனருளினுதல்விழியெரியால்
வெந்தவங்கர்பண்டையின்மும்மடிவிளக்கம்
வந்தபல்வளமொடுசிறந்ததுநரர்மகிழ
வந்துவெவ்வழலிடைவெந்த *ழாடகமொத்து. 52

ஒருத்தன்வந்தவாறுக்கியபொற்பணியொன்றைத்
திருத்தவல்லவனழித்ததைச்சிறந்திடச்செயல்போற்
தனிவரையமர்திருச்சயிலநீங்கியே
அனிவரையல்லமன்சுருதிமெய்ப்பொருண்
முனிவரையுணர்த்தியமுறைமைகூறுவாம். 1

அருந்தவமுயன்றகோரக்கற்கம்முறை
விரிந்தறிவுருவமாமெய்ம்மைத்தன்மையைப்
பரிந்தருளமலனப்பாலு * முத்தரம்
பொருந்துநர்தமக்கருள்புரியப்போயினன். 2

நல்லனதியனநாடுறுதிகொள்
வல்லழலெனவருண்மழையெனப்படு
மல்லமனெதிர்ந்தவரறமுளாரற
மில்லவரெனுதறிவியற்றினனரோ. 3

யாவருந்தனதருட்கேற்றுளாரெனப்
பாவவன் † றலையறப்பரிந்துநன்னெறி
மேவவந்தருள்புரிவிமலனுயிடை
மாவழங்குறுமொருவனத்திற்போயினன். 4

அக்கொடுவனத்தெதிரன்பென்கின்றதுட்
புக்கறிகிலாவொரு ‡ புளினன்கூன்புறக்
$ கொக்கெனநாடொறுங்கொலுகுறித்தவன்
கைக்கொடுமரமொடுகடிதுதோன்றினன். 5

அன்பனுய்க்கண்ணிடைந்தப்பும்வேடனுக்
கின்பமீருதல்புகழ்க்கேற்றதன்றுநான்

---

* உத்தரம் - வடதிசை. † தலை - பாசம். ‡ புளினன்-வேடன்.
$ "கொக்கொக்கூம்பும்பருவத்து" என்றதிருக்குறளைக்கொள்க.

வன்பனுய்த்திரியுமிம்மறவற்காப்பலென்
றென்பொலாநெறிமனமிரங்கிற்றென்றனன். 6

நல்லறிவனனுளநடுதற்கொப்பிலா
வல்லமன்னினையறவருட்கண்வைத்தனன்
கொல்லையின்னிதையிடைக்கொழுப்புக்கா * முளி
புல்லெரிவுறவழற்போகட்டென்னவே. 7

மேவுதீவினையெலாம்விளிந்துதன்பனுய்ப்
பாவியேனும்வகைபகர்தியென்றனன்
மாவலால்வழங்குமுவனத்தில்வேட்டுவன்
யாவர்தாமிறையருளெய்தினுய்ந்திடார். 8

அறிவெனும்வேலினுலம்புழன்களா
மறியினமருளெனும்வலையைத்தப்புரூ
தெறிகுவையெனினுனக்கில்லைதன்பெனு
நெறியினவழுவறநிமலன்கூறினுன். 9

† அறிவொடுமனஞ்சிலையம்பதாகநான்
குறியெனவெய்வையேற்குமரனின்றனைப்
பொறிமதிலிலங்கைமுன்புரந்தளான்றலை
பறிபடவெய்தவன்பணியுமென்றுமே. 10

இப்பரிசெறுழ்வலியெயினனுய்வகை
செப்பிநன்னிலையருள்செய்திருத்தியே
யப்புறமருளுடையமலன்பாம்பொழு
தொப்பறுதவனமொன்றுதோன்றிற்றே. 11

‡ கோடமைகரிகளுங்கொடமடங்களும்
பாடமைபகைதவிர்பரிசினனதற்
காடரவொடுமதியமர்பிரான்சடைக்
காடலதுவமையாங்கண்டதில்லையே. 12

$ பெயர்க்குறுகால்கள்கையாகப்பெற்றவு
முயிர்க்குறுநாசிகையாகவுள்ளவு
மயக்கறுதீயினைவளர்த்துவான்புனல்
பயக்குறுமுனிவர்பணிகள்செய்யுமால். 13

---

* முளிபுல் - உலர்ந்தபுல். † அறிவு-சிலையாக, மனம் அம்பதாக எனக்கொள்ளவைத்தலால் இது நிரனிறை யலங்காரம். ‡ கோடு அமை-கொம்புகள்பொருந்திய. $ இச்செய்யுளுக்கு யானைகள் சிங்கங்கள் என்பன எழுவாயாக வருவிக்க.

மறைபலவோதுநர்மகம்வளர்க்குநர்
கறைமிடறுடையகங்கடவுட்பூசனை
முறைவழிபுரிகுநர்மூச்சவித்தொரு
தறியெனவசைவறவிருக்குந்தன்மையார். 14

வேறு.

ஆயிருக்குமருந்தவர்தங்கள்பாற்
போயிவர்க்குறுபோதனையாற்பவ
நோயகற்றுவனென்றுனுவன்றனன்
ரூயெனக்கொருதானெனுமல்லமன். 15

நோற்றுநோன்புடனெதுவருந்துவீ
* ராற்றுநீர்மகமாதிவினையினுன்
மாற்றுமாயைமலஞ்செறுவிற்படு
சேற்றினுர்கழுஞ்சேறுநிகர்க்குமால். 16

ஞானங்கொண்டுநணுகுஞ் † சிவபத
மூனங்கொண்டகருமத்துறுவது
வானங்கொண்டுவளர்த்தல்புகையநு
மானங்கொண்டுவளர்த்தலையொக்குமால். 17

குடுமியங்கிரிபொப்பக்குவித்தபுற்
சுடுதல்கொண்டுபிறவிசுடப்படா
தடுபுலன்களறிவெனுமங்கியிற்
சுடுதல்கொண்டுபிறவிசுடப்படும். 18

போதமாகும்புனிதத்தழலினுட்
பேதபாவனைப்போவிபெய்வனே
லாதிசேவுடைமாசியவனென
வேதம்யாவும்விளங்கவிளம்புமே. 19

மறையினுள்ளகருமமனவினை
வறியர்கொள்ளுதல்போலமதியறுஞ்
சிறியர்கொள்வர்தெனி ‡ தத்துவமசி
யறிஞர்கொள்வரணிகொளுஞ்செல்வர்போல். 20

---

* சிவஞான மொன்றுனன்றி மாயாமலம் நீங்காதென்றது.

† சிவபதம்-சிவனுடைய திருவடிப்பேறுகிய சாயுச்சிய முத்தி.

‡ தத் - அதுபோல, துவம் - நீ, அசி - ஆனாய். சண்டு இவா என்னும் உவமவுருபு கெட்டு நின்றது.

என்றுகூறவிருந்தவன்பொடு
நின்றுஞானநெடுந்தகைதாண்மிசை
யின்றுநீவரவெத்தவஞ்செய்தன
* மன்றையாமெனவாழ்த்திவணங்கினர். 21

† மாயைதோன்றியஞான்றுமனத்தெழு
மூயமோகமுடிந்திடச்செம்மலர்
வாயினூற்றுருவாசன்சொலப்படுந்
தாயனுமிவனென்றுதுதித்தனர். 22

இன்னவாறிங்கிருந்தவரின்புற
மன்னுஞான ‡ மறைமொழிகூறியே
தன்னமேவுந்தலைமைபுரிந்தன
னன்னபோலுநம்மல்லமதேவனே. 23

இருபதாவது,

முனிவரர்கதி

முற்றிற்று.

கதி-உ०-க்கு திருவிருத்தம் - கூஎ०.

---

* "மன்றவெண்கிளவி தேற்றஞ்செய்யும்" என்னும் விதிப்படி மன்ற என்னும் உரிச்சொல் ஈண்டுத் தேற்றப் பொருட்டாதலறிக.
† மாயா என்னும் பதம் மாயை எனத் திரிந்து நின்றது. மாதியா தீதி - மாயா. மா - தோற்றம். யா - இலயம். உலகம் எதனிடத்தினின்றுந் தோன்றி இலயிக்கிறதோ அது மாயை. இதனைச் சிலர் பிரமமாகவைத்து வாதித்தலால் மாயாவாதி யெனப்பட்டார்.
‡ மறைமொழி - மந்திரச்சொல் அது "நிறைமொழிமாந்த ராணையிற் கிளந்த - மறைமொழிதானே மந்திரமென்ப" என்றதொல்காப்பிய விதியாற் போதரும்.

சிவமயம்.

இருபத்தோருவது,

சூனியசிங்காதனகதி.

வேறு.

அல்லாமனையறிதற்கோரிகருவியாகவுனிச்
சொல்லிய * வெழுநிலைப்பொற்சூனியசிங்காதனமொன்
றில்லையெனலில்லையனுமெங்கள்குருவசவேசன்
மல்லலுறவினிதாற்றிவைகுமுறைவகுத்துரைப்பாம். 1

ஒடுக்குமனம்வீட்டுநெறிக்கொருதுணையாகும்புறத்து
நடக்குமனநிரயவழிநடப்பதற்குத்துணையாமென்
றிடக்கர்மனமடக்கும்வகையெம்பிரானியம்பியவா
றடக்கமனமுறுநெறியினருணந்திதலைப்பட்டான். 2

நில்லாதபோமனத்தைக்கால்பிடித்துநிறுத்தியே
வில்லாரு † மதியமுதம்விருந்திட்டுநட்புரீஇப்
பொல்லாதபுலனுகரப்புறத்துநிலைதடுமாறிச்
செல்லாமலுடன்கொண்டுசித்திரமொத்திருந்தனனால். 3

நின்றமனங்கொண்டுதானித்தமாந்தனையுணர்த்த
வென்றுவருஞானகுருவெனவெழுந்தவளர்காத
லொன்றுமொழிவதறிற்பவுவப்பதுலகிற்பொருள்வே
றின்றியருணந்திபிரானெந்தைவாவினோக்கி. 4

எவ்வுருவினெடுவருமோவெம்பிரான்றெளியகிலேன்
செவ்வியவோர்தவிசமைத்துச்சேர்ந்ததன்மேலிருப்பவனே
யவ்வியமிலல்லமனென்றறிவன்யானென்றுதுணிந்
திவ்வுலகமுளம்வியப்பலிதுசெய்தானருணந்தி. 5

---

* எழுநிலையாவது - சுபேச்சைமுதலியன. சத்ததாதுவெனவும் ஆறுதாங்களோடு அவாதசாந்தம் என்னுங்கூடிய ஏழாதாரங்களெனவுங் கூறலுமொன்று. † இங்கு மதி என்றது ஆக்கினையென்னும் ஆறாதாத்தருகு விளங்கும் சிதாகாச சந்திரமண்டலத்தை. "விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே வேண்டுவேன்" என்றார் பெரியோரும்.

வேறு.

ஆதியாதாரமாதியடக்கெனப்பன்னிறத்த
சோதி * யேழ்நிலகளோங்கச்சூனியபீடமொன்று
போதிஞனுளம்வியப்பப்பொன்மணிபளிங்குகொண்டு
சாதிநான்மறைகள்போற்றுஞ்சைவநாயகன்செய்வித்தான். 6

காரணவுபாதியேழ்மேற்கண்டிடுஞானிபோலச்
சீரணிநுதலின்மீதுசென்றுகாண்யோகிபோலப்
பூரணஞானநந்தப்போதகனிருப்புக்காண்பா
னேரணிநிலகளேழ்மேனிகழ்வெளித்தவிசமைத்தான். 7

களங்கமின்மதியம்போலக்கண்டவர்மனமலர்த்தும்
பளிங்குசெய்நிலையுள்வந்துபார்ப்பவர்மெய்ந்நிழற்போய்
விளங்குதறன்மேற்றோன்றவெந்தெரிபசும்பொனுற்செய்
தளங்கொளிநிலையைச்சென்னிசுமத்தல்போற்செய்தவொக்கும். 8

திருந்தியபளிங்குகொண்டுசெய்தவந்நிலையின்வாய்தல்
பொருந்துதறிகிலாராய்ப்புகுந்துகாண்மனிதரெல்லாங்
கரங்கொடுதடவிக்கண்டுகண்டெரியார்கள்போல
வருந்தியமனமகிழ்ந்துவசவனேவியப்பன்றே. 9

நினைவினலொருவன்செய்தநெஞ்சுளாலயமேயன்றி
வினையினலுலகர்செய்துவிளங்கியபணிகடம்மு
ளினையதோடுவமையாதலில்லையென்றும்பரெல்லாந்
தனையலாங்கரிலாததவிசினைவியந்துநின்றூர். 10

அம்பராசனமியன்றவதிசயங்கேளாமுக்கட்
டம்பிரானடியாரகத்தரையுளாரெல்லாஞ்சென்று
செம்பொனுலியன்றவந்தச்சீர்கெழுபீடநோக்கி
யெம்பிரான்வசவதேவளிணையடிதொழுதிருந்தார். 11

கரையிதுகல்லீக்கென்னக்கற்றவர்பலருமேத்தத்
தரைமிசையமைத்திருந்தசாரதாபீடமேபோ

---

* காரணவுபாதி யேழாவன - ஈசன், மூற்றறிவான், வியாபி, எவைக்குமேது, மாகாசகன் நிருபாதி, பாவனை என்பன. ஆலயம்-சரீரப்பிரஸ்தார ஆலயம், இருதயப்பிரஸ்தார ஆலயம் என்றும், அவையண்டபிண்டம் என்றும் இவ்விருவகைப்படலால் "நெஞ்சுளாலயம்" என்றூர். ஈண்டையது பிண்டத்தது என்க.

லுரைமன மிறந்தாமிவ்வொருதனிஞானபீட
மருடருகுருகுகேசனன்றியேறிடுதற்காமோ. 12

* இப்பெரும்பீடமேறியிருந்திடவல்லோனெனறும்
வைப்பெனும்படிமறைந்தெம்மனத்திருப்பதற்குவல்ல
வப்பெருங்கருணைக்குன்றமாகுமல்லமனேயென்று
செப்புறுபரிசிலாளுய்ச்சிந்தைசெய்திருந்தானந்தி. 13

கரைபொருகங்கையாற்றிற்கண்ணிவைத்தாசவன்னம்
வருதலேநோக்கிநிற்கும்வாறுபோலிருள்விழுங்கிப்
பெருகொளிவிரிக்கு † ஞானபீடமொன்றமையவாக்கிக்
குருபரன்வரவுநோக்கிக்கொண்டிருந்தனனெங்கோமான். 14

‡ எட்டினேப்புகுநீராற்றிலெதிர்கிழித்தேறவிட்டோன்
பாட்டுடைத்தலேவனன்பர்பலருநம்வசவன்றன்னே
காட்டமுற்றடையுமாசானமக்குமாமென்றிருந்தார்
வீட்டினுக்கேற்றுஞ்சோதிவிருந்திற்குமுதவுரோ. 15

இருபத்தோரூவது,

சூனியசிங்காதனகதி

முற்றிற்று.

கதி-உக-க்கு திருவிருத்தம் - கூஅடு.

---

* இப்பீடத்தினிலக்கணமெல்லாம் வெளிப்படையானுணரும் பொருட்டே ஆலயங்களிற்றூபி வகுக்கப்படுமென்க. சூனியம் என்பது உள்ளதும் இல்லதும் உளதிலதும் எனப்படாதுகிடந்தவெறும் பாழென்பர் திராவிடமாபாடிய கருத்தாஞ் சிவஞான யோகிகள். † இருதயபங்கயாசனம் எனவுங்கூறுப. ‡ அத்துவித சித்தாந்தமாகிய சைவத்திருக்குமார் நால்வருள் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் எட்டினே யெதிரேறவிட்டார்.

சிவமயம்.

இருபத்திரண்டாவது,

சூனியசிங்காதனத்திலிருந்தகதி.

வேறு.

பள்ளம்புகுபுனல்போனெறிபடருஞ்சிவனடியா
ருள்ளம்புகுமருணந்தியிவ்வுலகோரறியாமற்
கள்ளங்கொளுமனமோடுசெய்யுமேமலொருகருமை
வெள்ளங்கடிதேறுஞ்செயல்விருப்பாலெடுத்துரைப்பாம். 1

சிரனடுறுகயலாடல்செய்செந்நாடுடையுழவ
ராளுடுறுமொருகாவிரியறனடுறுமுறைபோற்
பாளுடுறுமடியார்வினைபரியத்திரிகுரவன்
வாளுடுறுமுருகும்பரவசவன்புறுவசவன். 2

பொன்னுனமைதிகர் * வீசனை புரிந்தீரறபருவம்
பின்னுயினயான்செய்தொழில்பிள்ளைத்தொழிலாயிற்
றெந்நாள்வருமெனையாளுடையெம்மானியேனென்
றுன்னுவருதயரோடுளமூளைந்தான்வினைகளைந்தான். 3

இவ்வாறமர்நாளோர்பகலெமையாளுடைவசவன்
செவ்வாறுசென்மனத்தல்லமதேவன்வரரூன்றிற்
றவ்வாறதுநிகழ்வுற்றவனுர்வந்தனையொருநா
னெவ்வாறுரைசெய்வன்பணியிறையுஞ்சொலவரிதால். 4

வலமாடினவிழிதோளருள்வசவற்கதிதூரஞ்
செலுமாடவன்வருநாள்விழியிடமாடியசெயல்வாய்
குலமாதுளமெனவேமகிழ்கொண்டன்புநிறைந்து
மலமாயைகடொக்குஞ்சென்னவசவற்கிதுகல்வான். 5

வேறு.

நற்குறிபலவுமிற்றைநாணிகழ்கின்றவென்பால்
† வற்கலைமுனிவர்போற்றும்வசவவங்கிகழ்ச்சியானும்
பிற்பெறுபயன்யாதென்றுபெருந்தகைவினவுகின்ற
சிற்பரமுணர்ந்தசென்னவசவதேசிகனுரைப்பான். 6

---

* வீசுசுணை - எறிக்கின்ற சிங்காதனம். † வற்கலை - மாவுரி.

ஐயவிங்கிமித்தந்தன்னுலல்லமற்காண்பையின்று
மெய்யுரையிதுகாணென்னுவிடுத்தனன்மருகனெங்கள்
கையுறுமுதனுன்முன்கருதியபடிவிண்ணப்பஞ்
செய்யவண்மகிழ்வுபூத்துச்செயல்செய்வார்க்குரைக்கலுற்முன். 7

உடம்பெனும்வனத்தினின்றவுயிரெனுங்கன்னிதன்னைத்
தொடர்ந்திசைமணத்தாற்சேர்ந்தஅணைவனல்லமனின்றெய்து
மடைந்தருள்கல்யாணத்தையணிமினென்றெந்தைகூற
நடந்தனர்நன்றென்றன்னுர்நகரியோர்க்குணர்த்தினுரால். 8

அலர்கதிர்ஞாயிறுமணிநெடுந்தேர்க்கொடிஞ்சி
விலகுறவதிற்முக்காமன்மேலளவொருசாணிற்பப்
பலர்புகழ்மணிமாடத்துப்பறக்குமொண்கிளியொழுங்கி
லிலைசெருகியபசும்பூந்தோரணமிசையவார்த்தார். 9

போதகக்குருந்தம்மூருட்புகக்கொடிகட்டனன்றென்
முதாவெடிமைசத்தாவிர்கொடிமாடத்தும்பர்
சோதிதன்னிரதமென்றுஞ் * சுழன்மெனநகுதல்போல
வீதியுளாடியோடுவிளங்குறுலத்தேர்செய்தார். 10

குங்குமநறியசந்தங்குழைத்ததண்பனிநீர்சிந்திப்
பொங்கெழின்மறுகினத்தும்புதைசெழுஞ்சேதுசெய்தார்
மங்கலமினைமுன்பந்தர்மணப்பந்தருண்மையாகக்
கொங்கவிழித்ழ்நறும்பூங்கோதைகடிக்கினுரால். 11

வயலிடஞ்சேர்ந்துநின்றவாழையுங்கரும்பும்பாளை
யுயரினங்கமுகுமொன்முடொன்றுநின் ‡ றுசாவித்தாமெல்
லியரருந்தொடைதோள்கண்டமெனுமுறப்பழகிரக்குஞ்
செயலில்வந்தடைந்தவென்னச்செழுங்கடைத்தலைமுனர்த்தார். 12

இலையினற்பொலிந்தவாழைதொடையினுலெய்தும்பேறு
மூலையினற்பெறுவமென்றுமுன்னிவந்திருத்தல்போலக்
கலையினுற்சிறந்தவல்குற்கயற்கணுர்நிறைகுடங்கள்
விலையினுற்சிறந்தசெம்பொன்வேதிகைமீதுவைத்தார். 13

மனத்திருளகற்முநின்றமணிச்சுடர்வாவுபார்ப்ப
னினைத்துவந்திருத்தல்போலநெடுமணிக்கதவுவாய்தன்

---

* சுழலும் என்னும் சொல்முற்முகலின் உகரங்கெட்டு, சுழல்ம் எனநின்று, லகரம் னகரமாகத்திரிந்து சுழன்ம் என முடிந்தது.

‡ உசாவி - வினவி இச்செய்யுள் நிரனிறையணி.

மூனைத்திருவிளக்குவைத்தார்முகிழ்மூலைக்கருநெடுங்கட்
டனிற்கிலேநுதற்பூங்கோதைச்சரிகுழற்றளிர்க்கைசல்லார். 14

அல்லமகுரவன்றன்னேயருணந்தியோடுகொணச்
செல்லுவமென்றுசெம்பொற்சிர்கெழுவிமானத்தோடு
மொல்லையினிலத்திழிந்தவும்பர்வாழ்மகளிர்போல
வில்லெனுமருங்குன்மாதரிருந்தனர்நிலத்தேறி. 15

திருநகரிதனேயின்றுகிருந்தவேறலங்கரிப்ப
நெருநலுள்ளனகழித்துநீத்தவையமர்கோமா
னொருநகரலங்கரித்தற்குரியனவென்னினந்தி
பெருநகரணியின்மிக்கபெருமையர்வீறவல்லார். 16

இன்னணமலங்கரித்தவெழின்மணிமறுகினூடு
மன்னவர்மன்னனுய்யமந்திரிக்கிழமைபூண்டோன்
றன்னொருகுரவன்றன்னேத்தானெதிர்கொள்ளவேண்டிப்
பொன்னவிர்கோயிளின்றும்புறப்படாப்போதலுற்றான். 17

பதியுமப்பதியாற்காணும்பசுவுமப்பசுவின்ஞானம்
பொதியு * மைம்பாசந்தானும்பொருளெனவழக்கிற்சூறும்
விதியுமப்பாசம்மெய்யாய்வேறறும்வீடுமோதி
மதிமயக்கறுத்தசென்னவசவனுமருங்குசென்றான். 18

எம்மடிமாசுமூக்கனிறையவனடிமைபூண்டோர்
தம்மடிமாசுநீக்குந்தன்றொழினெறிவழாத
செம்மடிவாலமாச்சதேவனுமன்புதாயின்
மும்மடியாகுநந்திமுதல்வனேடருகுசென்றான். 19

சங்கரன்சடைபிற்பாம்புந்தவழ்ந்தெதிர்கிடந்தபிள்ளேத்
திங்களஞ்செய்தவொப்பச்செங்கைமானவசமாகக்
கங்கையுந்திரையடங்கக்கானமுன்பாடியீச
கிங்கரன்றனதபாங்கர்கின்னரப்பிரமன்சென்றான். 20

தண்டினர்காகக்கையர்சடையருத்தாளனத்தர்
‡ புண்டரநுதலர்கற்றேய்பூந்துகிலுடையர்நீல
கண்டனேயகம்புறத்துங்கண்டவர்வினேயினீங்கித்
தொண்டுறுநெறியினின்றேர்சூழ்தனரெண்ணிலாரே. 21

---

* ஐம்பாசமாவன - ஆணவம், கன்மம், மாயை, வைந்தவம், திரோதாயி, தமம், மாயை, மோகம், அவித்தை, பொய்யுருவி என்பன பொருந்தா. ‡ புண்டரம் - விபூதியால் அணியும் மூன்றுகுறி.

தோள்வலந்துடித்ததின்றுசுடரிலைவேற்புணென்று
கோள்வலங்கொள்ளுஞ்செம்பொற்குன்றெனுமார்பிற்காண்பேம்
வேள்வலங்கொண்டநெற்றிவிழியிறையருளாலென்னும்
வாள்வலங்கொண்டசேனைமறவர்வாரிதிபோற்சூழ்ந்தார். 22

எங்கள்வாழ்வேனையநந்தியெழுந்தருண்மருகினூடு
மங்குல்வானிரவிப்புத்தேண்மணிநெடுந்தேர்ப்பைங்கிள்ளை
தங்கள்காற்றாட்குடைந்துதரிப்பரிதாகியோட்
வங்கண்மாளாலமெல்லாமதிர்தாநடந்தவம்மா. 23

* அரவொடுமண்சுமக்குமடகளிறெட்டோடும்போர்
பொரவொருகளிநல்யானைபோதுமென்றெண்ணிலாத
விரவொடுபுரைநிறத்தவீர்ங்கவுட்சிறுகட்டேங்கு
கரவுளவெண்மருப்புக்கடாக்களிறெழுந்தவன்றே. 24

ஆனைமேற்கொண்டும்வாவுமாடல்வெம்பரியிவர்ந்துங்
கூனல்வேய்தொடுத்துளான்றகுச்சுடைச்சிவிகையூர்ந்துஞ்
சேனைகாவலரெண்ணில்லார்சிலைமதன்கோலமென்ன
மானவேன்மன்னர்மன்னன்மந்திரிமருங்குசென்றார். 25

நலங்கிளர்மதன்குடைக்குநகைமணிக்காம்பிலென்ன
விலங்குறுபசும்பொற்காம்போடெண்ணிவெண்குடையெழுந்த
புலன்களைவென்றவீரன்போகியமறுகிலெங்கும்
விலங்கினையன்றியந்தவிலங்கின்வாலாடிற்றன்றே. 26

மாயைதன்றூல்வியெல்லாமாதர்க்கும்வந்தவன்றூ
நாயகன்றன்னைப்பற்றிநாம்வென்றிகொள்வமென்று
போயுறுதன்மைபோலப்புணர்மூலைக்கருநெடுங்கட்
டேயுநுண்மருங்குன்மாதர்திரள்பலவெழுந்தவன்றே. 27

பரிகளின்முழக்குமிக்கபல்லியமுழக்கும்பூட்கைக்
கரிகளின்முழக்கும்வீரக்கழலொடுசெல்லும்வெங்கோ
ளரிகளின்முழக்குமாதாணிகளின்முழக்குஞ்செங்கைச்
சரிகளின்முழக்கும்விம்மித்தடங்கடல்போன்றவன்றே. 28

ஆடிவகவரியெங்குமசைவனசிவிறியெங்கு
மூடிவகுடைகளெங்குமுழங்குவ ‡ வியங்களெங்கும்

---

* அரவாவன - வாசுகி, அனந்தன், தக்கன், சங்கன், குளிகன் பதுமன், கார்க்கோடகன், மகாபதுமன். களிறெட்டாவன-ஐராவதம் புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வ பௌமம், சுப்பிரதீகம் என பன. ‡ இயங்கள் - வாத்தியங்கள்.

பாடுவவிசைகளெங்கும்பாய்வனகரிகளெங்கு
மோடுவபுரவியெங்குமுயர்வன * தூளியெங்கும். 29

‡ கரிகலமசையாநின் றகவரிகணுரைகண்மொக்குள்
விரிகுடைமதகைவீரர்விதிர்க்கும்வாளுகண்மீன்பாயும்
பரிதிரைமுழக்கமார்க்கும்பல்லியமுழக்கமாகப்
பொருகடலெனவெழுந்துபோயதுவசவன்சேனை. 30

வேறு.

இன்னவாறெழுந்திரளொடுநந்தியெம்பெருமான்
றன்னைநேர்குருபரனெதிர்சென்றவன்றூளைச்
சென்னியால்வணங்குவனெனுமோகையாற்சென்றான்
றன்னும்வானவர்தொகுதியும்வியப்பொடுதிப்ப. 31

அத்திறஞ்செலுஞ்செலவினையகங்குளிட்டமணர்
புத்தர்கண்டிவரென்கொலோவறிகெதிர்போதல்
பித்தனென்றுதம்மிறைவனைச்சொல்லுமிப்பேய
ரெத்திறஞ்செயாரெனச்சிவசரணரையிகழ்ந்தார். 32

மன்னன்விச்சலன்பாலடைந்தருகெம்மன்னு
நின்னகர்க்கொருபுதுமையொன்றுற்றதுகேண்
மன்னியித்தமொன்றெய்தியதேகொடுநந்தி
தன்னிடத்தொருவன்வருமென்றெதிர்சாரும். 33

தண்டநாயகன்றூள்வலந்துடித்ததுதன்னைக்
கொண்டுதான்வருங்குருபரனென்றெதிர்கோடல்
கண்டவோர்கனவிற்பெறுமடிசிலைக்கருதி
யுண்டுபோம்விருந்தினர்தமைத்தேடுதலொக்கும். 34

ஒருவன்வந்திடுமெனவெதிர்கடற்படையொருங்கு
பரவிவந்திடச்செலுமிவன்றன்னைநீபார்த்துப்
பொருவின்மந்திரக்கிழமைநல்கியதனைப்போல்வா
ரரவின்வன்றலைப்படிமிசையிலெனவறைந்தார். 35

அருகர்வாசகங்கேட்டலுமுளம்வியந்தடிகேள்
விரகினுன்மிகுதண்டநாயகனுமெவ்வினையு

---

* தூளி - புழுதி. ‡ கரி மரக்கலம், கவரிகள் நுரைகள், மொக்குள்குடை, வாள மீன், பரிதிரை, முழக்கம் பலவாத்திய முழக்கமென்னலின் இயை புருவக வலங்காரம்.

கருதினுன்கொலோவறிகிலமுடிவுறக்காண்பம்
வருகிநீரிருமின்களென்றிருந்தனன்மன்னன். 36

தண்டநாயகன்றனதுளந்தங்குறத்தானத்
தண்டநாயகன்றன்மனந்தங்கியதலைவன்
றண்டநாயகன்றனையிகழ்சமண்செருக்கழியத்
தண்டநாயகனெதிர்செலநினைந்தனன்றனித்து. 37

என்னைக்காண்குவனெவ்வகைசெல்லினுமென்று
துன்னற்கோவணமொடுவிரிகுஞ்சியுந்தோன்றத்
தன்னைக்காண்குநர்வித்தனென்றெள்ளுவென்றனக்குப்
பொன்னைப்போலுநல்வசவனுயகனெதிர்போனன். 38

வேறு.

மருலிநின்றவரின்மருளனேயென
விரைவிலிங் * ககலகலெனவிலக்கினு
ரொருவருங்கண்டிறையுருவுணர்ந்தில
ருருவுகண்டெள்ளுநருணரவல்லரோ. 39

அல்லமனுயிடையாடலுன்னியே
† பல்லெழுவாயுடைப்பாலனுகுவன்
கொல்லிளவேறெனக்குமரனுகுவன்
வில்லெனவுடல்வளைவிருத்தனுகுவன். 40

விஞ்சையர்மகிழ்வுறவீணையொன்றுகைக்
கஞ்சமென்மலர்கொடுகானம்பாடுவ
னஞ்சனவிழிமணியரிச்சிலம்படி
வஞ்சியர்மனமயல்வளரவாடுவன். 41

இந்திரனிவனெனயானேமேற்கொளா
வந்தொருபுடைநரர்மருளத்தோன்றுவன்
பைந்தொடிபெயர்தரு ‡ பாணிபோலவே
பந்திமுன்மூடங்களைப்பரிநடத்துவன். 42

வானிடைக்கண்டனன்றெருவிற்கண்டனன்
சேனையுட்கண்டனன்றெருவிற்கண்டனன்
யானெனக்கடிநகரெங்குந்தோன்றுவன்
ஞானநற்கண்ணினுற்காணுநம்பனே. 43

---

* அகல் அகல் என்னும் அடுக்கு வெகுளிப்பொருட்டு. † பல்லெழு - தந்தம் அரும்பும். ‡ பாணி - காலம். பந்தி - குதிரைச்சேனைகடங்குமிடம். இலாயம் என இக்காலவழக்கு.

ஆடுநர்தம்முடனுடுநல்லிசை
பாடுநர்தம்முடன்பாடுமென்மலர்
சூடுநர்தம்முடன்சூடும்வாள்விதிர்த்
தோடுநர்தம்முடனோடுமல்லமன். 44

பொருவிலாவளநகர்பொருந்துமானுடர்
வரைவிலாவாடலிவ்வகைசெய்கிற்பவ
ரொருவரோபலர்கொலோவுணர்கிலோமென
வெருவினுரல்லமன்விநோதநோக்கியே. 45

மண்ணிடைமறைவுறுநிதியவைப்பினைக்
கண்ணிடைமஞ்சனக்காரன்காண்கைபோ
னண்ணிடுமுணர்வுடைநந்தியெம்பிரா
னண்ணலேயறிந்தனனேயமின்றியே. 46

உடம்பெலாமுள்ளமாயுருகிக்கண்கணீ
ரடங்குறுதொழுகமெய்விதிர்ப்பவன்பினுற்
றொடர்ந்தலாவுபிரையுந்தாண்டுகொண்டரு
ணெடுந்தகாயரெனநிலத்திறைஞ்சினன். 47

தண்டநாயகனிலந்தண்டிற்றாழ்ந்தெழுத்
தொண்டராயவனுடனுன்னினுரெலாங்
கண்டுநீர்விழியுகக்கசிந்தவன்பினு
லண்டநாயகன்றிருவடியிறைஞ்சினர். 48

கந்திதனன்பையுநந்திபால்வரு
மெந்தைதன்னருளேயுமென்சொல்வாமெனச்
சிந்தினர்மலர்மழைதேவர்யாவருந்
தந்துபியதிர்த்தனர்தொண்டரார்ப்பவே. 49

மயலிலாநங்குருவசவன்வாழ்தரு
மியலினுலல்லமனெண்ணிவந்தருள்
செயலினுலடியவர்திரள்களித்தலாற்
கயிலையேவளங்கெழுகல்லியாணமே. 50

தெரியநற்றண்டநாயகன்றன்செய்கையும்
பெரியவக்குருபான்பெருமைதன்னையுங்
கரியமெய்ச்சமணர்தாங்கண்டுமன்பில
ரரியவற்றரிதழுக்காறுவெல்வதே. 51

தந்திராமுடிவெனுஞ்சைவத்தேசிகன்
வந்தெதிர்தனதுதாள்வணங்கினுரொடு

செந்திருமகளுலாந்தெருவுட்போகியே
நந்திதன் * மந்திரானுகிஞனோ. 52

தேவருமுனிவருஞ்சித்தராகிய
யாவருமிதனியலின்னதென்றளத்
தாய்வருநிலையுடையம்பராதன
மூவருமடிதொழுதல்வலேக்கிஞன். 53

அசைவறுமறிவுருவாகுமல்லமன்
றிசையுறுமணியனேச்சென்னிமீமிசை
வசையறுவழிநடவசவதேசிக
னிசையமருலகிடையேறவேறிஞன். 54

சூறருமொளியுடைக் † குதிரைத்தேரிஞன்
வேறெருமணிமயவெற்பிவர்ந்தெனத்
தேறருமணிமிசைதேகிகோத்தம
னேறலுமலர்மழையிழிந்தவெண்பவே. 55

மூரசொடுபல்லியமுழக்கெழுந்தன
‡ தூரிசறுமடியவர்தொகுதிகைகுவித்
தாகரவெனுமொலியண்டகூடமட்
டொருகணமொடுங்குமுன்னெடிற்றென்பவே. 56

வேறு.

$ முதனிலைமுதலாமூவிருநிலையின்மூலமாமுதலவாதார
விதழவிழ்கமலப்பொகுட்டினுணின் றவிலிங்கமோராறெனநின்று
நுதன்மிசையிலகுநிட்களம்போலறுவன் றவேழாநிலையாகு
மதன்மிசையமலனல்லமதேவனமர்ந்தனனமரும்வியப்ப. 57

உடம்பொடுபொறிநாற் காரணமற்றுயிரென் றுரைத்திடப்படு
மூபாதிகளேக், கடந்துளநிலையிற் சோதியாயிலங்கக் கண்டிடுதூய
னேப்போல, நெடுந்தவிசமைய வமைத்தசெம்மணிப்பொன் னிலைக
ளோரேழையுங்கடவா, விடந்தனிவிசும்பென் றல்லமணிருப்ப விரு
ந்தவர்யாவருங்கண்டார். 58

---

* மந்திரம் - ஆகமம். தன்னே யடைந்தாரைக் காப்பது எனவும் தத்துவங்களேயும் மந்திர ரகசியங்களேயு முரைப்பது எனவும் காரணங் கூறுப. † குதிரைத்தேரிஞன் - சூரியன். ‡ தூரிசு - குற்றம். $ பகுதிவிகுதி, இடைநிலே, சாரியை, சந்தி, விகாரம்போன்ற ஆறு தாரங்கள் என்க.

ஆடினர்சிலவரங்கைகள்கொட்டியல்லமன்பெரியதோர்புகழைப்
பாடினர்சிலர்விழிபொழிவெள்ளம்பாய்வுறக்குவித்தகைதலேமேற்
சூடினர்சிலவர்நிலமிசைவீழ்ந்துதொழுதனர்சிலவர்மெய்ப்புளக
மூடினர்சிலவர்பரவினர்சிலவர்முக்கணனடியவரன்றே. 95

* இந்தியம்விடயங் காணமெய்யென்னு மியாவையுங் காண்கி
லனெங்கு, மந்தரவணமே லிவர்ந்திருந்தருளு மண்ணலைக் கண்டவ
ப்பொழுதே, முந்தியபரமா னந்தவாரிதியுண் மூழ்கினனழுந்தின
னம்மா,†தந்திரமெவற்றுஞ் சிறந்தசைவ தந்திரமெனு மருணந்தி.

‡ மண்டலமவத்தை குணமபிமான மலமிவையனைத்தையுங்கட
க்துட், கண்டிடும்வண்ணம் புறத்துநீயெம்மைக் காணியவமைத்தவிச்
செய்கை, வெண்டிரைசுருட்டுங் கருங்கடலுலகில் வேறுளர்செய்வ
தன்றென்று, தொண்டர்கடுதிக்கும் வசவனைத்துதித்தான் சுரரெலா
ந்துதிக்குமெம்பெருமான். 61

உன்னருளளதேற்கமலன்மா ரெழிலுமொருசிறி தரும்புசெய்கிற்கு
மென்னல்வசவன்புகன் றுகைகூப்பியிவ்விழிபுன லுகவுருகித்
தன்னுணர்கிலனுய்வசமறநிற்பத்தண்கதிர்ச்செம்மணிகுயின்ற
பொன்னரியணமேல்விசும்புறவிருந்தான்புல்லருமல்லமதேவன். 62

இருபத்திரண்டாவது,

சூனியசிங்காசனத்திலிருந்தகதி

முற்றிற்று.

கதி-உஉ-க்கு திருவிருத்தம்-கஎசஎ.

---

* இந்தியம் - ஞானேந்திரியம் ஐந்தும், கருமேந்திரியம் ஐந்து மரம். விடயமாவன - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்பன வும், வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் என்பவுமாம். காரணம். அந்தக்காரணங்கள். மெய் - தூலவுடல்.†தந்திரம் - நூல்கள். சைவதந்திரம் - காமிய முதலிய சிவாகமங்கள். ‡ மண்டலம் - அக் கினி, சூரியன், சந்திரன் என்னு மும்மண்டலம். அவத்தை - கீழா லவத்தை, மேலாலவத்தை. மலம் ஐவகைப்பாசம்.

சிவமயம்.

இருபத்துமூன்றுவது,

ஆரோகணகதி.

வேறு.

ஒருவருண்ணவொருவர்பசிகெடார்
தரையிலெண்ணுந்தகுமொழிபொய்த்திட
வருளினல்லமனுரும்பசிகெட
விரவியுண்டமிகுதிவிளம்புவாம். 1

தண்ணந்திங்களிற்றண்ணெனத்தண்கதிர்
வண்ணங்குன்றுரஞாயிறுவார்சிலைப்
பண்ணங்குன்றுபான்மையினுதனத்
தெண்ணந்தவனிருந்தருள்காலையில். 2

வசவனுள்ளம்வயல்புகுநீரென
விசயனல்லமன்மேனிவடிவமா
யசைவிலன்பிறிதொன்றுமறிந்தில
னிசையுமோவியமென்னவிருந்தனன். 3

கழுமணித்தவிசென்னுங்கலத்திடை
யழிவறத்திகழல்லமனுகிய
செழியநற்சுதைசென்னவசவனும்
விழியினுக்குவிருந்திட்டனன்றோ. 4

முனிவினைக்கொலுமோளிகைமாரனும்
வினையினைத்தெறுமெய்ம்மடிவாலனுந்
தனிநிகர்க்குந்தவிசமர்பூவினை
மனமெனப்படும்வண்டுறவிட்டனர். 5

முன்னிருந்தமுதுக்குறைவாளரும்
பின்னடைந்தபெரியருமாகிய
மன்னிருந்தமணித்தவிசின்புடைத்
தன்னியெங்கணுஞசூழ்ந்தனர்தொண்டரே. 6

புண்டரந்திருநெற்றியிற்பூசிமெய்க்
* கண்டியென்னுங்கலனணிவார்சிலர்

---

* கண்டி - பாவங்களெல்லாங் கண்டிப்பது உருத்திராக்கம்.

பண்டைநான் மறையின்பயனுகவே
கொண்டவஞ்செழுத்துங்குறிப்பார்சிலர். 7

நந்தனந்தருநாண்மலர்மஞ்சனஞ்
சந்தனஞ் * சுடர்தண்புகையாதிகொண்
டிந்தியங்களெலாமடங்குள்ளமோ
டன்திவண்ணனேயர்ச்சிப்பரோர்சிலர். 8

தாவில்பூசனைதாம்புரிகிற்பதிற்
பாவெலாஞ்சொலப்பட்டிடுமைம்புலக்
காவல்செய்யுங்கருத்துடையார்தமக்
கேவல்செய்தனன்றென்றுசெய்வார்சிலர். 9

பூசனைதொழில்பூண்பதினெண்மடங்
கீசனைத்துதித்தேத்துதனன்றென
வீசலொத்தவுளமிலராய்ப்புலத்
† தாசிநிற்பத்துதிப்பவரோர்சிலர். 10

அங்கலிங்கமயக்கமிதுவென
மங்கலந்தருமாமறையின்முடித்
தங்குறுந் ‡ தத்துவமசிதன்பொருள்
பங்கமின்றிப்பகர்பவரோர்சிலர். 11

பாசமேதுபசுவெனப்பட்டதே
தீசன்யார்பதியெவ்வகையாருயிர்க்
காசுதீர்வருளுமருளுடைத்
தேசிகாவெனத்தேர்பவரோர்சிலர். 12

புறந்தினஞ்செயும்பூசையினன்றெனச்
சிறந்தகஞ்செய்தியானமருவிமெய்ம்
மறந்திருந்தமனஞ்சிவலிங்கமுற்
றிறந்தீடுந்திறமெய்தினரோர்சிலர். 13

ஓடிமீளுமுயிர்நின்றிடாதெனி
னீடுமோமனநிற்பதன்றுதலால்
வீடுமேவரிதென்றுவிதிமுறை
நாடிவாயுநலிபவரோர்சிலர். 14

---

* சுடர் - தீபம். † தாசி - மூற்செல்லும்படை. ‡ தத்துவமசி என்னும் மகாவாக்கியம் ஆனது ஜீவன் மலவலியினின்றும் நீங்கிப் பிரமமாகிய சிவத்தோடு இரண்டறக்கலக்கும் அத்துவிதவுண்மை யை விளக்குமென்க.

இனையராகியிருந்தவக்காலையி
லனையனுகியவல்லமன்றன்னிடை
நினைவெலாமுறநின்றுதமதிடை
மனமிலாதவசவனைக்கண்டனர். 15

வேறு.

பெரியவர்சிறியவரென்னும்பெற்றிமை
யரவணிகடவுளனடியர்தம்மூலே
தெரிபவனெவனவன்சிறியனேயென
விரிவுறுமறையெலாம்விளம்புமென்பவே. 16

* ஆவுரித்திடினுநீறணியுமன்பனம்
மாவுரித்தவனெனவணங்கத்தக்கவன்
பூவுரித்தவன்பதம்புனையப்போற்றுற
நாவுரித்தெனமறைநான்குமோதுமால். 17

வந்தவர்வருபவர்வருகின்றார்களோ
மந்தமிலடியர்மாட்டாற்றுஞ்செய்கையைச்
சிந்தனைசெய்கிலன்றேசிகன்செயு
மிந்திரசாலமுற்றிருந்துநந்தியே. 18

பத்தியிற்றவரிஞென்பாலிருந்துநாந்
தெய்த்துடற்சுமப்பதிற்றுறத்தனன்றென
மெய்த்தவக்குழாமெலாம்வெகுண்டுபோயின
வத்தனற்றண்டநாயகனைவிட்டரோ. 19

தன்றியமெய்த்தவர்துறந்துபோயபின்
மன்றல்செய்மற்றைநாண்மனையையொத்தொரு
தன்றனிநற்புரந்தனிப்பக்கண்டன
னன்றதிநற்செயனந்திதேவனே. 20

வழுவினன்புசெய்வழியையின்றுநான்
குழுவுறுமடியவர்க்குறித்துசெய்தவிவ்
வொழிவறுமடிசிலுண்டொழிந்திடாதுதீர்ந்
தழிவுறுமேயெனவகந்தளர்ந்தனன். 21

* "ஆவுரித்துத் தின்றழலும் புலையரேனுங்-கங்கைவார்சடைக்
கரந்தாற்கன்பராகி லவர்கண்டீர் நாம்வணங்குங்கடவுளாரே" என்ற
தேவாரத்தின் கருத்தைப் போற்றினர்.

சங்கமபத்திசெய்தண்டநாதனே
சங்கமபத்திசெய்தகைமைபூண்டுநான்
சங்கமபத்தியிற்றவறினேனெனற்றூற்
சங்கமபத்திசெய்தன்மையெண்மையோ. 22

இழப்பினும்வெறுப்பினுமில்லினுள்ளன
வழப்பினுமூடம்பினையரிந்துகொல்லினும்
பழிப்பறுசங்கமபத்திசெய்பவ
னெழிப்பதுபிறவியென் * றுலகமோதுமே. 23

இம்முறைசங்கமபத்தியெய்திய
வெம்முடைநந்திதனெண்ணமுற்றுற
வம்மடையடிசிலுண்டமலன்மாதவர்
தம்முறுபசியெலாந்தணிப்பவுன்னினன். 24

ஒருவன்யான்சிறுபசியுடையன்சிற்றுண
விரைவுறவிடுதிநீவேண்டுமாறுபின்
பரிவுளவடியவர்பாற்செயென்றனன்
பொருவறுவசவனேநோக்கிப்போதகன். 25

ஐயனுமுனிவுறுதருளும்வண்ணம்யான்
செய்யுநல்வினையெனமகிழ்ந்துதேவனைப்
பையவுன்மனையிடைப்பணிந்துகொண்டுபோய்ப்
பெய்யுமென்மலர்மணிப்பீடத்தேற்றினன். 26

ஏற்றியவருள்வசவேசனெம்பிரான்
காற்றுணைமலர்களைக்கந்தமஞ்சன
நாற்றமென்மலர்நறும்புகைவிளக்கெனப்
போற்றியவிவைகொடுபூசைசெய்தனன். 27

பூசனைசெய்தபின்போற்றிநின்றுபொற்
பாசனமமைத்துமென்பதம்படைத்துமேல்
யோசனைகைகமழ்கறியுமொள்ளிய
போசனமுறையிடப்புரிந்துநந்தியே. 28

அருந்துகவெனவடிதொழலுமக்கலந்
திருந்தியவமுதளோரவீழுஞ்சேடியா
தருந்தினனெரிமைப்போதினல்லமன்
பொருந்தியவவரிறும்பூதராகவே. 29

---

* "உலகமென்பதுயர்ந்தோர் மாட்டே - கிகழ்ச்சியவர் கட்டாகலான" என்னுஞ் சூத்திரத்தால் உயர்ந்தோர்மேற்று.

பின்னருமம்முறைபெய்யவையனவ்
வன்னமுமம்முறையருந்திப்பின்னரும்
பின்னருமம்முறைபெய்யவுண்டனன்
றன்னுளம்வியந்தனன்றண்டநாயகன். 30

சிறுச்சிறிதனமிடுஞ்செய்கையாலரு
ளிறைக்கெழிலுதரவெங்நெருப்பெழுந்ததால்
விறற்கனலம்முறைவிறகிடக்கனன்
றுறப்பெரிதெனவெழுந்தோங்கல்போலவே. 31

எண்ணியவெண்ணியாங்கியற்றுமேவல
ரண்ணலும்வருகெனவழைத்தநம்மனைப்
பண்ணியபதமெலாம்படைமினென்றலுந்
தண்ணெனவனமிடுந்தொழிறொடங்கினர். 32

வேறு.

அளவறுமடியர்க்கெல்லாமாக்கியவடிசிற்குன்றங்
கொளவுறுகூடையோடுகூடைகடாக்கக்கொண்டு
வளமுறுகயிலைக்குன்றம்பெயர்த்திவண்வைத்ததென்னத்
தளவுறழடிசிலெங்கடம்பிரானெதிர்குவித்தார். 33

பருப்பொருபொருப்பெனத்தாம்படைத்தனர்சிலரெடுத்து
விரைப்புதுநெய்கவிழ்த்துவிடுத்தனர்சிலர்மணக்கும்
பொரிக்கறிபளிதம்பாகுபுளிங்கறிபலவுமெல்லா
நிரைத்தொருசிலர்சொரிந்துநின்றனர்முகில்கள்போல. 34

வடைபடுதிகிரியாகமாங்கனிகவண்கல்லாக
வுடைபடுகழைக்கரும்பங்கொண்கதையாகக்கொண்டு
கடைபடுமுலகிற்கெல்லாங்காரியகருத்தன்முன்னர்ப்
படைபடையெனச்சொரிந்தார்படைமுகத்தினாளுர்போல. 35

குளங்கரையாகவந்தக்குளத்தினுட்பசுவின்றீம்பால்
விளங்குறுமமுதவேலைவிடுத்தெனவிட்டார்சில்லோ
ருளங்கனி * மூவர்செய்யுளொத்த ‡ முக்கனியுமேனோர்
வளங்கெழுதொடர்புபோலுமற்றைய $ பழமுந்தூர்த்தார். 36

மூவர்செய்யுள் என்றது - திருஞான சம்பந்தநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும்இவர்செய்தருளிய தமிழ்வேதத்தை, எனோர் தொடர்பு என்றது மற்றைய திருமுறைகளை. ‡ முக்கனியாவன:—வாழை, பலா மா, $ மற்றையபழம்:--முக்கிரி, சீவாட்சி, பேரீச்சங்கனி முதலியன.

எண்ணிலரிடவெல்லாமினியனவின்னுவென்னுண்
கண்ணிமையொடுங்குமுன்னர்க்கடிதயின்றுதவுமல்
வண்ணமென்மலர்க்கைவாங்கிவறிதிருந்தனனெங்கோன்றேர்ப்
பண்ணவன்பரிக்குமேடுபள்ளமென்பனவங்குண்டோ. 37

சற்றினுமுண்கவென்றுதமருபசரியாவண்ணஞ்
சற்றினுமிடுகவென்றுதம்பிரானுண்ணுகின்றான்
மற்றிதுகண்டுநின்றோர்மட்கலமொழியவேறு
பற்றிலையென்றுநந்திருமுகம்பார்த்துச்சொன்னார். 38

உண்விளையாடல்செய்யுமொருவனைக்கண்டுவேன்மேற்
கண்விளையாடுநெற்றிக்கடவுண்மெய்யடியாரெல்லாம்
விண்விளையாடுஞ்சோலையனகரிடத்திற்செல்வப்
பெண்விளையாடுந்தம்மிற் * பேரனமிடுதற்கெண்ணி. 39

பாண்டின்மேலேற்றிவந்தும்பானையிற்சுமந்துவந்தும்
வேண்டியபாகமூற்றுவேறுவேறுயவன்ன
மாண்டகைக்குரவனுண்ணவளவிலர்சொரிந்துயர்த்தா
ரூண்டழல்வெறுக்கும்வண்ணமூட்டுவமென்பார்போல. 40

மலையெனவமலஞானவாரிமுன்சொரிந்துயர்ப்பா
ரிலைமலர்பசுங்காய்கந்தமிளஞ்செழுந்தண்டாற்செய்த
வுலையமைபல்காயம்பெயொண்கறியமுதுவேறு
பலபலமுறைமயங்கப்படைப்பர்வல்விரைந்துவந்து. 41

† குய்கமழ்கறிகளிட்டுக்குவிப்பவர்சிலரெடுத்து
நெய்கவிழ்கையராகிநிற்பவர்சிலர்நிரம்பப்
பெய்கவிழ்சொரியென்றுன்பால்பெய்பவர்சிலரனேந்த
கைகமழ்தயிர்க்குடத்தாற்கவிழ்ப்பவர்சிலரங்கம்மா. 42

இட்டவர்மறியவன்னமிடுதற்குவிரைந்துசெல்வார்
மூட்டுவரெதிர்நடந்துமூரல்கைவாங்கிவாங்கிக்
கொட்டுவரடிசிறந்தகூடைகள்கவிழ்த்தெறிந்து
தட்டுவரனம்படைக்குந்தம்பிரானடியரன்றே. 43

இன்னணம்படைத்தவெல்லாமிமைப்பினிலையின்றுசைவ
மன்னவன்வயிற்றுவெந்தீவளர்த்தினிர்மீயிரெல்லா
மென்னநல்வசவதேவனிருந்தபல் ‡ பண்டங்கொண்டு
முன்னவன்பசியையாற்றமுன்னிமற்றதனைச்செய்தான். 44

* போனகமிடு தற்கெண்ணியெனப் பாடமுமுண்டு. † குய்-தாளிதம். ‡ பண்டம் - அரும்பொருள்.

அவரையும்பயறுமெள்ளுமரிசியுமவலுங்கொள்ளுந்
துவரையுங்கடலையுஞ்சென்சோளமுநெல்லும்புள்ளுங்
குவரையுங்கயிலையும்பொற்குன்றமும்போலஞாலத்
தெவரையுங்களிப்புச்செய்யவெங்கணுங்குவிப்பித்தாஞல். 45

* குன்றெனக்குவித்தவெல்லாங்கொள்ளெனக்கொண்டுநம்பன்
மென்றரைக்கணத்துளின்னுமெவ்வணைகொணர்மினென்ன
வன்றிறற்றண்டநாதன்மனத்தினுலவையயற்றி
நின்றிடத்தம்பிரானுநினைவினுலவையயின்றன். 46

நோக்கினுலளித்தவெல்லாநோக்கினுற்றெலைத்தானந்தி
வாக்கினுலளித்தவெல்லாம்வாக்கினுல்வள்ளலுண்டு
போக்கினுனிதலுண்ணலென்னுமிப்போரின்கண்ணே
தூக்கினுலிருவர்தாமுந்தோல்வியுற்றுடைந்தாரில்லை. 47

படைத்திடுந்தொழின்முயன்றபத்தனதியல்புமன்ன
துடைத்திடுந்தொழிலினின்றதாயவனியலுநோக்கி
யடுத்தநற்பத்தரெல்லாமனையவரிருவர்சீரு
மெடுத்துரைத்துளம்வியப்புற்றிறைஞ்சினரொருங்குமாதோ. 48

இடுதற்குவல்லானந்தியிடும்பொருளெவற்றையுங்கை
தொடுதற்குவல்லானிந்தத்தாயவனென்பரிவ்வா
றிடுதற்குவல்லாரில்லையென்பரிவ்வாறுநாங்கை
தொடுதற்குவல்லார்தம்மைச்சொல்லவுங்கேளுமென்பார். 49

கண்ணப்பனன்பினுனேகறியெனவமைத்தவுனை
யுண்ணப்பனுனின்வேறுமுயிருணின்றமைவனென்று
வண்ணப்பொன்னனையசென்னவசவதேசிகன்வணங்கி
விண்ணப்பஞ்செய்தான்றுங்கவிடைமுகங்கரந்தாளுடி. 50

வேறு.

சென்னவசவன்சொல்லியவச்செயலேசெய்யுஞ்செயலென்று
மன்னுமருளின்மடிவாலமாச்சிதேவன்வந்துரைப்ப
வென்னையுடையானும்மொழியேயெனதுமனதைத்தேற்றமது
பின்னையுளதோ ‡ கதகமலாற்பெருநீர்தெளித்தற்கென்றுரைத்து.()

---

* இங்ஙனமே விநாயகக்கடவுளும், நாமேபிரமமென் றகங்கரித்த சனகனிடம்அந்தணவடிவங்கொண்டுசென்று, அவனிடவித்தவுணவுகளே யெல்லாமுண்டுவறியனுக்கி அவன் பிரமையை யொழித்தாரெனப்பார்க்கவு புராணங்கூறிற்று. ‡ கதகம் - தேற்றாங்கொட்டை.

பொறிகள்காரணம்பூதங்கள்புலன்கண்மற்றும்பல்வகைய
கறிகளாகவாருயிரேகலந்துண் * பதமாநீயுண்ணப்
பெறுகதிலன்யானெனநின்றுபிறவிப்பிணிதீர்மருத்துவன்ற
னறியமலர்மெல்லடிபணிந்தானமையாளுடையவருணந்தி. 52

வசவனிலகண்டருண்ஞானவள்ளலல்லமப்பெயரான்
பசியின்வந்தேதனலன்பொருட்குப்படர்காமக்குவந்திலன்யான்
கசியுநினதுமனத்தன்புகாணவந்தேனென்றேறத்தி
யிசையின்மலியுமரனடியார்யாருமகிழவெடுத்தணைத்தான். 53

கண்போலுயிர்கள்கண்டறியக்கதிர்போற்காட்டும்பெருமானே
யுண்போன்யானுவுட்டுமுனக்கூட்டுவேனென்றெழுந்தமையா
லெண்போதென்போற்பேதைமையாரில்லையில்லையென்றனன்பின்
பண்போடமலனெதிர்நின்றுன்பத்திவடிவமாயினன். 54

செம்மைநெறியானருணந்திதேவன்றன்னேப்புகழ்வமோ
பொய்ம்மைதீருமல்லமனேப்புகழ்வமோவிங்கன்றியிவர்
தம்மைவிழியாற்காண்பதற்குத்தவஞ்செய்துடலமிதுபெற்ற
வெம்மையாமேபுகழ்வமோவெனநின்றனர் † தம்பிரானடியார். 55

பரிந்தநந்திமுகநோக்கிப்பசித்தாரென்றுநீளரப்
பிரிந்தவந்தவடியர்தமைப்பிறங்கலனையநின்மாடத்
தருந்தவணங்கிக்கொணர்தியெனவதிவானந்தமயன்கூற [ல்.
விரைந்துவிடைகொண்டெழுந் ‡ தன்புவெள்ளஞ்சென்றதவரிடத்தி

சென்றவசவனருட்குரவன்றிருமேனியிற்றுணங்கணிந்த
மன்றன்மலருஞ்சந்தனமும்வடிவிற்றிகழடிநிமிர்ந்து
தின்றன்முதலகறிமணக்கத்தேக்குவிடுத்தருகமலர்ந்து
கொன்றைகமழ்வேணயனடியார்குழாங்களிருப்பக்கண்டனஞல். 57

கண்டநந்தியடிபணிந்துகடையேன்செய்தபிழையெல்லா
முண்டுபொறுமின்வருகவெனவுள்ளங்களிப்புற்றுருங்கிருந்த
தொண்டர்வசவனின்பெருமைசொல்லவெளிதோவையிரூரப்
பண்டுபோலவாய்கைதொழிற்படாமலயின்றேயின்றென்று. 58

தேவருண்ணவலியுணவுசெந்தீமுகத்திலிடுதல்போ
லோவில்யாங்களெல்லேமுமுண்ணவடிசிலல்லமன்ற
ஞவின்மருவவிடுதியோர்நாவோபுகழுந்தரத்ததென
வாவியனையநந்திசீரமலனடியார்புகன்றேறத்தி. 59

---

* பதம் - சோறு. † தம்பிரான் - சிவன் ‡ அன்பு வெள்ளம்- அன்மொழித்தொகையாய் நந்தியை யுணர்த்திற்று.

உலகிலொருவன்சிவயோகியுண்ட * தம்மசாசரமா
மலகிலுயிர்களெலாமுண்டதாகுமென்னமறைகூறு
மிலகுமுரையைக்காட்சியானின் றுங்குணரவுணர்த்தினுன்
கலகவினைகடீர்க்குமருட்கண்ணன்றிகழல்லமதேவன். 60

ஆதலாலவ்வல்லமனையருத்தலெம்மையெலாமருத்தல்
பாதமவனைப்பணிதலெமைப்பணிதலாகுமெஞ்ஞான்றும்
பேதமில்லைநல்வசவப்பெயரோய்செல்கவென்னமலை
மாதுமுவக்குழைந்ததோள்வள்ளலடியார்தமைவணங்கி. 61

மீண்டுநெந்தியல்லமனூர்மென்பூங்கமலவடியிறைஞ்சி
யாண்டபெருமானடியார்களன்னையுண்டவுணவுகரு
வீண்டுமகவுமுண்ணல்போலெந்தையுண்டவெலாமுண்டு
பூண்டமகிழ்வோடிருந்தனர்நீ புனைந்தமலரும்புனைந்தென்றன். 62

மாறனடித்தவடிபட்டமன்னுமுயிரின்றிறமெல்லா
மீறில்புகழ்கங்கணவசவனிட்டவடிசிலுண்டபசி
யாறியிருந்தவாதலினுலல்லமன்பூரணனென்னக்
கூறுமொழிமெய்மெய்யென்றுகூறியுலகங்களித்ததால். 63

இவ்வாறருந்தியமைதிபெறுமெங்கள் † பரமயோகிதான்
றெவ்வாகியவைம்புலன்வென்றதிறல்கூர்வசவன்றனைமகிழ்ந்து
‡ சைவாகமமுநான்மறையுஞ்சாற்றும்பொருளுணர்த்துதற்குச்
செவ்வாய்மலரத்திருவுள்ளஞ்செய்ததனிவீற்றிருந்தனனுல். 64

இருபத்துமூன்றுவது,

ஆரோகணகதி

முற்றிற்று.

கதி-உங-க்கு திருவிருத்தம்-கஙகக.

---

* அம்ம - வியப்பிடைச்சொல். சரம் - சஞ்சரிப்பன, இயங்குதினைப்பொருள். அசரம்-சஞ்சரித்த லில்லாதன, நிலத்திணைப்பொருள். † பரம்யோகி - ஞானயோகமுடையவன். ‡ ''வேதமொடாகமமொய்யாமிறைவனு லோதும்பொதுவுஞ் சிறப்புமென்றுனுகநாதனுரையினைநாடிலிரண்டந்தம்-பேதமதென்னிற் பெரியோர்க்கபேதமே'' என்ற திருமந்திரச்செய்யுளா லிரண்டு மொருபொருளனவென்க.

சிவமயம்.

இருபத்துநான்காவது,

மனோலயகதி.

வேறு.

மயங்குதலின்றி மனோலயமெய்திற்
சயந்தருமுத்திதலைப்படுமென்று
நயந்தருமல்லமகாதன்விளங்க
வியம்பியவண்ணமியம்புதுமன்றே. 1

பத்தர்கடங்கள்பசிக்குணுமையன்
றத்துவநல்குகருத்தொடுதங்க
வத்தலையன்பொடகங்குழைகின்ற
வித்தகனந்திவிளம்புவனன்றே. 2

விருப்புவெறுப்புருவாம்விடயத்தோ
டிருக்குமயற்சகமென்பதிலாமற்
பரப்பிரமத்தியல்பார்ப்பதெனக்குத்
தெரித்தருளென்றுரைசெய்துதித்தான். 3

அண்ணலுமார்வமடைந்தருணந்தி
மண்ணுலகோர்தனமாறுபுஞானக்
கண்ணுறுமாறுகடாவினனென்று
புண்ணியனோடுபுகன்றிடுகின்றான். 4

* யானெனதென்பதிருந்திடுகாறு
ஞானமுருணதுணர்ணிலனுகிற்
றூனிலயாதசகந்திகழ்கிற்குந்
† தீனமிலாதசிவந்திகழாதே. 5

கறங்கெனுமாறுழல்கின்றகருத்துப்
பிறந்திறவாதபெரும்பிரமத்தி
னிறந்திடில்யானெனதென்னுமகந்தை
மறைந்திடுமென்றி ‡ மறைந்திடுமோதான். 6

யானிதுசெய்வலெனக்கிதுசெய்வ
ரேனையரென்னவிருந்தகருத்தான்
மேனிகழ்முத்திவிரும்பலிருட்டாற்
பானுவைமேவுறுபற்றைநிகர்க்கும். 7

இருவினைதாம்வரும்யானெனலாலவ்
விருவினையால்வருமின்பொடுதுன்ப

---

* யான் என்பது - அகங்காரம். எனதென்பது - மமகாரம். † தீனம். வறுமை. ‡ மறைந்திடுமோ - அழியுமோ. எனவே முத்தியிலும் மும்முதலு முண்டென்றதாம்.

மிருவினையானெனலின் றெனிலில்லை
யிருவினையில்லெனிலில்லைபிறப்பே. 8

மனத்தையடக்கமனந்தானேயாகும்
பினைத்தானேயின்றதுபெற்றனலுயிர்
றனிச்சிவமேயொருதானெனவாழ்வ
னினைத்தமறந்தநிலத்தழலானே. 9

* வாரணமாகுமனத்தையடக்கிற்
காரணமாயைகளேந்தொழியாத
பூரணமாகியபோதமடைந்திட்
டாரணமோதுமரும்பொருளாவான். 10

வேறு.

விரிந்தநெஞ்சங்கருவியாம்விடயமுணரவிரியாம
லொருங்குநெஞ்சங்கருவியாந்தன்னையுணரவொருங்காமல்
விரிந்தநெஞ்சமுடையவனேவிடாதுபிறவியென்றுணர்க
வொருங்குநெஞ்சமுடையானேபுரிதுபிறப்பென்றுணர்கவே. 11

அந்தக்கரணசுத்தியேயறிவையறிதற்சாதனமவ்
வந்தக்கரணசுத்திதனக்கறையுங்கருமமாரணங்க
ளந்தக்கரணசுத்திதானுவதவாவற்றிதேலே
யந்தக்கரணசுத்தியினுலடைவன்பிண்டப்பெயரன்றே. 12

ஆசையறுதல்வீட்டின்பநேரேயடைக்காரணமா
மாசையறுதலதனில்லைப்பலநூலானேத்துமாய்ந்திடினு
மாசையறுவோன்சிவனுதிண்ணமெனனன்றறிந்திருந்து
மாசையுறுதலென்கொண்டோவந்தோமனிதரறியேமே. 13

ஆசுதீர்ந்தமனத்தினிடையன்றியுணர்வுதோன்றுது
மாசுதீர்ந்தவாடியிடையன்றிவதனந்தோன்றுமோ
பாசநீங்குபரஞ்சுடரைநினைக்குநினைவாற்பற்றுமனங்
† காசநீங்குகண்போலத்தன்னைக்காணவிளங்குமால். 14

வானமல்லேன்வளியல்லேனழலுநீரல்லேன்மண்ணல்லேன்
ஞானமல்லேன்வினையல்லேனுனைசிவமென்றெண்ணினேனு
ணானமில்லாவொருசிவமேயாவனிவ்வாறுன்னுதா
னீனமெல்லாமுடையவுடம்பெடுத்துச்சுழலுமெஞ்ஞான்றும். 15

* வாரணம்-யானை. † காசம் - கண்ணைமறைக்கும் ஓர்வியாதி.

தன்னேச்சிவமென் றறிந்தவனேயறிந்தான் றன்னேயுண்மையார்த்
தன்னேச்சிவமென் றறியாதான்றியானென் றுந்தன னுண்மை
* தன்னேச்சிவமென் றறிந்தவன்றேதாழ்வாம்பாசந்தனேநீப்பன்
றன்னேச்சிவமென் றறியாதான் றனக்குப்பிறப்பேதுணையாகும். 16

தன்னேப்பேதமாய்க்காண்கைசகத்திற்காணப்பட்டதாந்
தன்னேப்பேதமறச்சிவமென் றறிவோன்ஞானிதானெருவ
னென்னக்கருதிமறையதுநீயாலுயென்ன † வத்துவிதந்
தன்னேப்புகலுங்கண்டதனேச்சாற்றன்மறையின்கருத்தன்றே. 17

தூய்தாகியநெஞ்சுடையார்க்குத்தாமேசிவமாத்தோன்றுமாற்
றீதாகியநெஞ்சுடையார்க்குத்தெளியவ்பேதமிகலின்றீ
வேதாகமங்கள்விளம்பிடினும்விளங்காதென்றும்வேறென்னும்
வாதாலழிவரவர்மாயையமக்கமயங்குமதியினர். 18

நெஞ்சஞ்சோகம்பாவனையினிற்கநிறுத்திவிடயங்க
ளஞ்சுந்துறவாத்துறந்தசிவயோகியொருவனடியினையிற்
றுஞ்சுந்திருமான்முதலமரருள்ளமவனேத்துதித்திறைஞ்சா
தெஞ்சுந்தவமாமுனிவரிலேயென நான்மறையுமியம்புமால். 19

என்றுகருணைபொழிவிழியெங்கோமானுண்மையினியம்ப
நின்றவசவராயனுளமழல்சேர்மெழுகினைக்குருகிச்
சென்றுகுரவனடிபணிந்தான்சென்னவசவன்முதலாகத்
துன்றுசரணருய்ந்தனம்யாமென்றுதுதித்துத்தொழுதனரால். 20

இவ்வாறருளாற்றனேயுணர்த்தியிருந்தஞானவியல்வீர
சைவாசிரியனல்லமனித்தரையிற்பருவந்நிலேசிறப்ப
வுய்வானினேந்துதனேநோக்கியுற்றவடியார்க்குபதேசஞ் [ன்.
செய்வானியன்றவடிவொடுசென்றருள்செய்செயல்செய்துலாவினு

இருபத்துநான்காவது,
மலேலயகதி
முற்றிற்று.
கதி-உச-க்கு திருவிருத்தம்-கஙஉ.

---

* தன்னேச் சிவமென்றென் றறிவனன்றேபாசந்தனே நீப்பன் எனவும் பாடம். † அத்துவிதத்தி னிலக்கணத்தை "பண்ணேயுமோசையும்போல" என்னும் சிவஞானபோதச் சூத்திரவெண்பாவிற்கு மாதவப்பெருந்தகைச் சிவஞானயோகிகள் உரைத்த மாபாடியத்திற் கண்டு உண்மைகடைப் பிடிக்க.

சிவமயம்.

இருபத்தைந்தாவது,

மான்மியகதி.

வேறு.

வியனிலமேவியவிழுமியோர்க்கெலாஞ்
செயிரறுமல்லமன்செய்தநன்றியைக்
கயிலையினுதல்விழிக்கடவுடன்புடை
மயிலியலொடுசொலுமாறுகூறுவாம். 1

ஆயிடையருணந்தியாதிமாதவர்
நேயமோடமர்வுறநிறுவியல்லமன்
மாயிருஞாலமேன்மானிடர்க்கெலாம்
போயருள்செயுந்தொழில்பூண்டுளானரோ. 2

இன்னணமல்லமனிருநிலத்துறத்
தன்னிகர்கயிலையிற்சிங்கந்தாங்கிய
பொன்னணிமிசையமர்புராரிதன்னொடு
மின்னணிமுலையுமைவீளம்பன்மேயினள். 3

அல்லமனருள்பெறற்கடைந்தநந்தியோ
டெல்லையினின்கணமெனதுநற்கலை
மெல்லியனிலமிசைமேவிச்செய்ததென்
* சொல்லுதியெனவுமையிறைவன்சொல்லினன். 4

நந்திநல்லவனுநாமங்கொண்டமர்ந்
தந்தமிலெம்மடியவரையாமெனப்
புந்திசெய்தவர்லிழைபொருளளித்தமண்
சிந்தியகிலமிசைச்சிறப்புற்றனரோ. 5

அறஞ்செயுஞ்சின்கலையாகுமங்கைபோய்ச்
சிறந்தவுலகின்மாதேவிப்பேர் † பெறீஇ
மறஞ்செயுமதன்வலிமாளமாய்த்தெலாந்
துறந்தனள்குரவனேத்துருவிப்போயினள் 6

---

* சொல்லுதியெனவுமை யென்பதற்கு சொல்லுவாயென்று வுமையவள் கேட்கவென்றுரை கொள்வது சிறப்பு. † பெறீஇ- சொல்லிசையளபெடை பெற்று என்பது பொருள்.

கண்ணியநங்கண நாதர்தாமுழக்
கண்ணகன்ஞாலமுறறெம்மைக்காணிய
வண்ணநல்வீனைகள்பல்வனிகபுரிந்தவ
ரெண்ணியபலங்களிடத்துவைகினர். 7

அளக்கரும்விரதாயவரிருந்திடத்
துளக்கமினிலையுடைத்தானல்லமன்
கொளக்குறைபடாதபேரின்பங்கூட்டுண
வீளக்கினனுலகினில்வீரசைவமே. 8

வேறு.

ஏவ்வகைச்சமையத்திற்குறிறைவனேயெனினுநேயஞ்
சைவநற்சமயத்துற்றுன்சைவத்தும்வீரசைவத்
தவ்வவர்பிறவிநீக்குமல்லமன்விருப்பமுள்ளான்
மைவரிக்கயனெடுங்கண்மடவராலென்றுன்வள்ளல். 9

* சமையமெவ்வகையினுந்தான்சைவமேலாயதென்கொ
லமையுநல்வீரசைவமதனினுஞ்சிறந்ததென்கொ
லிமையவர்பரவுமுக்கணெம்பிரானருள்செய்யென்ன
வுமையவள்வினவவேழமுரித்தவன்விளம்புமன்றே. 10

உரைக்குமெச்சமயத்திற்குமுத்தரபாகஞ்சைவந்
தரிக்குமச்சைவத்திற்குத்தாமெனவீரசைவந்
தெரிக்குநற் † காமிகாதிசிரத்தினிற்றிகழுங்கண்டா
யரிக்குரற்சிலம்பரற்றுமடிமலர்த்தடங்கணல்லாய். 11

‡ புறந்தருசமயம்புக்குப்புறமலாச்சமயத்தெய்தி
யறந்திகழ்சைவமுற்றுங்கதிற்சரிதாதியாற்றிச்
சிறந்தவீரசைவஞ்சேர்ந்தபின்வீடுநெண்ணு
நறுந்தளிர்கவற்றுமேனிநாணமலர்வல்லியன்னாய். 12

அருமறைமுடியுஞ்சீர்சாலாகமமுடியுமொத்துப்
பொருமறமிலாமன்முற்றும்பொருளினைவிளங்கக்காட்டித்
தருமுறையதனுல்வீரசைவமேதலைமைத்தாமிவ்
விருமறுவறுநன்னூலுமிதிற்பிரமாணமாகும். 13

---

* சமயங்களாவன - புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயம், அகச்சமயம் என்பன. † காமிகாதி - காமிகம்முதலாய இருபத்தெட்டுச் சிவாகமங்கள். ‡ இச்செய்யுள் "புறச்சமயநெறி நின்று மகச்சமயம் புக்கும்" என்னும் சிவஞானசித்தியார்த் திருவிருத்தத்தின்கருத்தென்க.

ஒன்றொருவிடயந்தன்னி லுறுசுவைநிறைவென்றுக்கி
யென்றுமெம்முகத்தளித்திட் டெம்பிரசாதங்கொண்டு
அன்றுறுகருமமுன்னுத் தூய்மையிவ்வீரசைவத்
தன்றிவேறொருமார்க்கத்தி னடுக்குமோவடுக்கண்மாதே. 14

ஆதலால்வீரசைவத் தறிவினையறியச்செய்தான்
மாதர்மாதேவியாமுன் வண்கலமாதினுக்கு
மேதையாம்வசவனுதி மெய்யடியவர்க்குஞான
போதகாசிரியனென்னும் பொருவிலல்லமன்வேற்கண்ணுய். 15

பருவபேதத்தாற்பேதப் படும்பொருள்பருவங்கண்டு
திருவின்மாமுனிவர்யோகர் சித்தர்கண்முதலாஞர்க்குப்
பொருவிலாவல்லமப்பேர் புண்ணியன்புகன்றுட்கொண்டான்
குரவவார்குழன்மடந்தா யென்றனன்குன்றவில்லி. 16

அம்மையுண்மகிழ்வுபொங்க வல்லமன்பெருமைகேளா
மம்மர்செய்துளங்கலக்கு மாயையைக்கடந்தானென்றன்
மெய்ம்மைநின்பவளவாயால் விளம்பனானறிந்தெனென்று
மும்மதில்வலிதொலைத்த முக்கணையகனைத்தாழ்ந்தாள். 17

அங்குமைமாதினோடு மல்லமன்பெருமைகூறித்
திங்கள்வெண்முகிழ்புனைந்த செஞ்சடைப்பரமன்மேவ
விங்கருண்மேகமென்னு மிணையிலெங்குருகுகேசன்
மங்கலமுத்தியின்பம் வழங்குமத்தொழிலினின்றுன். 18

மூத்தவரிளஞர்நோயர் முகிழ்முலைமாதர்நல்ல
தீர்த்தொழிலாளர்பொல்லாத் தீத்தொழிலாளரென்றும்
பார்த்திலன்யாவர்மாட்டும் பரிந்தருண்மாரிபெய்து
கார்த்தனமலஞான காரணன்குருகுகேசன். 19

இன்னவாறருளினனே யிவருறவிவர்வேறென்னு
தன்னைபோலுயிர்கட்கெல்லா மாருளொருங்குசெய்தே
யென்னையாளெனக்கொண்டாளு மிணையடிக்குருகுகேசன்
மன்னுமாதவர்கணெஞ்ச மலர்தொறும்வாழாகின்றுன். 20

எல்லொளியிரவிபோல விருண்மலமிரித்திலங்கு
மல்லமன்சரிதமோதி லறம்பொருளின்பம்வீடாம்
கல்லனபயனேர்நான்கு நண்ணுவனிதனைக்கேட்க
வல்லநல்வினையினு மற்றவைமருவிவாழ்வன். 21

மதியிலார்மதிஞரோவர் மகவிலார்மகவுயிர்ப்பர்
நிதியிலார்நிதிபடைப்பர் நிலையிலார்நிலைத்துவாழ்வர்

கதியிலார்பதிகிடைப்பர் பழுதிலிவ்விருபத்தைந்து
கதியினுனிரம்புகாதை கற்றவர்கூறக்கேட்பின். 22

நூல்செய்த காலம்.

பார்கெழுசகாத்த * மூவைஞ் ஞூற்றெழுபானுன்காவ
தாகியகராமங்கொ ளாண்டுறுவிடைஞாயிற்றிற்
சீர்கெழுமல்லமன்றன் றிருவீரேயாடற்காதை
கார்கெழுமிடற்றெங்கோமான் கருணைகொண்டியம்பினனே. 23

மாசறுமல்லமப்பேர் வள்ளறன்சரிதந்தன்னி
னுசறுஞ்செய்யுளெல்லா மன்புடன்படிப்பார்தம்மை
யேசறுமனிதரென்ன விசைப்பதோகரித்தோல்போர்த்த
வீசனென்பதுவேயன்றி யேதுமற்றேதுவம்மா. 24

வாழ்த்து.

புண்ணியருலகில்வாழ்க புலஞ்செறுநோன்புவாழ்க
பெண்ணெருபாகன்பூசை பேணிவாழடியர்வாழ்க
கண்ணுதலொருவன்சார்ந்த † கற்புடைச்சைவம்வாழ்க
வண்ணலல்லமன்சீர்கேட்கு மாதரவாளர்வாழ்க. 25

பொருவரும்பூதிவாழ்க பூதியையணிவோர்வாழ்க
திருவளர்கண்டிவாழ்க சிறந்தவஞ்செழுத்தும்வாழ்க
குருவருள்வாழ்கமெய்யைக் கூறுநாவோர்கள்வாழ்க
வெருவரும்பிறவிதீர்க்கும் வித்தகர்வாழ்கவாழ்க. 26

அல்லமன்சரிதச்செய்யு ளதனிலோர்செய்யுள்கற்க
வல்லவரருத்தமோத வல்லவர்வரையவல்லோர்
செல்வமீதென்னவன்பாற் செவிப்புலனிறைக்கவல்லோ
ரெல்லவரும்பூமிமீதி லென்றும்வாழ்ந்திடுகவன்றே. 27

இருபத்தைந்தாவது,

மான்மியகதி

முற்றிற்று.

ஆக கதி-உரு-க்கு திருவிருத்தம்-ககருக.

பிரபுலிங்கலீலை முற்றிற்று.

---

* சாலிவாகன சகாப்தம் கருஎச - ம்ஷு ஆகிய காஷு வைகாசி மாதம் இயற்றப்பட்டது. எனவே இற்றைக்கு உருஉஷு-க்கு முன் செய்தது என்க. † கற்பு - நேர்மை. சைவசித்தாந்தம் வேறொரு தெய்வத்தைப்புகழாது சிவபெருமானொருவரே பரமபதி யென்ன லான் இங்ஙனம் கூறினர்.